வரைவு

# தேசிய கல்விக் கொள்கை

## சில உள்ளீடுகள்

மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

**இந்திய அரசு**

# பொருளடக்கம்


1. முகப்புரை
2. கல்வித் துறையிலுள்ள முக்கியமான சவால்கள்
3. தொலைநோக்கு, செயல்இலக்கு, இலக்குகள் மற்றும் நோக்கங்கள்
4. கொள்கை வடிவமைப்பு

4.1 பள்ளிக்கு முந்தைய கல்வி

4.2 குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான கல்வி உரிமைகளின் பாதுகாப்பு

4.3 பள்ளிக்கல்வியில் கற்றல் பயன்கள்

4.4 பள்ளிக்கல்வி

4.5 கலைத்திட்டம் புதுப்பித்தலும் தேர்வுமுறைச் சீர்திருத்தங்களும்

4.6 உள்ளடக்கிய கல்வியும் மாணவர்கள் ஆதரவும்

4.7 படிப்பறிவும் வாழ்க்கை முழுவதும் கற்றலும்

4.8 கல்வியில் திறன்களும் பணிக்குத் தகுதியாக்கமும்

4.9 கல்வியில் ICTயின் பயன்பாடு

4.10 மேலாண்மை மற்றும் ஆசிரியர் முன்னேற்றம்

4.11 கல்வியில் மொழியும் பண்பாடும்

4.12 விரிவான கல்விமுறையின் வாயிலாகத் தன் வளர்ச்சி

4.13 பள்ளிகளின் மதிப்பாய்வும் நிருவாகமும்

4.14 உயர்கல்வியில் நிருவாகச் சீர்திருத்தங்கள்

4.15 உயர்கல்வியில் ஒழுங்குமுறை

4-16 உயர் கல்வியில் தர உறுதிப்பாடு

4.17 திறந்தநிலை மற்றும் தொலைதூரக் கற்றல் & MOOCக்கள்

4.18 கல்வியின் பன்னாட்டுமயமாதல்

4-19 உயர் கல்வியில் கற்பிக்கும் ஆசிரியர்களின் வளர்ச்சி

4.20 ஆராய்ச்சி, புதுமை காணல் மற்றும் புதிய அறிவு

4.21 கல்விக்கான நிதி ஒதுக்கீடு

5. நிறைவேற்றுதலும் கண்காணித்தலும்

# இயல்-1

## முகப்புரை

இந்தியா கல்விக்கு எப்போதுமே முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. பண்டைய இந்தியாவில் முதன்முதலில் முகிழ்த்த கல்விமுறை வேதம் சார்ந்த கல்விமுறை என்று அறியப்படுகிறது. இவ்வுலக வாழ்விலும், அதைக் கடந்த வாழ்விலும் சிறப்புற வாழ்வதற்கு தேவையான அறிவைக் கொடுத்தல் என்பதாக இல்லாமல் ஒருவர் தம்மைத் தாமே முழுமையாக உணர்ந்துகொள்வதற்கான கல்வியாக அது இருந்தது. குருகுலக் கல்விமுறை குருவிற்கும் சீடனுக்கும் இடையில் ஒரு உறவை வளர்த்தது. அது ஆசிரியரை மையப்படுத்திய ஒரு முறையாகவும், சீடர்களை மிகக் கடுமையான ஒழுக்கவிதிமுறைகளுக்கு உட்படுத்துவதாகவும் இருந்தது. சீடர்கள் அவர்களுடைய ஆசிரியர்களுக்கு மிகவும் கடப்பாடுடையவர்களாக இருந்தார்கள்.

கி.மு. 700-ஆம் ஆண்டில் தட்சசீலத்தில் உலகின் முதல் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. நாளந்தா பல்கலைக்கழகம் அல்லது நாளந்தா மகாவீரா என்று அக்காலத்தில் அறியப்பட்டிருந்த பல்கலைக்கழகம் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டு, உலகில் முதலில் நிறுவப்பட்ட சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. அதன் மிகச் சிறப்பான காலகட்டமான கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நாளந்தா பல்கலைக்கழகம் 10000 மாணவர்களையும், 2000 ஆசிரியர்களையும் கொண்டிருந்தது. மீமெய்யியல், மெய்மையியல் , சமுதாயவியல், யோகம், நான்மறைகள், புத்த தருமப் புனித நூல்கள், வெளிநாட்டுத் தத்துவங்கள் ஆகியவற்றிற்கென காட்டின சிரத்தையும் உழைப்பையும், சரிசமமாக, அறிவியல் , வானியல், மருத்துவம், அளவையியல் ஆகியவற்றிலும் காட்டுகிற கற்றலின் பல்வேறுபட்ட துறைகளைக் கொண்டதாக நாளந்தா பல்கலைக்கழகம் விளங்கியது. இனம், நாடு என்ற எல்லைகளையெல்லாம் கடந்து, நாளந்தா பல்கலைக்கழகம் சீனா,

இந்தோனேசியா, கொரியா, ஜப்பான், பெர்சியா, துருக்கி போன்ற நாடுகளிலிருந்தும் மாணவர்களையும் வல்லுநர்களையும் கவர்ந்திருந்தது.

சரக்கர், சாஸ்ருதர், ஆர்யபட்டர், பாஸ்கராச்சாரியர், சாணக்கியர், பதஞ்சலி வாத்சாயனம் இன்னும் எண்ணிலடங்கா இந்திய வல்லுநர்கள், கணிதம் வானியல், இயற்பியல், வேதியியல், மருத்துவம், அறுவை சிகிச்சை , நுண்கலைகள், பொறியியல், உற்பத்தித் தொழில்நுட்பம், கட்டிடவியலும் கட்டிடக்கலையும், கப்பல்கட்டுதலும் கப்பலைச் செலுத்துதலும், போட்டிகளும், விளையாட்டுகளும் ஆன பல்வேறு துறைகளுக்கும் உலகளாவிய அறிவு பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். விடுதலைப் போராட்டக் காலத்தில் கோகலே, ராம் மோகன் ராய், பண்டிட் மதன் மோகன் மாளவியா, மகாத்மா காந்தி போன்ற பல தலைவர்களும் இந்திய மக்களுக்கு சிறந்த கல்வி கிடைப்பதற்காகப் பாடுபட்டனர்.

விடுதலை பெற்ற காலம் தொடங்கி இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்கள் கல்வி மேம்பாட்டை முதன்மை நிலையில் வைத்தே செயல்பட்டு வருகின்றன. கல்வி பெறுவதற்கு உள்ள வழிகளை ஏற்படுத்தவும், கல்வி தொடர்பான செயல்களில் பங்கேற்கவும், கல்வித் தரத்தை மேம்படுத்த உதவும் கல்விக் கொள்களையும், செயல்திட்டங்களையும் வகுக்கும் வகையில் அவ்வப்போது இந்திய அரசு பல குழுக்களை நியமித்தது. அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த சில குழுக்களுள் பல்கலைக் கழக கல்விக்குழு ( 1948-49) உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழு ( 1952-53), கல்விக்குழு (1964-66), ஆசிரியர்களுக்கான தேசியக் குழு I, II (1983-84) ஆகியவை அடங்கும்.

கல்விக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வரையப்பட்ட கல்வியின்பாற்பட்ட தேசிய கல்விக் கொள்கை ( 1968) எல்லா நிலைகளிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துதல், அறிவியல்,

தொழில்நுட்ப வளர்ச்சி, அற, சமூக விழுமியங்களைப் பயன்படுத்துதல், கல்விக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் இடையில் உள்ள தொடர்பை மேலும் நெருங்கி வரச்செய்தல் ஆகியவைகளுக்கு அழுத்தம் கொடுத்து கல்விமுறையின் அடிப்படைக் கூறுகளில் சீர்திருத்தம் தேவை என்ற தீர்மானத்தைக் கூறுகிறது. இந்தத் தீர்மானம் தேசிய முன்னேற்றம், நாம் இந்தியர்கள், நம் பண்பாடு என்கிற ஒரு பொது எண்ணவோட்டம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றில் கல்வியின் பங்களிப்பை வலியுறுத்துகிறது. தேசிய கல்விக் கொள்கை1986 (1992ல் திருத்தப்பட்டது). ஒரு குறிப்பிட்ட படிநிலை வரை, சாதி, சமய, இட, பாலின வேறுபாடு இன்றி எல்லா மாணவர்களுக்கும் தரமான கல்வி பெறவழிவகை செய்தல் என்பதை எதிர்நோக்கி ஒரு தேசிய கல்வி முறையை வகுத்தது.

1976-ல் இயற்றப்பட்ட 42-வது அரசியலமைப்புத் திருத்தம் ஓர் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வந்தது. மாநிலங்களின் பட்டியலில் இருந்த கல்வியை, நம் நாட்டின் கூட்டரசு அமைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளும் வகையில், பொதுப்பட்டியலுக்கு மாற்றியமைத்தது. நடுவண், மாநில அரசுகள் இணையான முக்கியத்துவம் கொண்டு பங்காளர்களாக கல்விக் குறிக்கோள்களை ஒருங்கிணைந்த வகையில் முன்னெடுத்துச் செல்லல் வேண்டும் என்ற நோக்கில், கல்வியின் மேல் கொண்டுவரப்படும் எந்தவொரு கொள்கையும் துறைகளுக்கிடையிலும் அமைச்சரவைகளுக்கிடையிலும் உள்ள முழுமையான கல்விச் நடைமுறைச் செயல்பாடுகளின் இயல்பையும், மாநிலங்களால் ஆற்றப்படப் போகும் இன்றியமையாப் பங்களிப்பையும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். எனவே, இக் கொள்கை, 2013-ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட *தொடக்கநிலை குழந்தைப் பராமரிப்பும் கல்வியும் பற்றிய தேசியக் கொள்கை* (National Policy on Early Childhood Care and Education - ECCE), *தேசிய இளைஞர் கொள்கை* (National Youth Policy -

NYP), 2014, *திறன் வளர்ச்சியும் தொழில்முனைப்பும் பற்றிய கொள்கை*, 2015 (National Policy for Skill Development and Entrepreneurship) ஆகியவற்றையும், இன்னும் எண்ணிலடங்கா மாநில அளவிலான கொள்கைகளையும் கருத்தில் கொண்டுள்ளது.

1986/92-ல் தேசிய கல்விக் கொள்கை வரையப்பட்ட காலத்திலிருந்து இந்தியாவிலும், உலகில் பெருமளவிலும் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வலுவான, முன்னோக்குக் கொண்ட ஒரு கல்வி முறை தேவைப்படுகிற காலகட்டத்தை இந்திய அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சி கடந்து சென்றுகொண்டிருக்கிறது. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி வழங்குதலை அடைய அரசிலமைப்புச் சாசனரீதியாகவும், சட்டரீதியாகவும் ஆதரவளித்தது இந்தியாவில் கல்வித் துறை தொடர்பான ஒரு பெரிய வளர்ச்சியாகும். இந்திய அரசியலமைப்பில், அரசியலமைப்புச் ( 89-வது திருத்தம்) சட்டம், விதி 21 – Aயை ஏற்படுத்தியது, 6-லிருந்து 14 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி வழங்குதலை, அரசு தீர்மானிக்கிற விதத்தின்படி, சட்டரீதியான அடிப்படை உரிமையாக்குவதைக் கருதியேயாகும். இந்திய அரசியலமைப்பு விதி 21-A எதிர்நோக்கியதை நடைமுறைப்படுத்தியதான இலவச , கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் ( RTE) சட்டம், 2009, 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு குழந்தையும், தன்னுடைய தொடக்கக் கல்வி நிறைவு பெறும் வரை அருகில் உள்ள பள்ளியில் இலவச, கட்டாயக் கல்வி பெறுவதற்கு உரிமை வழங்கியுள்ளது.

கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கல்விச் செயல்பாடுகளும், கற்றல் முறையும் வகுப்பறைகளுக்குள் மட்டுமே இனி நிகழ்வன அல்ல. எனவே கல்வியின் பரப்பு முறைசார்ந்த பள்ளிக்கல்வி அல்லது உயர்கல்வி என்ற வரையறைக்குள் அடங்கா. கல்விமுறை

வகுப்பறையை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம் வாயிலாக நடப்பது என்றில்லாமல், மின்னனு, அச்சு ஊடகங்கள் மூலமாகவும், தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்கள், நூல்கள், பத்திரிகைகள் போன்றவற்றின் மூலமாகவும் நடக்கும். கற்போர் இன்று நிறுவனங்கள் அல்லாத வழிமுறைகளின் மூலம் நடப்பு அறிவைப் பெற வாய்ப்பு கொண்டுள்ளனர்.

அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள விரைவான புத்தறிவின் உருவாக்கமும் பயனாக்கமும், அதன் விளைவாக மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தாக்கமும் விரைந்து மாறிவரும் அறிவுலகைக் கற்போருக்கு அறிமுகப்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது. வளர்ந்துவரும் அறிவுப் பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றின் தேவைகளை எதிர்கொள்ளும், வாழ்க்கைத் திறன்களை உள்ளடக்கியதான, மானுடத் திறன்களை வளர்க்க வேண்டிய ஒரு அவசியம் மாறிவரும் திறன்களின் தேவைக்குத் தக்கவாறு திறன்களையும் , அறிவையும் கற்போர் வாழ்க்கை முழுவதுக்கும் தங்களைத் தகவமைத்துக் கொள்ளுகிறதான திறன்களைக் கற்றலை ஊக்குவிக்க வேண்டியிருப்பதை உயர்த்திக் காட்டுகிறது. மாறிவரும் சமூகத் தளங்களும், சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய விரிவாக்கம் போன்ற தேசிய குறிக்கோள்களை அடைவதில் உள்ள அக்கறையும் ஒருமாறுபட்ட அணுகுமுறை தேவை என்பதை வலியுறுத்துகிறது. கற்போர் அனைவரும் கற்றல் அனுபவத்தில் வெற்றி பெறவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல், பல்வேறு தரப்பட்ட மாணவச் சமுதாயக் குழுக்களும் சமமான கல்விப் பயன்களைப் பெறும் கற்போரின் தேவைகளுக்காக அனைத்து கல்வி நிறுவனங்களும் பொறுப்பேற்றுக்கொள்ளல் இதில் அடங்கும்.

புதிய தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயன்பாடு, சிறப்பாக இணையப் பயன்பாடு கடந்த சில ஆண்டுக் காலங்களில் வியக்கத்தக்க அளவில் விரிந்துபரந்துள்ளது. புதிய தொழில்நுட்பங்கள்

மக்களின் வாழ்க்கை, பணி, தொடர் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. புதிய தொழில்நுட்பங்கள் செய்திக் குவியல்களையும், கற்றல் மூலங்களையும் எளிதாக வழங்குவதோடு கற்பவர்களுக்குக் புதிய புதிய கற்றல் வாய்ப்புகளையும் அள்ளித்தருகின்றன. புதிய தொழில் நுட்பங்களை கல்வித்துறைச் சூழலுக்குள் ஒருங்கிணைப்பது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய ஒரு பணியாக கல்வித்துறையில் வளர்ந்துள்ளது.

மேற்கூறப்பட்ட வளர்ச்சிகள், கல்விக் கொள்கைகள், உள்ளடக்கம், கல்விச் செயல்முறை ஆகியவை மாறிவரும் காலங்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப மாற்றம் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. கடந்த கால அனுபவங்களையும், மாறிவரும் தேசிய வளர்ச்சிக் குறிக்கோள்கள், சமூகத் தேவைகள் ஆகியவற்றின் வழிக்காட்டுதலிலும், உள்ளூர், நாடு, பகுதி, உலகம் ஆகியவற்றில் நிகழும் ஆற்றல் வாய்ந்த நடைமுறைகள் மாற்றங்களாலும் உருவாகியுள்ள அக்கறைகள், வினாக்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு கல்வியின் குறிக்கோள்கள் , அமைப்பு, உள்ளடக்கம், செயல்முறை ஆகியவற்றில் புத்தாக்கம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் குழந்தைகள், இளைஞர்கள், வயதுவந்தோர்களின் மாறிவரும் கற்றல் தேவைகளும் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். இந்தியாவின் கல்விப் புத்தாக்கச் செயல்பாடுக்கு வழிகாட்டியாக வடிவமைக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கை, 2016 இந்நோக்கிலான ஒரு முயற்சியே.

தேசிய கல்விக் கொள்கை, 2016, நம்பிக்கைக்குரிய, தரம் வாய்ந்த கல்வி முறையையும், வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்புகளையும் அனைவருக்கும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயனுள்ள வாழ்க்கை வாழத் தேவையான அறிவு, திறன்கள், மனப்பாங்கு, விழுமியங்கள் கொண்ட

மாணாக்கர்களையும்/பட்டம் பெற்றவர்களையும் உருவாக்குகிறதாகவும், நாட்டின் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டும் விரைந்து மாற்றம் கொள்ளும் உலகமயமாகிக் கொண்டிருக்கும் அறிவை அடித்தளமாகக் கொண்ட சமூகங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலும் வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட இந்தியப் பரம்பரையின் மரபுகளையும், வரலாறுகளையும் மதிக்கும் வண்ணமும், சமூக ஒற்றுமையையும், சமய நல்லிணக்கத்தையும் கொண்டு பொறுப்பான குடிமக்களை உருவாக்கும் வகையிலும் இருக்க வேண்டும். மகாத்மா காந்தி, *“சரியான கல்வி என்பது என்ன என்று மக்கள் அறியாது இருப்பதுதான் உண்மையான இடர்பாடு. நாம் நிலத்தை மதிப்பிடுவது போலவும், பங்குச் சந்தையில் உள்ள பங்குகளைக் கணக்கிடுவது போலவும்தான் கல்வியையும் மதிப்பிடுகிறோம். மாணவன் கூடுதலாகப் பொருளீட்டக் கூடிய ஒரு வகைக் கல்வியை மட்டும்தான் கொடுக்க விரும்புகிறோம். கற்றவர்களின் நடத்தையை உயர்த்தும் வகையை நாம் ஒருபோதும் சிந்திப்பது இல்லை”* என்று கூறியுள்ளார். நம் தேசப் பிதாவின் கருத்துகளால் தூண்டப்பட்டு, இக் கொள்கை விழுமியங்கள், திறன்கள், ஆற்றல் ஆகியவற்றைப் பயிற்றுவித்து அதன் மூலம் நாட்டின் நலத்திற்குப் பங்காற்றுபவர்களாகக் குடிமக்களைப் பரிணமிக்கச் செய்யும். நாட்டின் நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும் கல்விமுறையின் பயனாக வரும் தரமான மாணவர்கள் மேலேயே பெரிதும் சார்ந்துள்ளன. அதனால், சமூக-பொருளாதாரத்தை வளர்க்கவும், ஒப்புரவு கொண்ட அறம்சார் மானுடச்சமுதாயத்தைக் கட்டவும் ஆகச் சிறந்த ஆற்றல் வாய்ந்த ஒரு கருவியாக தரமான, சமமான தளத்தின்மேல் உருவாக்கப்படும் கல்வியை இக்கொள்கை அங்கீகரிக்கிறது. சமுதாயத்தை ஒருங்கிணைப்பதற்கு ஒரு வலுவான ஆற்றலாகவும், நாட்டு நலனில் அக்கறைகாட்டி விழுமியங்களை விதைத்துச் சமூக ஒருங்கிணைப்பை வளர்க்கும் கருவியாகவும் கல்வியை

அடையாளம் காட்டுகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் வாக்கிற்கிணங்க இந்தியக் குழந்தைகள் உலகளாவிய சிந்தனையும், இந்தியப் பண்பாடு, மரபுகளில் வேர் ஊன்றினவர்களாகவும் இருக்க வேண்டும் என்று தொலைநோக்குப் பார்வையும் கொண்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கை, 2016, எதிர்கால இந்தியக் கல்வி முன்னேற்றத்தைத் கருத்தில் கொண்டு ஒரு வடிவமைப்பைக் கொடுத்துள்ளது. அது முந்தைய தேசிய கல்விக் கொள்கைகளில் நிறைவு பெறாமல் விடுபட்டுப் போயிருக்கும் நிகழ்ச்சிகளையும், குறிக்கோள்களையும் கவனத்தில் கொள்ளுவதோடு இன்றைய நாட்டு வளர்ச்சியிலும், கல்வித்துறைத் தொடர்பான அறைகூவல்களையும் எதிர்கொள்ளும். தேசிய வளர்ச்சியில் தரமான கல்வியின் முக்கியத்துவத்தை அடையாளங்கண்டு, அனைத்து நிலைகளிலும் பெருமளவிற்கு தரமான கல்வியை மேம்படுத்தவும், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் கல்விசார் வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதற்கும் தேசிய கல்விக் கொள்கை 2016 ஒரு ஈடுஇணையற்ற முக்கியத்துவத்தை அளிக்கிறது.

ஸ்ரீ அரவிந்தர் வார்த்தைகளில் சொல்லவேண்டும் என்றால், *"இந்தியா நிச்சயமாக எழும்பும்; சிறந்து விளங்கும்; நிகழ்ந்தவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு தடையும், ஒவ்வொரு பின்னடைவும் அதற்குக் கண்டிப்பாக உதவும், அதனைப் பெருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையை இந்தியர்கள் கொண்டிருக்க வேண்டும். … …. . வைகறை விரைவில் தீரும், அடிவானத்தில் சூரியன் உதிக்கும். இந்தியா எய்தப்போகும் சிறப்பின் கதிரவன் உதித்து தன்னுடைய ஒளியினால் இந்தியாவை நிறைத்து, இந்தியாவை ஒளிமயமாக்கி , ஆசியாவையும் ஒளிமயமாக்கி, உலகத்தையே ஒளிமயமாக்கும்."* 21 ஆம் நூற்றாண்டில் இனிவருங் காலம் இந்தியாவுக்குச் சொந்தமாக இருக்கும்.

# இயல்-2

## கல்வித் துறையிலுள்ள முக்கியமான சவால்கள்

ஆரம்பகால கல்விக் கொள்கையானது தெளிவான நோக்கங்களையும் இலக்குகளையும் அளித்துள்ளது. எனினும், இவற்றில் பல முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. கல்வியின் அனைத்து நிலைகளிலும் அணுகுவதையும் பங்குகொள்வதையும் மேம்படுத்துவதில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும், நாட்டினுடைய கல்வியின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது ஒழுங்கற்றுள்ளது. மேலும் *கல்வியை அணுவதற்கும், பங்குகொள்வதற்கும் உள்ள சவால்கள், வழங்கப்பட்டுள்ள கல்வியின் தரம், கல்வியின் சமநிலை, அமைப்புத் திறன், ஆளுமைத் திறன் மற்றும் நிர்வாகத் திறன், ஆராய்ச்சியும் வளர்ச்சியும், மற்றும் கல்வி வளர்ச்சிக்கான நிதி ஒப்புகை* போன்றவை பற்றிய கவலைகள் இன்னமும் நீடிக்கின்றன.

**அணுகுதலும் பங்குகொள்ளுதலும்**

உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடக்கநிலை குழந்தைப்பருவ கல்வியின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துகிறது. எனினும், பள்ளிக்கு முந்தைய கல்வியில் பங்குகொள்வது குறைவாகவே உள்ளது. அனைத்துக் குழந்தைகளுக்கும் இணையான வாய்ப்புகளை வழங்குவதற்கு தொடக்கநிலை குழந்தைப்பருவ கல்வியை அணுவதை விரிவுப்படுத்துவதற்கும், அவர்களை முறைசார் பள்ளிக்கு அனுப்புவதற்கு சிறப்பாக தயார்செய்வதும் மிகவும் முக்கியத்துவம் தரப்படவேண்டிய பணியாக உருவெடுத்துள்ளது.

தேசிய அளவில் பள்ளிக்கு செல்லாத 6-13 வயதுள்ள குழந்தைகளின் விழுக்காடு 2000 ஆம் வருடத்திலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. எனினும், பள்ளிக்கு செல்லாத குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. நடுநிலைப் பள்ளி மற்றும்

உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள குறைந்த அளவிலான சேர்க்கை விகிதமானது தொடக்கக் கல்வியின் சேர்க்கையோடு ஒப்பிடுகையில் கவலையளிக்ககூடிய விஷயமாக உள்ளது. அனைவரும் உயர்நிலைக் கல்வியை பெறுவதற்கு மாணவர்களுக்குத் தொடக்க கல்வியிலிருந்து உயர்நிலைக் கல்விக்குச் செல்வதையும், உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளிக்கும் மற்றும் உயர்கல்வியை உறுதிசெய்வது ஒரு சவாலாகவே தொடர்கிறது.

இந்தியா உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய உயர்கல்வி அமைப்பை கொண்டுள்ளது. இந்திய உயர்கல்வி ஏற்கனவே அனைவருக்கும் சென்றடைந்திருக்கும் நிலையை அடைந்திருக்கின்ற போதிலும், 2014-15 ஆண்டிற்கான உயர்க்கல்வியின் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதம் 23.6 விழுக்காடு என்ற குறைந்தளவிலேயே உள்ளது. 2017-18 ன் தற்போதைய இலக்கு ஒட்டுமொத்த சேர்க்கை விகிதத்தை 25.2 விழுக்காட்டிற்கும் மேலும் 2020-21 ல் 30 விழுக்காட்டிற்கும் அதிகரிப்பதேயாகும்.

கல்வியறிவற்றவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் உள்ள மெதுவான முன்னேற்றம் ஒப்பீட்டளவில் கவலையளிக்ககூடிய விஷயமாக உள்ளது. 2011ல் 282.6 மில்லியன் மக்கள்தொகையுள்ள இந்தியாவில் 7 வயதும் அதற்கு மேலும் உள்ளவர்களில் கல்வியறிவு அற்றவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்தியா தற்போது மிகப்பெரிய எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. இந்தியா உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான கல்வியறிவற்ற இளைஞர் மற்றும் வயதுவந்தவர்களைக் கொண்டுள்ளது. அதாவது, 2011ன் கணக்கெடுப்பின்படி இளைஞர்கள் மற்றும் வயதுவந்தவர்களின் கல்வியறிவு விழுக்காடு முறையே 86.1 மற்றும் 69.3 ஆக உள்ளது.

**தரப் பிரச்சினைகள்**

தரமற்ற கல்வியின் விளைவாக திருப்தியற்ற கற்றல் பயனானது மிகவும் கவலையளிக்க கூடியதாக இருக்கிறது. தரம் தொடர்பான குறைபாடுகள், அதாவது, பொருத்தமற்ற கலைத்திட்டம், பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் பற்றாக்குறை, திறமையற்ற ஆசிரியர் போன்றவை பள்ளிக்கு முந்தைய கல்வி தொடர்பாக இருக்கும் முக்கியமான சவால்களாகும். பள்ளிக்கு முந்தைய கல்வியை முடித்த குழந்தைகளில் குறிப்பிட்ட விகிதத்தினர் தொடக்கப் பள்ளியில் சேரும்போது பள்ளிக்கான ஆயத்தத் திறன்களான புலனறிவையும் மொழியறிவையும் பெற்றிருக்கவில்லை. பள்ளிக்கு முந்தைய ஆசிரியர்கள் பெரும்பாலானவர்களுக்குத் தேவையான அளவிற்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. பெரும்பாலான நேரங்களில் பள்ளிக்கு முந்தைய கல்வியின் கலைத்திட்டமானது தொடக்கக் கல்வி கலைத்திட்டத்தின் கீழ்நிலை விரிவாகவே தொடர்கிறது.

பள்ளிக்கல்வி எதிர்கொள்கிற மிகப்பெரிய சவால் மாணவர் கற்றலிலுள்ள திருப்தியற்ற நிலையினையே எடுத்துரைக்கிறது. வகுப்புகள் III, V, VIII மற்றும் X ஐ உள்ளடக்கிய தேசிய அடைதல் பொதுவிவர ஆய்வுகளின் (NAS) முடிவின்படி ஒரு பெருமளவு மாணவர்களின் கற்றல் நிலையானது எதிர்பார்க்கப்பட்ட கற்றல் நிலைகளின் அளவுக்கு இல்லை என்பதைக் காட்டுகிறது. தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தரம் குறைந்த கற்றல் உயர்நிலைப் பள்ளியில் கற்பதற்கும் மாணவரின் கற்றலைப் பாதிக்கிறது. உயர்நிலைப் பள்ளியில் கற்கும் தரம் குறைந்திருப்பது கல்லூரி/பல்கலைக்கழக கல்விக்கும் பரவி, உயர்க் கல்வித்துறையிலும் மோசமான கற்றல் பயனுக்கு வழிவகுக்கிறது.

பள்ளிக் கல்வியின் திருப்தியற்ற தரத்திற்கு பல காரணிகள் பங்களித்திருக்கின்றன. அவற்றில் சில: அதிக அளவிலான பள்ளிகள், பள்ளிக்கென பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற விதிகளையும்

தரத்தையும் பின்பற்றாமல் இருத்தல்; மாணவர் ஆசிரியர் வராதிருத்தல்; ஆசிரியரின் தூண்டுதலுக்கும் பயிற்சிக்குமான அதிக இடைவெளி ஆசிரியரின் ஆகியவை தரம் மற்றும் செயல்பாடுகளில் குறைகளை உண்டுபண்ணுகிறது; கல்வியில் செய்தி மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள நிதானமான முன்னேற்றம்; எதிர்பார்க்கக்கூடிய அளவில் இல்லாத பணியாளர் மேலாண்மை, செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் மேற்பார்வையிடுவதிலும் போதிய கவனம் செலுத்தாமை முதலியவை இதில் அடங்கும். நல்ல கல்வியினை வழங்குவதில் அரசு அமைப்பில் உள்ள பள்ளிகள் தோல்வியடைந்திருக்கிறது என்ற எண்ணம் அதிக அளவிலான தனியார் பள்ளிகளின் நுழைவை அதிகரித்திருக்கிறது. அவற்றில் பல பள்ளிகளில் போதிய அளவு அகக்கட்டமைப்புகள், கற்றல் சூழ்நிலை மற்றும் திறன்வாய்ந்த ஆசிரியர்கள் இல்லை.

அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படுகின்ற கல்வியின் தரமானது மிகவும் கவலையளிக்கக்கூடிய விஷயமாக உள்ளது. தரத்தை உறுதி செய்யும் நடவடிக்கையாக சான்றளிப்பு முகமைகள் இந்தியாவில் 1994 ல் நிறுவப்பட்டது, இது உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான பணியைச் செய்யும். தேசிய மதிப்பீடு மற்றும் சான்றிதழ் குழுவினால் (National Assessment and Accreditation Council - NAAC) அங்கீகரிக்கப்பட்ட 140 பல்கலைக்கழகங்களில், 32 விழுக்காடு பல்கலைக்கழகங்கள் மட்டுமே A தரச்சான்றிதழைப் பெற்றிருக்கின்றன. NAAC அங்கீகரித்துள்ள 2,780 கல்லூரிகளில், 9 விழுக்காடு மட்டுமே A தரச்சான்றிதழை பெற்றிருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில், 68 விழுக்காடு பல்கலைக்கழகங்கள், 91 விழுக்காடு கல்லூரிகள், NAACஆல் குறிப்பிடப்பட்டுள்ள தர அளவுகளின் கணக்கின்படி சராசரி அல்லது சராசரிக்கும் குறைந்த தரத்தினையே கொண்டுள்ளன. தனியார்

கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் புற்றீசல்போல் வளர்ந்துள்ளன, அவற்றில் பல, தரத்தில் அக்கறை கொள்ளவதில்லை. உயர்கல்வியின் துணைப்பிரிவானது எல்லைக்குள்ளேயே உள்ளது, அதற்குக் காரணம் ஆசிரியர்களின் காலி பணியிடங்களை நிரப்பாததன் விளைவாக ஏற்பட்டுள்ள நல்ல திறமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறை; பல தனியார் மற்றும் கணிசமான அளவு அரசு உயர்கல்வி நிறுவனங்களும் மோசமான அகக்கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன; உயர்கல்வி கலைத்திட்டத்தைப் புதுபிப்பதில் உள்ள நிதானமான முன்னேற்றம், அதைப் பன்முக பொருளாதாரத்திற்குத் தேவையான திறன்களோடு மிக நெருக்கமாக ஒன்றிணைப்பது; ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் போதுமான நிதி ஒதுக்காததுமே ஆகும்.

**திறன்களும் பணிக்குத் தகுதியாக்கமும்**

உலகிலேயே மிகவும் இளமையான நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதன் மொத்த மக்கள்தொகையில் 54 விழுக்காடு 25 வயதுக்கு கீழ் உள்ளவர்கள். கல்வி மற்றும் பயிற்சியின் வாயிலாக திறனும் அறிவும் பெற்ற பணியாளராக பணியாற்ற நாட்டிலுள்ள இந்த இளைஞர்களை ஊக்குவிப்பது தவிர்க்கவியலாததாகிறது. எனினும், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி படிப்பு ஆதரவுக்கான நிறுவனஞ்சார் ஏற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் குறைவாகவே உள்ளன. மாணவர்கள் பரந்துபெருகவும் உயரவும் கொண்ட வாய்ப்புகளை வழங்கும் தொழில்சார் தகுதிக்கு கல்விசார் அடைதலைச் சமமாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவும், அதற்கென தொழிற்கல்வி புலங்களில் திறன்களின் வளர்ச்சியை முறையாகத் தொடர்புபடுத்தும் முயற்சிகளும் சமீபத்தில்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர்தரத் தொழிற்கல்விப் பயிற்சிக்கு கண்ணியத்தையும் சமூக ஏற்பையும் வளர்ப்பதில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது.

கல்வி அமைப்பிலிருந்து வரும் மாணவர்களில் பலர் வேலைக்கான தகுதித் திறன் அற்றவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். இது உயர்கல்வி அமைப்பின் நம்பகத்தன்மையைக் கணிசமான அளவிற்கு குறைத்துள்ளது. வேலை வாய்ப்பினை உறுதி செய்கிற உயர்கல்வியின் பயன் நிச்சயமற்றதாகவே உள்ளது. பல இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணவர்களுக்கு அவர்களுக்குரிய துறைகளில் வேலை கிடைக்கவில்லை. இக்கல்வி முறையின் மாணவர்களுக்கு வேலைக்கான தகுதியினை மேம்படுத்துவதற்கான பணிக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

**கலைத்திட்டமும் மதிப்பீடும்**

தற்போதிருக்கும் பள்ளி மற்றும் உயர்கல்வி ஆகியவைகளின் கலைத்திட்டத்திற்கு இடையே மிக அதிகமான தொடர்பின்மை உள்ளது. மேலும், வேகமாக மாறிக்கொண்டு வரும் உலகில் சிறந்த வாழ்க்கைக்கும், நல்ல வேலைக்கு தேவையான திறன்களை மாணவர்கள் பெறுவதற்கு துணைபுரிவதற்கும் தேவையான கலைத்திட்டத்தின் குறுக்கீடுகளும் உள்ளன என்ற புரிதல் இப்போது ஏற்பட்டுள்ளது. இத்தருணத்தில் உள்ள முக்கியமான சவால் என்பது தேவையான திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுப்படுத்துல் ஆகும். இதில் வேலை மற்றும் தொழில்முனைவோருக்கு தேவையான திறன்களும் உள்ளடங்கும்; தன்னிச்சையாகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், திறமையுடன் தகவல்பரிமாற்றம் செய்யவும், திறனாய்வுடன் சிந்திக்கவும், அதிக படைப்பாற்றலும் புதிது புனைதலும் கற்பவர்கள் பெறுவதற்கு அனுமதிக்கிற திறன்கள் மற்றும் ஆற்றல்கள்; பொறுப்புள்ள குடிமக்களாக தனிமனிதன் வளர்வதற்கும் பன்முக பண்பாட்டினை விரும்பி ஏற்றுக்கொள்ளவும், வாழ்வதற்கும் ஒத்திசைவுடன் இணைந்து பணியாற்றவும் உதவுகிற வாழ்க்கை திறன்கள். பள்ளி மற்றும் கல்லூரி/ பல்கலைக்கழக

நிலைகளில் உள்ள ஒட்டுமொத்த மதிப்பீட்டு நடைமுறைகள் திருப்தியற்றதாக உள்ளன. பல நேரங்களில் மதிப்பீட்டு நடைமுறையானது மனனம் செய்து கற்றலுக்கே கவனம் அளிப்பதாகவும், மாணவர்களின் திறமையை சோதிக்க புத்தக அறிவினை சோதிப்பதாகவே உள்ளது. மாணவர்களினுடைய முழுமையான மதிப்பீட்டை உறுதிசெய்ய முழுமதிப்பீட்டு முறையையும் மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது. அதில் கல்விசார் மற்றும் கல்விசாராத துறைகள் இரண்டோடும் தொடர்புடைய கற்றல் பயன்களும் உள்ளடங்கும்.

**செய்தி மற்றும் தகவல்தொடர்புத் தொழில்நுட்பம் (Information and Communication Technology - ICT)**

கடந்த இருபது ஆண்டுகளில் செய்தி மற்றும் தகவல்தொடர்புத் தொழில்நுட்பம் வேகமான வளர்ச்சி அடைந்துள்ளது. நாட்டில் பல பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. மேலும், கல்வியில் செய்தி மற்றும் தகவல்தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக ஒரு அறிவுக்கு குழு திரட்டப்பட்டுள்ளது. எனினும், கல்வியில் ICTன் செயற்திறம் முழுவதும் கட்டுப்படுத்தப்படவில்லை. கல்வியில் ICTன் பயன்பாடு வரையறுக்கப்பட்டதாகவே இருக்கிறது மேலும் தரமான கல்வியின் வளர்ச்சிக்கு ICTயைப் பயன்படுத்துவதற்குத் தேவையான முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்கான தேவை இருக்கிறது.

**ஆசிரியரின் மேம்பாடும் நிருவாகமும்**

ஆசிரியர்களின் தரம் மற்றும் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்த போதிலும், பள்ளி ஆசிரியர்களின் தொடக்கநிலை பணிசார் தயாரிப்பு மற்றும் தொடர்ச்சியான பணிசார் வளர்ச்சி பல குறைபாடுகளினால் விளக்கப்படுவது தொடர்கிறது. தற்போதுள்ள ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி வகுப்புகள் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிற கடமைகள்

மற்றும் புதிய மாற்றங்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களுடன் ஆசிரியரை ஊக்கப்படுத்துதலைக் கொண்டு பார்க்கும் போது பொருத்தமற்றவையாக கருதப்படுகின்றது. மேலும் பன்முக சமூக, பொருளாதார, பண்பாடு மற்றும் தொழில்நுட்ப சூழ்நிலைகளில் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு அவர்களுக்கு உதவுதல். நிறுவன கொள்திறனுக்கும் தேவைப்படும் ஆசிரியர்களுக்கும் இடையே தொடர்ந்து பற்றாக்குறை இருந்துவருகிறது. இந்த பிரச்சினை நாட்டின் கிழக்குப் பகுதிகளில் மிகவும் கடுமையாக உள்ளது. இங்கு தான் அதிக அளவிலான பயிற்சி பெறாத ஆசிரியர்கள் உள்ளனர். இந்த மாநிலங்களில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான அறிவுத்திறனும் கூட மிகவும் குறைவாகவே உள்ளது. ஆசிரியர் கல்வியில் ஆராய்ச்சி, பரிசோதனை மற்றும் புதிது புனைதல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. உள்ளன. இந்த மாதிரியான குறைபாடுகள் ஆசிரியர் தொழிலுக்கான அடையாளத்தையும் கற்பித்தல் ஒரு தொழில் என்ற அந்தஸ்தையையும் அழிவுக்கு கொண்டு வந்துள்ளது. மாணவர்களின் கற்றல் பயன்களை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களின் அறிவுத்திறன், ஊக்கம் மற்றும் பொறுப்புடைமை ஆகியவை அவசரகதியில் விவாதிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

**சமத்துவப் பிரச்சினைகள்**

பள்ளிக்கு முந்தைய கல்விச் சேர்க்கையில் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும், வறுமையில் உள்ள மக்களின் குழுந்தைகளுக்கு பள்ளிக்கு முந்தைய கல்வி இன்னும் கிடைக்காமல்தான் உள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் குழந்தைகளுக்குப் பள்ளிக்கு முந்தைய கல்விக்கான வாய்ப்பு மிக குறைந்தளவே உள்ளது.

குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தபோதிலும், சில மாநிலங்களில் நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியின் சேர்க்கை விகிதம் சராசரிக்கு கீழேயே உள்ளது. உயர்நிலைப்

பள்ளிக்கான தேவை அதிகரித்திருக்கும் போதும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் போதும், உயர்நிலைப் பள்ளிகளின் பரவாலக்கம் நாடு முழுவதும் சமமற்று உள்ளது. மாணவர்களின் சமூக-பொருளாதார பின்னணியைப் பொருத்து கல்வி கிடைப்பதில் உள்ள வேறுபாடு போன்று, மாநில ஏற்றத்தாழ்வும் தொடர்கிறது.

2000 ஆண்டிலிருந்து, பள்ளிக்கு வராத குழந்தைகளின் ( Out of School Children - OOSC) எண்ணிக்கை பெருமளவில் குறைந்திருந்தாலும், சில மாநிலங்களில் பள்ளிக்கு வராத குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் அளவு தேசிய சராசரியை விட மிக அதிகமாக உள்ளது. ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் முஸ்லீம் குழந்தைகளில் பள்ளிக்கு வராத குழந்தைகளின் (OOSC) சராசரி தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது. இந்த குழந்தைகளுக்கு மிகப்பெரியளவில் கவனம் செலுத்தவேண்டிய தேவை இருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

உயர்கல்வியின் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதத்தில் (Gross Enrolment Ratio - GER) உள்ள மாநில ஏற்றத்தாழ்வுகள் மிக அதிகம். உயர்கல்வியில் 2011-12 ன் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதம் ஜார்க்கண்டில் 8.4 விழுக்காடும் சண்டிகரில் 53 விழுக்காட்டிற்கும் இடையில் உள்ளது. அதேபோல், சமூக குழுக்களிடையேயுள்ள வேறுபாடுகளும் கூட கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது, இவர்களுடைய உயர்கல்வியின் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதம் 2014-15ல் 23.6 விழுக்காடாகும் ( மாணவர்கள் 24.5% , மாணவிகள் 22.7% ; ஆதிதிராவிட வகுப்பினர் 18.5% மற்றும் பழங்குடியின் 13.3%). இந்தியாவின் உயர்கல்வித் துறை எதிர்கொள்கிற சவால்களில் ஒன்று தேவைகள் விரிவாக்கத்தை சமநிலைக் கருத்துடன் பொருந்த செய்வதாகும்.

தொடக்கக் கல்வியில் பின்தங்கிய மக்கள் குழுக்களில் சேர்க்கை மற்றும் தொடர்ந்து படிக்கவைப்பதை எளிமைப்படுத்துவதற்கான உள்ளடக்கிய உத்திகளைப் பெரும்பாலான மாநிலங்கள் வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளது. இந்த முயற்சிகள் செய்தபோதும், கல்வி வாய்ப்புக்கான முழு பலன்களை சில பிரிவுகளை சேர்ந்த குழந்தைகள், அதாவது ஊனமுற்ற குழந்தைகள், தொலைதூரங்களிலிருந்து வரும் குழந்தைகள், நாடோடிக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள், புலம்பெயர்ந்த குழந்தைகள் மற்றும் மற்ற மெலிவு நிலை/சமூகத்தில் பின்னடைவுபெற்ற குழுக்கள் எடுத்துகொள்ள முடிவதில்லை. நகர ஏழைக் குழந்தைகள் மற்றுமொரு குழுவினை உருவாக்குகிறது. கல்வியில் இவர்களின் பங்கேற்பு குறைவாகவே உள்ளது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் உயர்கல்வி அளிக்கும் முயற்சிகளில் முக்கியமாக முன்னுரிமை அளிக்கவேண்டியவற்றில் ஒன்று, எளிதில் கல்வி கிடைக்காதவர்களுக்கு கல்வி கிடைப்பதை உறுதி செய்வதாகும்.

தேசிய கற்றல் அடைவு பொதுவிவர ஆய்வு மாநிலங்கள்/யூனியன் பகுதிகளுக்கு இடையே மாணவர்களின் சராசரி அடைவு நிலைகளின் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை வெளிப்படுத்துகிறது. மேலும் அந்த ஆய்வு, நகர மாணவர்கள் கிராமத்து மாணவர்களைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவில் சிறப்பாகக் கற்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது; அரசு உதவிபெறாத தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களைக் காட்டிலும் சற்றே சிறப்பாகக் கற்கிறார்கள்; பொதுப்பிரிவினர் மற்றும் பிற பிற்பட்ட சமூகப் (OBC) பிரிவினரைச் சார்ந்த மாணவர்கள் அட்டவணைச் சாதிகள் ( SC) மற்றும் அட்டவணைப் பழங்குடியினர் (ST) பிரிவினரைச் சார்ந்த மாணவர்களைக் காட்டிலும் சிறப்பாகக் கற்கிறார்கள். இந்த முடிவுகள் ‘கற்றலில் சமநிலை’ என்ற இலக்கிற்கு பெரிய சவாலாக

இருப்பதை உணர்த்துகிறது. வரலாற்றுரீதியாக பின்தங்கிய மாணவர்கள், சமூகத்தில் பொருளாதாரரீதியாக பின்தங்கியவர்கள் மற்றும் முதல் தலைமுறை கற்பவர்களின் கற்றல் பயன் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாக உள்ளதை வெளிப்படுத்துகிறது.

பள்ளிக்கு வராத குழுந்தைகளில் குறிப்பிடத்தக்க அளவு ஊனமுற்றவர்கள் மற்றும் சிறப்பு தேவைகள் உள்ள குழந்தைகள் உள்ளனர். இந்த சூழல், சமூகம் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள ஊனமுற்ற குழந்தைகளுக்குச் சவலாக உள்ள தேவைகளைப் பள்ளிகள் தீர்ப்பதை ஊக்குவிப்பதற்கான தேவையை வலியுறுத்துகிறது.

இந்த விஷயத்தில் அனைத்து பிரிவினரைச் சேர்ந்த மாணவர்களின் இடைநிற்றல் வீதம் கவலையளிக்கக்கூடியதாக இருப்பினும், சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குழுக்களில் இடைநிற்றல் வீதம், குறிப்பாக, இந்தக் குழுவில் உள்ள பெண்கள், தேசிய சராசரிக்கு அதிகமாகவே உள்ளது. சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பிலிருந்து வரும் குழந்தைகளைப் பள்ளியில் தொடர்ந்து பயிலச்செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான தேவையைக் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

பெரும்பாலான மாநிலங்கள்/யூனியன் பகுதிகள் கல்வி பங்கெடுப்பில், குறிப்பாக, தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைப் பள்ளிக் கல்வியில் உள்ள பாலின ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன. இவற்றில் பல, பாலினச் சமநிலையை அடைந்துவிட்டன அல்லது கடந்துவிட்டன. எனினும், மேல்நிலைப் பள்ளி நிலையில் ஏற்றத்தாழ்வுகள் இன்னும் உள்ளன. பல மாணவிகள் பள்ளிக்கு அனுப்பப்படுவதில்லை; மேலும், உயர்கல்வியை முடித்த பலர் தங்களுடைய மேல்நிலைப் பள்ளிப் படிப்பு மற்றும் கல்லூரி படிப்பைத் தொடரமுடியவில்லை. ஒரு காலத்தில், குறிப்பாக உயர்நிலைப் பள்ளி அளவில்,

குறிப்பிடத்தக்க அளவு பெண்கள் தங்களுடைய கல்வியைத் தொடர பல தடைகள் இருந்தன. பாலினம் மற்றும் சமூக பிரிவு இடைவெளிகளை இணைக்க தற்போது மேற்கொள்ளப்படுகிற தலையீடுகளின் தேவையை அதிகப்படுத்தப்பட வேண்டும், மேலும், மாணவிகள் மற்றும் பிற சிறப்பு பிரிவினைரைச் சார்ந்த குழந்தைகளின் செயல்திறமிக்க உள்ளடக்கல் மற்றும் பங்கெடுப்பினை எளிமைப்படுத்துவதற்காக மிக அதிக கவனத்துடன் உத்திகளைக் கையாளவேண்டும்.

இளம்பருவத்தினர் மற்றும் வயதுவந்தவர் எழுத்தறிவு வீதத்தில் பாலின இடைவெளி அதிகமாக இருப்பது முதன்மையான சவலாக உள்ளது. இளம்பருவத்தினரின் எழுத்தறிவு விகிதத்தில் பாலின இடைவெளி (8.2 விழுக்காடு) அதிக அளவில் இந்தியாவில் தொடர்ந்து இருந்து வருகிறது, இளம்பருவத்தினரில் ஆண் பெண் எழுத்தறிவு வீதம் (15-25 வயதினர்) 2011 ல் முறையே 90 விழுக்காடு மற்றும் 81.6 விழுக்காடு ஆகும். வயதுவந்தவருக்கான எழுத்தறிவிலும் பாலின இடைவெளி (19.5 விழுக்காடு புள்ளிகள்) தொடர்ந்து இந்தியாவில் அதிகமாக உள்ளது. வயதுவந்தவர்களில் ஆண் பெண் எழுத்தறிவு வீதம் (15 வயதும் அதற்கு மேலும்) 2011ல் முறையே 78.8 விழுக்காடு மற்றும் 59.3 விழுக்காடு ஆகும். மாணவிகள் மற்றும் பெண்களின் எழுத்தறிவு நிலைகளை உயர்த்துவதற்கு பெரிய அளவிலான முயற்சிகள் தேவை என்பது தெளிவாகத் தெரிகிறது.

**அமைப்பின் செயல்திறன்**

தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் இடைநிற்றலின் வீதம் குறைந்து வருகிறது என்றாலும், தொடக்கபள்ளியை நிறைவு செய்வதற்கு முன்பாக அதிக எண்ணிகையிலான குழந்தைகள் பள்ளியை விட்டு நின்றுவிடுகிறார்கள். 2014-15ல், ஆரம்பக்கல்வியில் தக்கவைக்கும்

வீதம் 83.7 விழுக்காடாகவும், தொடக்கக்கல்வியில் 67.4 விழுக்காடு அளவுக்கு குறைவாக இருந்தது. Iஆம் வகுப்பில் சேர்கின்ற 10 குழந்தைகளில் நான்கு குழந்தைகள் VIIIவது வகுப்பு முடிப்பதற்கு முன்பாகவே பள்ளியைவிட்டு நின்று விடுகிறார்கள். உயர்நிலைப் பள்ளியில் இடைநிற்றல் வீதம் அதிகமாகவே தொடர்கிறது, குறிப்பாக, சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களில் இது அதிகமாக உள்ளது. அனைத்துப் பிரிவு மாணவர்களிடமும் இந்த இடைநிற்றல் வீதம் கவலையளிக்கக் கூடிய விஷயமாக இருக்கின்றபோதும், சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குழுக்களின் இடைநிற்றல் விகிதம், குறிப்பாக, இந்த குழுக்களில் உள்ள மாணவிகள், தேசிய சராசரியை விட அதிக அளவில் உள்ளது. சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்திலிருந்து வரும் குழந்தைகளைப் பள்ளிகளில் தக்கவைப்பதை மேம்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கான தேவை அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளியில் சேரும் அனைத்து மாணவர்களும் அதை நிறைவுசெய்வதை உறுதிசெய்வதற்கு அதிக முன்னுரிமை கொடுக்கவேண்டிய வேலையாக உள்ளது.

**ஆளுகையும் நிருவாகமும்**

பல ஆய்வுகள் ஆசிரியர் வராமை, பள்ளி/கல்லூரி/பல்கலைக்கழங்களுக்கு தாமதமாக நிதி வழங்குவது மற்றும் நிருவாகத் திறமைகள் ஆகிய கல்வி ஆளுகையில் உள்ள சவால்களைக் கூறுகிறது. திறன்மிக்க செயல்திட்ட திட்டம் மற்றும் அமலாக்கம் தொடர்பான திறன் வரையரைகள் முக்கிய பிரச்சினையாகவே தொடர்கிறது. அதன் விளைவாக, திட்டமிடப்பட்ட திட்டங்களை அமல்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் சமமற்றதாகவே உள்ளது. கல்வி அமைப்பு மற்றும் நிறுவனங்களின் ஆளுகை மற்றும் நிருவாகம், குறிப்பாக, கல்லூரிக் கல்வி நிலையில்,

பலவேறுபட்ட வழங்குனர்களின் வருகை, செயல்திட்டங்கள் மற்றும் நிதி வழங்கும் முறைகளில் கடுஞ்சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது. சில மாநிலங்கள் நம்பிக்கையூட்டுகிற முனைவுகளையும் புதிதுபுனையும் நிருவாகமும் செய்திருப்பது உண்மையாக இருந்தாலும், நாடு முழுவதும் காணக்கிடைப்பது கலந்ததாக உள்ளது. கல்வி அமைப்பு மற்றும் நிறுவனமைப்பு நிலைகளின் ஆளுகை மற்றும் நிருவாக்க் கொள்கைகள் இரண்டிலும் ஒரு புதிய பார்வையை கொண்டுவருவது தவிர்க்கவியலாததாக அவசரமாக மாறியிருக்கிறது.

தனியார் கல்வி நிறுவங்களில் சேர்க்கைக்கு விதிக்கப்படும் கட்டணங்களிலிருந்து தெரியவருவது போல பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி துணை பிரிவுகள் இரண்டிலும் வர்த்தகமயமாக்கல் அதிகளவில் உள்ளது. தரம் குறைந்த கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி கல்வி அமைப்பின் நம்பகத்தன்மையைக் குறைப்பதில் பங்களித்துள்ளன.

**ஆராய்ச்சியும் வளர்ச்சியும்**

பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான தொடக்கமுயற்சிகள் இந்தியாவில் குறைவாகவே உள்ளன. தற்போதிருக்கிற ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான தொடக்கமுயற்சி; கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி இரண்டும் சிறந்து விளங்க இவற்றுக்கு இடையே ஒன்றுக்கொன்றான ஒத்துழைப்பைக் கட்டமைத்தல்; ஆராய்ச்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் அவைகளின் ஆசிரியர்களை உலகிலுள்ள மற்ற நிறுவனத்துடனும் ஆசிரியர்களுடனும் நெருங்கிய உறவினை வளர்த்துகொள்வதற்கு ஊக்குவிப்பும் ஆதரவும் வழங்குவதன் மூலம் பன்னாட்டுமயமாக்கலை முன்னெடுத்துச் செல்லுதல்; அறிவு மேம்பாட்டிற்கான செயல்முறையைத் துரிதப்படுத்த பல்கலைக்கழகத்தின் துறைகளை

ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் தொழிற்சாலைகளுடனும் இணைத்து ஆராய்ச்சிக்காக உறவுகளை உருவாக்குதலும் எளிமைப்படுத்துதலும் ஒரு வரையரைக்குள்ளாகவே இருக்கிறது.

**நிதிநிலை வரம்புகள்**

கல்விக்கு பற்றாக்குறையான நிதியளித்தல் என்பது தரமான கல்வியை எளிதில் பெறுவதற்கும் பேணிவளர்ப்பதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிக்குத் தடையாக உள்ளது. பள்ளி/கல்லூரி/ பல்கலைக்கழங்களுக்குத் தாமதமாக நிதி வழங்குவது போன்ற கல்வி ஆளுகையில் உள்ள சவால்களைப் பல ஆய்வுகள் கூறுகிறது. முந்தைய கல்விக் கொள்கைகள் குறைந்தபட்ச கல்வி செலவினத்திற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 விழுக்காட்டினை உறுதிபடுத்தியுள்ளது. எனினும், இந்த இலக்கினை இது ஒருபோதும் எட்டியதில்லை. நிதி ஒதுக்குவதில் உள்ள குறைபாடு கல்வியில் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் தரத்தினை உறுதிசெய்வதற்கும், பள்ளியின் விரிவாக்கத்திற்கும், உயர் மற்றும் வயதுவந்தோர் கல்வித் திட்டங்களை முழுவதுமாக அமல்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ள சில செயல்திட்டங்களுக்குத் தடையாக உள்ளது. சரியான நேரத்தில் திட்டங்களை அமல்படுத்துவதில் எங்கும் நீடித்துள்ள தொடர்ந்த தோல்வியானது வழங்கப்பட்டுள்ள வளங்களை அனுகூலமற்ற முறையில் பயன்படுத்த வழிவகுக்கும்.

**உலகளாவிய பொறுப்பு**

உலகளாவிய நீடித்த வளர்ச்சி இலக்கு 4 ( Sustainable Development Goal - SDG 4) ன் 2030 செயல்திட்டம் அனைவருக்கும் வாழ்க்கை முழுவதற்குமான கற்றல் வாய்ப்புக்களைக் கொண்டுசெல்லவும், உள்ளடக்கிய சமநிலைத் தரமான கல்வியை உறுதிசெய்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட EFAயின் செயல்திட்ட,ம்

குறிப்பாக, இளைஞர் மற்றும் வயதுவந்தோர் எழுத்தறிவற்றவர்கள் தொடர்பான திட்டம், பள்ளிக்கு வராத குழந்தைகள் திட்டம், தொடக்கநிலை குழந்தைப்பருவக் கவனிப்பு மற்றும் கல்விக்கான குறைந்த வாய்ப்பு, திறன் வளர்ச்சிக்குத் தேவைக்கு குறைவான வாய்ப்புகள் மற்றும் திருப்தியற்ற தரமற்ற கல்வி மற்றும் மாணவர்களின் கற்றல் நிலைகள் ஆகியவை முடிவடையாமலே இருக்கின்றன. எனவே, இந்த தேசிய கல்விக் கொள்கை (NEP) முடிவடையாத EFA செயல்திட்டம் மற்றும் SDG 4 செயல்திட்டத்தோடு தொடர்புடைய இலக்குகள் இரண்டையும் நிறைவேற்ற முயலும்.

சவால்களை எதிர்கொள்கிற கல்வி பிரிவு, கல்வித்துறையைப் பேணிக்காக்க புதிதுபுனையும் அணுமுறையையும் நீடித்த முயற்சியையும், குறிப்பாக, தரமான கல்வியை அணுகுதலிலும் சமநிலையிலும் எந்தவித சமரசமுமின்றிக் கிடைக்க வேண்டுகிறது. இந்தியாவின் கல்வி வளர்ச்சிக்கு உள்ள பல்வேறு சவால்களை எதிர்கொள்ள திறன்மிக்க உத்திகளைத் திட்டமிடல் முக்கியமான உந்தலாக இருக்கும், மேலும் நாட்டினுடைய மக்கள்தொகை பங்கீட்டின் ஆற்றலை உணர்தலும் ஆகும்.

# இயல்–3

## தொலைநோக்கு, செயல்இலக்கு, இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

**தொலைநோக்கு**

2016 தேசிய கல்விக் கொள்கையானது (National Education Policy - NEP), நம்பகத்தன்மையுள்ள, அதிகம் செயல்புரிகிற கல்வி அமைப்பைக் கற்பனை செய்கிறது. அந்தக் கல்வி அமைப்பு தரமான கல்வி மற்றும் அனைவருக்கும் வாழ்க்கை முழுவதற்குமான கற்றல் வாய்ப்புக்கள் மற்றும் பயனுள்ள வாழ்க்கை நடத்த தேவையான அறிவு, திறன்கள் மற்றும் விழுமியங்கள் ஆகியவற்றைக் கொண்ட மாணவர்கள்/ பட்டதாரிகளை உருவாக்குதல், நாட்டின் வளர்ச்சிச் செயல்முறையில் பங்கெடுப்பு, வேகமாக வளர்கிற, உலகமயமாகிவருகிற, அறிவுசார் பொருளாதார மற்றும் சமூகத்திற்கான தேவைகளுக்கு ஏற்ப பணியாற்றுதல் போன்றவற்றை அளிப்பதை உறுதிசெய்யும் திறனை பெற்றிருக்கவேண்டும்..

**செயல்இலக்கு**

- சமநிலை, அனைத்தையும் உள்ளடக்கிய தரமான கல்வி மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதற்குமான கற்றல் வாய்ப்புகள் – குழந்தைகள் , இளைஞர்கள் மற்றும் வயதுவந்தவர்கள் – நாட்டின் மனித ஆற்றலை முழுவதுமாக உணர்ந்து அதை முன்னெடுத்துச் செல்லலை உறுதிசெய்தல்.

- இந்தியாவின் வளமான பாரம்பரியம் , புகழ்பெற்ற வரலாறு , சிறந்த மரபுகள் மற்றும் பலவகைப்பட்ட பண்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி குழந்தைகள் , இளைஞர்கள் மற்றும் வயதுவந்தவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய பள்ளிக்கல்வி , உயர்கல்வி

மற்றும் வயதுவந்தோருக்கான கல்வித் திட்டங்கள் , உலகக் குடியுரிமை மற்றும் நீடித்த வளர்ச்சி போன்றவற்றை வளர்க்க உதவுகிற பொதுவான விழுமியங்கள் , பொறுப்புள்ள குடிமகனாகவும், அமைதி , சகிப்புத்தன்மை , மதச்சார்பின்மை , தேசிய ஒற்றுமை , சமூக ஒற்றுமை மற்றும் அனைத்து மதங்களுக்கும் பரஸ்பர மரியாதை கொடுத்தல் போன்ற அனைத்து வகையான விழுமியங்களையும் கற்பவர்கள் பெறுவதற்கான முன்னெடுத்தலை உறுதிப்படுத்துதல்.

- கலைத்திட்டங்கள், கற்றல் பொருள்கள், ஆசிரியர் தொழிலுக்குரிய செயல்முறைகள், கற்றல் மதிப்பீடுகள், ஆசிரியரின் தரம், செயல்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய சீர்திருத்தங்களில் அதிக முக்கியத்துவம் தரமான கல்விக்கு அளிப்பதை உறுதிசெய்யவேண்டும். அனைத்து நிலைகளிலும் உள்ள மாணவர்கள் அனைவரும் நிறுவனத் தலைமை மற்றும் நிருவாகத் திறனைப் பெறவும், சிறந்த கற்றல் பயன்களான (அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள்) பயனுள்ள வாழ்க்கை நடத்தவும், நாட்டின் வளர்ச்சிச் செயல்முறையில் பங்கெடுப்பு செய்யவும், உலகளாவிய சவால்களுக்கு எதிர்வினை ஆற்றவும் வழிவகை செய்தல்;

- தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை திறன்கள், பணிக்கும் தொழில்முனைவதற்கும், அதேபோல், மனனம் செய்து கற்றலுக்குப் பதிலாக அவர்களின் படைப்பாற்றல் மற்றும் புதிதுபுனையும் ஆற்றலையும், திறனாய்வு சிந்தனையையும், திறம்பட பிறருடன் கலந்துரையாடவும், பிரச்சினைகளை தன்னிச்சையாக தீர்க்கும் ஆற்றலையும், தேசிய வளர்ச்சி செயல்முறையில் பங்களிப்பு செய்ய வைக்கும் திறன்களும் தகுதிகளும்

ஆகியவற்றை அனைத்து மாணவர்களும் பெறுதலை முன்னெடுத்துச் செல்ல இது துணைபுரிகிறது.

**இலக்குகளும் நோக்கங்களும்**

தரமான மற்றும் பொருத்தமான கல்வியைப் பேணிவளர்ப்பதுதான் ஒட்டமொத்த இலக்காக இருக்கிறது. இதில் இந்திய கல்வி அமைப்பின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதும், பள்ளி மற்றும் உயர்கல்வி பயின்ற மாணவர்களிடையே பணிக்குச் செல்வதற்கான தகுதியை மேம்படுத்துவதும், கல்வியை அனைவருக்கும், அதாவது குழந்தைப்பருவக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி வரை, சமநிலையில் எளிதில் கிடைப்பதை உறுதிசெய்வதும், அதில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்படிப்பும் பயிற்சியும் மேலும் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கற்றல் வாய்ப்புக்களை வழங்குதலும், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் கல்விக்கான வாய்ப்புக்கள் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்வதும் அடங்கும்.

தொலைநோக்கு மற்றும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கல்வியின் முக்கிய நோக்கங்கள்:

- குழந்தைகள் பள்ளிக்கு முந்தைய கல்வியிலிருந்து தொடக்க்க்கல்விக்கு எளிதாக மாறுவதற்கு தேவையான கற்றல் மற்றும் வளர்ச்சிசார் தயாரிப்புகளை 4-5 வயதுள்ள அனைத்து குழந்தைகளும், குறிப்பாக பின்தங்கிய மக்கள் குழுக்களிடமிருந்து வரும் குழந்தைகள், பெறுவதை உறுதிசெய்யத் தொடக்க குழந்தைப்பருவ கல்விச் சேவையை விரிவுபடுத்துதல்;

- அனைவருக்குமான தொடக்க்க் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி பெறுதல், உயர்நிலைக் கல்வி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி எளிதில் கிடைப்பதை உறுதி செய்தலும், உயர்நிலை கல்வி பெறுகிற அனைத்து மாணவர்களுக்கும் சரிநிலை உயர்கல்வி எளிதில் கிடைப்பதை உறுதி செய்தலும், கல்வி கற்கச் சேர்ந்துள்ள அனைத்து மாணவர்களும் எதிர்பார்க்கப்பட்ட கற்றல் பயன்களைப் பெறவும் வெற்றிகரமாக கற்றலை நிறைவுசெய்யவும் ஆதரவு அளிக்கப்படுகிறது.

- அனைத்துக் கல்வித் திட்டங்களும் எளிதில் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்தல், இது பலவகை குழுக்களைச் சேர்ந்த பின்தங்கிய மக்கள் குழுக்களிலிருந்து வரும் மாணவர்களுக்குச் சிறப்பு கவனமும், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் தேவைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், பதிலளிக்கவும், குறிப்பாக, குழந்தைகள், வயதுவந்தோர் மற்றும் சிறப்பு தேவைகள் உள்ள இளைஞர்கள், பலவகையான ஊனமுற்றவர்கள் என கல்வி பயில்வதற்குச் சேர்ந்துள்ள அனைத்து மாணவர்களும் எதிர்பார்க்கப்பட்ட கற்றல் பயன்களைப் பெற ஆதரவளிக்கப்படுகிறது.

- கல்வியில் உள்ள சமூக, மண்டல மற்றும் பாலின இடைவெளி ஒழிக்கப்படுவதை உறுதிசெய்தல், பாலின சமத்துவம் மற்றும் இளம்பெண்கள் மற்றும் பெண்களுக்கான அதிகாரங்கள் கல்வி முறை முழுவதும் முன்னெடுத்துச் செல்லுதலை உறுதிசெய்தல்;

- திறன் மேம்பாட்டிற்கும், பணிக்கும் வாழ்க்கைக்குமான திறன்களையும் தகுதிகளையும் இளைஞர்களும் வயதுவந்தோர்களும் பெறுவதை உறுதிசெய்தல், மாறிகொண்டே வரும் உலகில் தன்னை தகவமைத்துகொள்ளவும், பணிக்கும் தொழில்முனையவும், பணிக்கு

வேண்டிய தகுதியைப் பெறத் தேவையான தொழில்நுட்ப மற்றும் தொழில்படிப்பு திறன்களையும் உள்ளடக்கிய வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.

- முறைசார் கல்வியைச் சாராத இளைஞர்கள் (14-24 வயது) மற்றும் வயதுவந்தவர்கள் (14 வயதும் அதற்கு மேலும்), பொருளாதாரத்தில் முறைசாராப் பிரிவுகளில் பணியாற்றுகிற நபர்களுக்கும் பணித்தகுதிக்குத் தேவையான திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படுவது உறுதிசெய்யப்படுகிறது.

- கல்லூரிக் கல்வி எளிதில் சமநிலையில் கிடைப்பதையும், அதில் தொழில்நுட்ப, தொழில்முறைக் கல்வி கிடைப்பதையும், உயர்கல்வி எளிதில் கிடைப்பதில் குறுகிய குழுக்களுக்கு உள்ள சமநிலையின்மை, கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல், புதிதுபுனைவு மற்றும் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் புதிய அறிவினை உண்டுபண்ணுதல், மேலும் கற்றலில் சேர்ந்துள்ள அனைவரும் குறிப்பிட்ட கற்றல் பயன்களையும் பணிதகுதிக்குத் தேவையான திறன்களையும் பெற உயர்கல்வி முறையில் சீர்திருத்தம் செய்தல்;

- கல்வியில் செய்தி மற்றும் தகவல் தொழில்நுட்பங்களில் (ICT) ஒத்திசைவை உறுதிசெய்தல், குறிப்பாக கல்வி எளிதில் கிடைப்பதை மேம்படுத்துதல், கற்பித்தல்-கற்றல் செயல்முறையில் உள்ள தரத்தினை மேம்படுத்துதல், ஆசிரியர்களுக்கான பயிற்சி, மற்றும் கல்விசார் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தினை வலிமைபடுத்துதலை உறுதிசெய்தல்.

- ஆசிரியர்களின் தொடர் பணிசார் வளர்ச்சியை உள்ளடக்கிய, ஆசிரியர் மேம்பாடு மற்றும் நிர்வாகமுறைகளை உறுதிசெய்யவும், அதில் ஆசிரியருக்காக பரிந்துரைக்கப் பட்டுள்ள

தகுதியும், பணிசார் தரமும் கொண்டுள்ள தகுதிபெற்ற மற்றும் திறைமை யான ஆசிரியர்களை போதுமான அளவிற்கு வழங்குவதை உறுதிசெய்தல் போன்றவை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

- வயதுவந்தோர் கல்வித் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள எழுத்தறிவும், எண் திறன்களையும் பெற, அனைத்து இளைஞர்கள் மற்றும் வயதுவந்தோரில் குறைந்தபட்சம் 90 % பேர்களும், ஆண்கள் பெண்கள் இருவரும், பெறுவதை உறுதிசெய்தல்;

- தேசியளவிலான, தேசத்திற்குள்ளான மற்றும் உள்ளூர் அளவிலான கல்விப் பிரிவின் திட்டமிடுதலுக்கும் மேலாண்மைக்குமான திட்டமிடுதலும், மேலாண்மை செயற்கட்டமைப்புகளும் மேம்படுத்தப்படுவதை உறுதிசெய்து வளர்ந்துவரும் கல்வி முன்னுரிமைகளுக்கும் கல்விப் பிரிவின் விரிவாக்கத்திற்குமான தேவைகளுக்கும் கூடுதலாகப் பதிலளிப்பதற்கென ஒரு பதிலளிக்கக்கூடிய பங்களிப்பை அளிக்கும் மற்றும் பொறுப்புள்ள அமைப்புகளான கல்வி திட்டமிடுதலையும், ஆளுகை மற்றும் மேலாண்மையையும் நிறுவனமாக்குதல்;

- தேசியளவிலான, தேசத்திற்குள்ளான மற்றும் நிறுவன அளவிலான கல்விப் பிரிவின் தலைமைத்துவத்தை உறுதிபடுத்துதல், வளர்ந்துவரும் கல்வி முன்னுரிமைகளுக்கும் கல்வி பிரிவின் விரிவாக்கத்திற்கான தேவைகளுக்கு பதிலளிக்கவும் நிறுவன தலைமைத்துவத்தின் திறனை மேம்படுத்தி நிபுணத்துவம் அடையச் செய்தல்;

- கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகரிக்கப்பட்ட , நல்ல இலக்குள்ள நிதியினை உறுதிசெய்தல்.

எதிர்கால கல்வித் திட்டத்தின் செயல்நோக்கமானது நீண்டகால மற்றும் துறை-பரவலாக்கப் பார்வையில் உறுதியாக உள்ளது. பணி உலகிற்குத் தேவைப்படுகிற திறன்களோடு தொடர்புடைய மற்றும் கற்பவர்களின் தேர்வு மற்றும் திறனைப் பொருத்து கற்றலுக்கான பல்வேறு வழிகளை எளிமைப்படுத்த கல்விக்கான வாய்ப்பினை அதிகப்படுத்த இந்தக் கல்விக் கொள்கை முயலுகிறது. இதில் திறந்தநிலை மற்றும் தொலைத்தூர கற்றல் முறைமைகளை உள்ளடக்கிய, முறைசார் மற்றும் முறைசார கற்றல் முறைகளின் மூலமாக கற்பவர்கள் கற்றல் பயன்களை அங்கீகரிக்கவும் சான்றளிக்கவும் உறுதியளிப்பதையும் இக்கொள்கை எதிர்நோக்குகிறது.

# இயல்-4
## கொள்கை வடிவமைப்பு

திட்டமான நடவடிக்கைகளின் மூலம் யதார்த்தத்தில் சாத்தியப்படுத்தவேண்டிய நோக்கத்தையும், சவால்களையும், கொள்கை குறிக்கோள்களையும் பற்றி இதற்கு முன்னுள்ள பிரிவுகளில் கோடிட்டுக் காட்டியுள்ளோம் இவற்றில் பெரும்பாலான நடவடிக்கைகள் பல வருடங்களாகவும், வேறு சில பல பத்தாண்டுகளாகவும், இதுவரையிலும் கூட நடந்துகொண்டுதான் இருக்கின்றன. பல மாநிலங்களுக்கிடையே பரவியிருக்கும் நம்முடைய கல்வி அமைவுச்சூழலின் பெருத்த அளவினையும், பல்முகத்தன்மை கொண்ட அதன் உட்கிளை அமைப்புகளையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், மாற்றம் வருத்துவதற்கான முரசை முழங்க முயற்சித்தாலும், அடைதலுக்கும், உட்படுத்துதலுக்கும், சிறப்புதரத்திற்குமான பலவகை சவால்களுக்கு பதிலளிக்கக் கூடிய ஒரு தீர்வோ சரிசெய்தலோ இல்லை. உட்படுத்துதலை அதிகரிக்கவும், அடைதலுக்கான வழிகளை விரிவாக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ள முயற்சிகளின் பலன்களை நாடு கண்டுகொண்டிருக்கும் வேளையில், இந்த கொள்கையின் முக்கிய உந்துதல் கல்வியின் தரத்தின் மீதுதான் உள்ளது. பணிக்குத் தகுதியாக்கம் அதிகமாகக் கண்டுகொள்ளப்பட வேண்டிய ஒன்று. அதற்கும் போதுமான கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பிலுள்ள உலகளவிலான மாற்றங்களினாலும் தொழில்நுட்ப முன்னேற்றங்களினாலும், பல்வேறு குறிக்கோள்களைச் சாத்தியமாக்க சில புதிய பகுதிகளும் கொணரப்பட்டுள்ளன.

நடுவண், மாநில/யூனியன் பகுதி மற்றும் உள்ளூர் அளவினான அனைத்து ஆட்சிப் படிநிலைகளும் அடையாளம் காணப்பட்டு அவை ஒவ்வொன்றிற்கான நடைமுறைப் படுத்தலுக்கான உத்திகள் குறிக்கப்பட்ட செயல்முறைகான ஒரு வடிவமைப்பு உருவாக்கப்படும். குறிப்பாக, தேசிய கல்விக்

கொள்கையுடன் சீராக ஒத்துப்போகின்ற உத்திகளையும் செயல் திட்ட்ங்களையும் மாநிலங்களும் உள்ளூர் ஆட்சி அமைப்புகளும் அவர்களே உருவாக்கிக்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள்.

முக்கியமான பகுதிகளும், அவை ஒவ்வொன்றிலும் நடைபெற வேண்டிய செயல்களும் பின்வரும் பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. வேண்டிய அனைத்தையும் இதில் உள்ளடக்கிவிடமுடியாது என்பது தெரிந்ததே. செய்யவேண்டிய விஷயங்கள் பிற்காலத்தில் கூட உருவாக்கப்படலாம்.

**வ . உள்ளடக்கம்**

**எண்**

4.1 **பள்ளிக்கு முந்தைய கல்வி**

அரசு பள்ளிகள் துவக்கப் பள்ளிக்கு முந்தைய கல்வியை அளிக்காததால் பள்ளிக்கு முந்தைய கல்வியில் கடந்த காலத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிக்கான சேவை ( Integrated Child Development Services-ICDS) தொடக்ககால குழந்தைப்பருவத்திற்கான கல்வியை வழங்குவதற்கானது. குழந்தையின் மன மற்றும் உடல் வளர்ச்சி மிகவும் அதிகமாக இருக்கும் குழந்தையின் தொடக்ககால குழந்தை பருவ ஆண்டுகள் மிகமிக முக்கியமானவை என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. முன்னுரிமை கொடுக்கபட்டதாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து 4 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான பள்ளிக்கு முந்தைய கல்வி திட்டம் ஒன்று செயலாக்கப்படும்.

2. தற்சமயம், ICDS ற்கு கீழுள்ள பால்/அங்கன்வாடிகளுக்கு பள்ளிக்கு முந்தைய கல்வியை வழங்குவதற்கான வசதிகள் இல்லை. அங்கன்வாடிகளில் பள்ளிக்கு முந்தைய கல்வியை உறுதிப்படுத்த, ஒருவருடத்திற்குள் கல்வித்திட்டத்தை வடிவமைத்து பாடப்பொருட்களை உருவாக்கி அங்கன்வாடி ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க மாநிலங்களுடன் கலந்தாலோசித்து முயற்சிகள் எடுக்கப்படும்.

3. மாநில அரசுகள் துவக்கக் கல்விக்கு முந்தைய ஆசிரியர் பதவிக்கானவர்களை தயார்படுத்தி பணிக்கு முந்தைய மற்றும் பணியிருப்புப் பயிற்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும். அங்கன்வாடியிலிருந்து துவக்ககல்விக்கு முந்தைய பள்ளிக்கான மாற்றம் சீர்மாற்றம் கொண்டதாகவும் இடைவெளிகள் இல்லாததாகவும் இருக்கும். இதை அடைவதற்கான நேரத்தை கணக்கிடுவதை அந்தந்த மாநிலங்களுக்கு விட்டுவிட வேண்டும்.

4. காலப்போக்கில், துவக்கப் பள்ளிகள் அனைத்துமே பள்ளிக்கு முந்தைய கல்வியையும் வழங்கும். இதற்கென, அனைத்து அங்கன்வாடிகளையும் பள்ளி வளாகங்களுக்குள்ளோ அல்லது அருகிலோ அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

5. தனியார் பள்ளிகளுக்கு பொருத்தமான ஒழுங்குமுறைகளுக்கும் கண்காணிப்புக்குமான விதிகளும் இயக்கு நுட்பங்களும் வரையப்படும்.

### 4.2 குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான கல்வி உரிமைகளின் பாதுகாப்பு

குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், குழந்தைகளின் தனிப்பட்ட பாதுகாப்பைவிட விரிந்தது. உளரீதியான மற்றும் உடல்ரீதியான தொல்லைகள் இல்லாமை, பாதுகாப்பான கட்டமைப்பின் மூலம் பள்ளி நடவடிக்கைகளில் தீங்குகள் நேராமலிருக்க முன்னெச்சரிக்கைகள், குழந்தைகளிடம் பரிவுள்ள மொழியில் பேசுதல் மற்றும் செயல்கள் புரிதல், வேற்றுமை பாராட்டாமை, உடல்ரீதியான தீங்கிழைத்தல், போதைப்பொருள் பயன்படுத்துதல், வன்கொடுமைகள் போன்ற உடல்ரீதியான தண்டனைகளைத் தடுப்பதும் இதில் அடங்கும். இது குழந்தைகள் உரிமைகளைக் கருத்தில் கொண்டு ஏற்றபடி உள்ள தக்க சூழலை உருவாக்குவதை வலியுறுத்துகிறது. குழந்தைகளின் உடல் மற்றும் உளரீதியான பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் குழந்தைகளின் உரிமைகளை மீறுவதை எவ்விதத்திலும் பொறுத்துக்கொள்ளாத அணுகுமுறை கடைபிடிக்கப்படும்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. பள்ளியில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான வடிவமைப்புகளும் வழிகாட்டும் நெறிகளும் உருவாக்கப்படும். ஒரு பள்ளிக் கல்வி நிறுவனம் அங்கீகார உரிமைபெற இவை தகுதி நிபந்தனைகளாக்கப்படும்.

2. குழந்தைகள் உரிமைகள் தொடர்பான அனைத்து ஆணைகள், சட்டங்கள், ஒழுங்குமுறை விதிகளில் அனுமதிக்கப்படுபவை பற்றி ஒவ்வொரு முதல்வருக்கும் ஆசிரியருக்கும் தெரியப்படுத்தப்படும். இவைகளை மீறுதல் என்றால் என்ன என்பது பற்றி ஆசிரியர் கல்வி/பயிற்சி திட்டங்களிலும் புத்தாக்கப் பாடங்களிலும் பாடப்பகுதிகள் உருவாக்கப்படும்.

3. வளரிளம்பருவக் கல்வி திட்டமும் தேசிய மக்கள்தொகை கல்வி திட்டமும் பள்ளிகளின் கலைத்திட்டத்தில் கொஞ்சம்கொஞ்சமாக ஒருங்கிணைக்கப்படும்.

4. உயர்நிலை பள்ளி ஆசிரியர்களுக்கான பணிக்கு முந்தைய மற்றும் பணியிருப்புப் பயிற்சித் திட்டங்களில் வளரிளம்பருவக் கல்வி சேர்க்கப்படும்.

5. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குப் பயன்படக்கூடிய குழந்தை உரிமைகள் பற்றிய தாமே பயிலக்கூடிய இணைய பாடங்களும் உருவாக்கப்படும்.

6. வளர்ந்து வரும் மாணவர்களும் மாணவிகளும் எதிர்கொள்ளும் வளரிளம்பருவப் பிரச்சினைகளைப் பற்றி பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் தனிப்பட்ட விதத்தில் அறிவுரைகூற பயிற்ச்சிபெற்ற அறிவுரையாளர்கள் பள்ளிகளால் ஏற்பாடுசெய்யப்படுவர்.

4.3 **பள்ளிக்கல்வியில் கற்றல் பயன்கள்**

ஆரம்பக்கல்வியில் குறைந்த அளவு கற்றல் பயன்கள் கிடைப்பது மிகவும் கவலைக்குரிய விஷயமாகவே உள்ளது. பள்ளிக்கல்வியின்போது வாசித்தல், எழுதுதல் மற்றும் எண்கூட்டல் ஆகிய அடிப்படை திறமைகளைக் குழந்தைகள் கற்றுக்கொள்ளாமலிருப்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மாநிலங்கள், கற்றல் பயன்களை வரையறுக்கவும் அளவிடவும், மேலும், ஆரம்ப வகுப்புகளிலேயே வாசித்தல், எழுதுதல், புரிந்துகொள்ளுதல் மற்றும் கணித பாடங்களை மேம்படுத்துதல் போன்ற தொடக்க முயற்சிகளை எடுத்துள்ளன. ஆனால், இப்படிப்பட்ட முயற்சிகளுக்குப் பின்னரும் குறைந்த அளவு கற்றல் பயன்கள் கிடைப்பது ஒரு சவாலாகத்தான் உள்ளது. எனவே, ஆரம்பக் கல்வியின்

தரத்தை சீர்படுத்தும் வகையில் பள்ளிக்குழந்தைகளின் கற்றல் பயன்களை மேம்படுத்துவது மாநில மற்றும் நடுவண் அரசின் முன்னுரிமை பெற்ற பணிகளாகின்றன.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. கல்விக்கான உரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட விதிமுறைகளுடன் சேர்த்து, கற்றல் பயன்களுக்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டு தனியார் மற்றும் அரசு பள்ளிகள் இரண்டிலும் ஒரே சீராக பயன்பாட்டிற்கு கொணரப்படும்.

2. கல்விக்கான உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குள், உள்ளூர் சூழல்களுக்கேற்ப கட்டமைப்பை வடிவமைக்கவும் திட்டமிடவும் போதுமான வாய்ப்புகள் மாநிலங்களுக்குக் கிடைக்கும். வசதிவாய்ப்புகளில்லாமல் மிகவும் பின்தங்கிய, இடம்பெயர்ந்து வாழும் குழந்தைகள், மேலும், மிகக்கடினமான சூழ்நிலைகளில் வாழ்பவர்கள் ஆகியோருக்கான கல்வி வழங்க இடைபடும் 'மாற்றுப் பள்ளி' களுக்காக உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்ற உள்ளூர் விதிமுறைகள் வகுக்கப்படும். இதற்கென அவசியமானால், கல்விக்கான உரிமைச் சட்டத்தில் திருத்தங்களும் கொணரப்படும்.

3. மாணவர்களுடய கல்வி திறமையைத் தீவிரமாக பாதித்துள்ளதால், தற்போதுள்ள 'அனைவரையும் தேர்ச்சி பெறச்செய்தல்' கொள்கையிலும் மாற்றங்கள் கொணரப்படும். அனைவரையும் தேர்ச்சி பெறச்செய்யும் கொள்கை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்தப்படும். நடுநிலைப்பள்ளி அளவில் தேர்ச்சி பெறாமை முறை மீண்டும் கொணரப்படும்.

குறைதீர்க்கும் வகை சிறப்பு பாடங்கள் நடத்தப்படுவதற்கு, CCEயின் அடிப்படையில் கல்விப் பயிலலில் பின்தங்கிய மாணவர்கள் அடையாளம் காணப்படுவர்

4. இணைய-மின் வளங்களையும் சேர்த்து, அறிவிற்கான பல்வகை வளங்களுக்கான அணுகுவழிகளை வழங்கவும், சிறப்பு கல்வி ஆதரவு வழங்கி குழந்தைகளை ஆதரிக்க இயங்குநுட்பங்களையும் உருவாக்கிப் பள்ளிகளில் பயிற்றுவிக்கும் தரத்தை உயர்த்த பயனுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 4.4 பள்ளிக்கல்வி

அனைவருக்கும் ஆரம்பக் கல்வி ( Universal Elementary Education - UEE) என்பது சாத்தியமாகி வரும் நிலையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை விரிவுபடுத்துதல் தவிர்க்க முடியாதது. தகுதியுள்ள மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள, நிறுவனத்தின் இடம் மற்றும் மேலாண்மை எப்படிப்பட்டதானாலும், குறிப்பிட்டு வரையறுக்கப்பட்ட தரங்களிலான உயர்நிலைப் பள்ளிக் கல்வி அமைப்பு உருவாக்கப்படுவது இதற்கு அவசியம். உயர்நிலைப் பள்ளி அளவில் மாணவர்களைப் பள்ளிகளில் தக்கவைப்பதற்கும், அடுத்த நிலைகளுக்கு அனுப்புவதற்குமான வீதங்களை மேம்படுத்துவதில் சவால்கள் உள்ளன. தற்போதுள்ள தேர்வு முறைகளிலும் பலவகையான குறைகளும் தவறுகளும் நிறைந்துள்ளன. தேர்வுகளை நியாயமாகவும், தெளிவான முறையிலும் நடத்துவதற்கான முயற்சிகள் சில மாநிலங்களில் எடுக்கப்பட்டுள்ளதானாலும், பொதுவான சூழலில் நிறைய மாற்றங்கள் அவசியமாயுள்ளன.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. மாணவர் சேர்க்கை குறைவாகவும், போதிய கட்டமைப்புகள் இல்லாதவையாகவும் இருக்கும் பள்ளிகளை அடையாளங்கண்டு பதிவு செய்ய ஒவ்வொரு மாநிலமும் விரிவான முயற்சிகளை மேற்கொள்ளும். எங்கு முடிந்தாலும், தற்போதிருக்கும் செயல்படாத பள்ளிகளை பல பகுதிகளை இணைத்து மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதனால் மனிதர்கள், பொருள்சார் கட்டமைப்பு வசதிகள் ஆகியவை அனுகூலமாகப் பயன்படும். இதனால் கல்விச் செயல்பாடுகளும் செலவு கட்டுப்பாடு மேலாண்மையும் சிறப்பாக அமையும். பள்ளிகள் இணைக்கப்படும்போது, அவைகளை ஒரே வளாகத்திற்குள்ளாக அமைக்கலாம். கல்விக்கான உரிமைச் சட்டத்தின் நிபந்தனைகளை மாற்றாமல், இணைப்பதற்கும், கூட்டிச் சேர்ப்பதற்குமான பொதுவான வழிமுறைகள், மாநிலங்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்படும். இப்படியாகத் தொகுத்தல், ஒரு வகுப்பு-ஒரு மாணவர் என்கிற நிலையை குறுகிய வருங்காலத்தில் நாடு அடைய வழிவகுக்கும்.

2. பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவுகளுக்கான அரசுக் கடமைகளின் கண்ணோட்டத்தில் கல்விக்கான உரிமைச் சட்டத்தின் விதி 12 (1) (c) யை அரசு நிதி உதவிபெறும் சிறுபான்மை நிறுவனங்களுக்கும் நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

3. உயர்நிலைப் பள்ளிக்கல்வியையும் சேர்த்துக்கொள்ளும் வகையில் கல்விக்கான உரிமைச் சட்டத்தின் வயது வரம்பை பொருத்தமாக உயர்த்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

4. பள்ளிக்கல்வியின் அனைத்து நிலைகளிலும் வசதிகள் வழங்கப்படவும், மாணவர்கள் வெளிவருதலுக்குமான குறைந்தபட்ச தரங்கள் வகுக்கப்படும்.

5. கேந்திரிய வித்தியாலயாக்களும் (KVs), ஜவஹர் நவோதய வித்தியாலயாக்களும் (JNVs) விரிவாக்கப்படும். மேலும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்தியாலயாக்களும் ( KGBVs) விரிவுபடுத்தப்பட்டு மேம்படுத்தப்படும். குறிப்பாக, கல்விரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு உயர்நிலைப் பள்ளி அளவிற்கு உயர்த்தப்படும். JNVக்களின் வெற்றிக்கான காரணங்கள் ஆயப்பட்டு அவை மாநிலங்களால் பின்பற்றப்படும்.

6. குழந்தை தொழிலாளர்கள், பள்ளி விட்டுவிடுபவர்கள் ஆகியோரின் வசதிக்காக முழுநேரமும் இருக்க அவசியமான முறையான பள்ளிகளில் சேராமல் படிக்க திறந்த அமைப்பு பள்ளிகளின் வசதிகள் விரிவாக்கப்படும்.

7. தங்களுடைய விருப்பங்கள் மற்றும் இயல்நாட்டங்களின் அடிப்படையில் சரியான கல்வித்தேர்வுகளை செய்யமுடியாத நிலை பலவேளைகளில் மாணவர்களுக்கு நேரிடுகிறது. இதனால் அவர்கள் உண்மையான திறமைக்குத்தக்க பயனை வெளிப்படுத்த முடியாமல் போகிறது. அழுத்தமும், ஏமாற்றமும், குறைந்த அடைதலும் மட்டுமே மிஞ்சும். மாணவர்கள் தங்களுடைய உண்மையான ஆற்றல்களையும் நாட்டப் பகுதிகளையும் அடையாளங்காண கல்விசார் இயல்நாட்டத் தேர்வுகளைப் பல படிநிலைகளிலும் நடத்தப்படும். இப்படிப்பட்ட குறைவுகளை மேற்கொள்ள பள்ளிகளில் தொலைபேசி ஆலோசனை பெறுவதற்கான இணைப்புகள் கொடுக்கப்பட்டு தொழில்துறை ஆலோசகர்கள் அதற்கென அமர்த்தப்படுவர். சிறப்பு கற்றல் தேவைகள் உள்ள குழந்தைகளை அடையாளங்காணவும், கற்பதில் தாமதிப்பவர்களுக்கும், குறைந்த அடைதல் உள்ளவர்களுக்கும் உதவவும், திறன்சார்

பாடங்களுள்ள தொழிற்கல்வி படிப்புகளை சரியாகத் தேர்ந்தெடுப்பதில் உதவவும், உயர்நிலைப் பள்ளி மற்றும் மேனிலைப்பள்ளி மாணவர்களுக்கு தக்க வேலைவாய்ப்பு வசதிகளைக் குறித்த ஆலோசனை வழங்கவும் இது உதவும்.

## 4.5 கலைத்திட்டம் புதுப்பித்தலும் தேர்வுமுறைச் சீர்திருத்தங்களும்

சுவாமி விவேகானந்தர் உரைத்தது, *“கல்வி என்பது உங்களுடைய மூளையில் சேர்க்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் ஜீரணமாகாமல், கலவரம் பண்ணும் செய்திகளின் அளவு அல்ல. வாழ்க்கையைக் கட்டியெழுப்புகிற, மனிதரை உருவாக்குகிற, பண்பு நலப்படுத்துகிறதற்கான கருத்துகளின் சங்கமத்தை நாம் கொண்டிருக்கவேண்டும். ஐந்து கருத்துக்களைச் உள்வாங்கி அவற்றை உங்கள் வாழ்க்கையாகவும் இயற்பண்பாகவும் மாற்றிக்கொள்வீர்களானால், ஒரு நூலகத்தையே மனப்பாடம் செய்த எந்தவொரு மனிதனைவிட உங்கள் கல்வி சிறந்தது. …. கல்வி என்பது செய்திகளுக்கு மட்டும் முழுத்தொத்ததாக இருக்குமானால், நூலகங்கங்கள்தான் இந்த உலகத்திலேயே பெரிய முனிவர்களாகவும், கலைக்களஞ்சியங்கள் மிகச் சிறந்த ரிஷிகளாகவும் இருக்கும்.”* இணையம் தோன்றியதும், எங்கும் எண்ணிலக்க (டிஜிட்டல்) இணைப்புகள் பெருகிவருவதுமான இந்நாட்களில் சுவாமி விவேகானந்தரின் கூற்று மிக முக்கியமான ஒன்றாகிறது. இப்போது நாம் நூலகங்களுக்குச் செல்ல கூட அவசியமில்லை. சொடுக்கினாலே செய்திகள் கிடைத்துவிடும். எனவே செய்தியறிவுசார் கல்விமுறையிலிருந்து, நாட்டைக் கட்டியெழுப்பவும், மனிதரை உருவாக்குவதற்கும்

பங்களிக்கும் வாழ்க்கைத் திறன்களை அளிக்கும் மதிப்புசார் கல்வி முறைக்கு மாறவேண்டிய அவசியம் உருவாகியிருக்கிறது.

புதிதாக தோன்றியிருக்கும் கல்விப்பகுதிகளின் மீது அழுத்தம் தருமாறு கல்வியின் எல்லாப் படிநிலைகளிலும் கலைத்திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டிய அவசியமுள்ளது. உலகமயமாக்கலின் தாக்கத்திற்கும் எழும்பிவரும் அறிவுசார் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் பதிலளிப்பது, பல்வகை குழுக்களான மாணவர்களின் கல்வித்தேவையைச் சந்திப்பது, வாழ்க்கைத் திறன்களுக்கும், வேலை உலகத்திற்கும் கல்வியைத் தொடர்பு படுத்துவது, நிலைத்து நீடிக்கும் வளர்ச்சி பற்றி அக்கறை உருவாக்குவது, தனிநபருக்குத் தோதான, வாய்ப்புகளை தக்கபடி மாற்றியளிக்கக்கூடிய பயிற்றுவிக்கும் முறைகளுக்கு தகுந்த படி மாற்றிக்கொள்ளவது போன்றவற்றிக்கு மாணவர்களைத் தயார்செய்வது ஆகியவற்றைக் கலைத்திட்டம் சிறப்பு கவனப்பகுதிகளாகக் கொண்டிருக்கவேண்டும். உலகளாவிய அளவில் சிறப்பாகச் செயல்பட்டுவரும் கல்விமுறைகளில் மாணவர்களின் கற்றல் பயன்கள் இருக்குமளவு ஒப்பிடமுடியும்படியான சிறப்பு கற்றல் பயன்கள் அடைய மாணவர்களுக்கு கலைத்திட்டம் வாய்ப்புகளை வழங்க வேண்டும். கல்வியின் செயல்பாட்டிற்கும் கற்றல்பயன்களுக்குமான தரத்தையும் கலைத்திட்டம் வரையறுக்கவேண்டும். இதன் மூலம் கல்வியின் நோக்கங்கள் பயனுக்கு வருதலும், மேலும், இதை அடைவதை மதிப்பாய்வு/கண்காணிப்புச் செய்து கலைத்திட்டத்தை மீளாய்வு செய்து மேம்படுத்துவதற்கான விதத்திலும் அமையவேண்டும்.

கற்றல் பயன்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் என்ற பின்னனியில் மாணவரின் கற்றல் பயன்களை மதிப்பாய்வு செய்தலை மேம்படுத்துவது மிக முக்கியமான

விஷயமாகிறது. தொடர்ச்சியான தொடக்கம் மற்றும் கூட்டுமொத்த மதிப்பாய்வு, பருவ இறுதி மற்றும் ஆண்டு இறுதித் தேர்வுகள், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகள் ஆகியவற்றிற்கான அமைப்புகள் ஏற்கனவே உள்ளன. ஆனால், பள்ளி அளவில் மதிப்பாய்வு செயல்முறைகளின் ஒட்டுமொத்தம் என்று பார்க்கும்போது, அவை நிறைவு தருபனவாக இல்லை. கற்றலின் மதிப்பாய்வு என்பது பல வேளைகளில் பாடப்பொருள் அறிவை மாணவர்கள் எந்த அளவு திரும்ப எழுதுகிறார்கள் என்கிற திறனை சோதிப்பதுடன் நின்றுவிடுகிறது. நூலறிவு மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகள் ஆகிய இரண்டிற்கும் தொடர்புடைய கற்றல் பயன்களைச் சேர்த்த மாணவர்களின் ஒரு அனைத்தடக்க மதிப்பாய்வாக இருக்கும்படி மொத்த மதிப்பாய்வு முறையையும் மீறுசீரமைக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு, நூலறிவு மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகள் ஆகிய இரண்டிலும் மாணவர்களின் முன்னேற்றத்தை பதிவுசெய்து கண்காணிக்கும் படியான ஒரு அமைப்பை நிறுவனமயமாக்க வேண்டிய தேவையும் இருக்கிறது.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. எழும்பிவரும் பேராவல்களைத் திருப்திப்படுத்தவும், சமூக இணைப்புகள், சமய நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகிய நாட்டின் நோக்கங்களுடன் ஒத்துப்போகிற விதத்தில் கலைத்திட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். தொழில்நுட்பத்தை கூடுதலாகச் சார்ந்துவரும் சூழலில் வாழ்க்கைத் திறன்களை வழங்குவதன் மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்கப்படுத்தியதாகவும் விளைவு சார்ந்ததாகவும் கலைத்திட்டம் அமையவேண்டும்.

மாணவர்கள் அனைவரும் உலகிலும் நாட்டிலும் பொறுப்புள்ள குடிமகன்களாக உருவாக உதவும் வகையில் அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகிய இரண்டையும் கற்றுத் தர வேண்டும்.

2. பள்ளிக் கல்வியில் தரம் குறைந்து வரும் பிரச்சினையைத் தீர்த்தல், ஆராய்ந்தறிதலுக்கான உள்ளார்வத்தை ஊக்குவிக்கவும், மனப்பாடம் செய்து கற்றலிலிருந்து மாறி புரிதல் முறை உருவாகவும் கலைத்திட்டத்தையும், கற்பித்தல் முறைகளையும் காலமுறைதோறும் புதுப்பித்தலுக்கும் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழுவை ( National Council of Educational Research and Training - NCERT) மாற்றியமைக்கப்படும்.

3. அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்குத் தேசிய அளவிலான பொதுக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படும். சமூக அறிவியல் போன்ற மற்ற பாடங்களுக்கு கலைத்திட்டத்தின் ஒரு பகுதி நாடு முழுவதற்கும் பொதுவாக இருக்கும். மற்ற பகுதிகளை மாநிலங்களே தீர்மானிக்க விடப்படும்

4. ஐந்தாம் வகுப்பிலிருந்து கலைத்திட்டத்தில் எண்ணிலக்க ( டிஜிட்டல்) கல்விமுறை படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும். ஆனாலும், ICTயை ஒரு பாடமாக ஆறாம் வகுப்பிலிருந்து தொடங்கலாம். பயன்பாடு சார்ந்ததாக மாற்ற ICT கலைத்திட்டத்தின் எல்லா படிநிலைகளும் திருத்தப்படும்.

5. அறிவியல் கருத்துருகள் செய்து காட்டுதலின் வழியும் ஆய்வுக்கூட சோதனைகளின் வழியுமே சிறப்பாக புரிந்துகொள்ள முடிபவை என்பது நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட

ஒன்று. எனவே, அறிவியல் பாடங்களைக் கற்பிக்க ஆறாவது வகுப்பிலிருந்து செயல்முறைப் பகுதிகள் அறிமுகப்படுத்தப்படும்.

6. பாலின, சமூக, பண்பாட்டு மற்றும் மண்டல ஏற்றத்தாழ்வுகள் பற்றிய பிரச்சினைகள், வேற்றுமையில் ஒற்றுமைக்கு அழுத்தம்கொடுத்து, கலைத்திட்டத்திலும் அதன் செயலாக்கத்திலும் சரியான விதத்தில் நோக்கப்படும். சமூகப் பாகுபாட்டை தவிர்ப்பதற்காக சமூக நீதியும் சட்ட நடவடிக்கைகளும் பற்றிய பிரச்சினைகளை கலைத்திட்டம் உள்ளடக்கும். பாடநூல்கள் இசைவிணக்கத்தை ஊக்குவிப்பதாக இருக்கவும், பாலினம், ஊனங்கள், சாதி, சமயம் போன்றவை வரும் சூழல்களில் பாகுபாடு காட்டும் பிரச்சினைகள்/நிகழ்ச்சிகள்/எடுத்துக்காட்டுகள் இல்லாதவையாக இருக்கவும் கலைத்திட்டம் மற்றும் பாடநூல்கள் உருவாக்கும் முகமைகள் உறுதிசெய்யும். அனைத்துப் பாடபகுதிகளின் வழியிலும் குடிமக்கள் கல்வி, அமைதி கல்வி, பண்பை வளர்த்தல், சட்ட மற்றும் அரசியலமைப்பு படிப்பறிவு, நிதிசார் படிப்பறிவு, சுற்றுச் நீடிப்புத் திறம் மற்றும் பிற முக்கிய பகுதிகளும் ஊக்குவிக்கப்படும்.

7. நூலிலுள்ள பாடப்பொருளைத் திரும்ப எழுதுதல் என்கிற திறன் மட்டும் இல்லாமல் பரந்த விழிப்புணர்வு, அறிதல், புரிதல், மேல்நிலை பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்கள் ஆகிய அனைத்தையும் ஆய தேர்வுகள் வடிவமைக்கப்படும். தொடர்ச்சியான மதிப்பாய்வு, கேள்வித்தாள் அமைப்பதில் செந்தரங்கள், மதிப்பீடு செய்வதற்கான கூறுகளில் வெளிப்படை போன்றவை இதில் எடுக்கக்கூடிய சில முயற்சிகளாம். நெகிழ்வுத்தன்மையை அறிமுகப்படுத்தவும், ஆண்டிறுதித் தேர்வு அழுத்தத்தைக்

குறைக்கவும், வேண்டல் முறை பள்ளியிறுதித் தேர்வுகளை அறிமுகப்படுத்தவும் அரசு முயலும்.

8. கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் குறைவான மதிப்பெண்களே பத்தாம் வகுப்பில் தோல்வி வீதத்திற்கு பெரிய காரணமாகக் கூறப்படுகிறது. தோல்விவீதத்தைக் குறைக்க, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலத்தில் பத்தாம் வகுப்புத் தேர்வு இரண்டு படிநிலைகளில் இருக்கும்: பகுதி-A முதல்நிலை, பகுதி-B இரண்டாம்நிலை. அறிவியல், கணிதம் அல்லது ஆங்கிலப் பாடங்கள் கட்டாயமில்லாத படிப்புகளைத் தொடர விரும்பும் அல்லது பத்தாம் வகுப்பிற்குப்பின் தொழிற்கல்விப் பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்கள் இரண்டாம் நிலை தேர்வைத் தேர்ந்தெடுக்க முடியும்.

9. தற்போது, கல்விக்கான மாநில மற்றும் நடுவண் கழகங்கள் பத்தாம் வகுப்பிற்கு பன்னிரண்டாம் வகுப்பிற்குமான தேர்வுகளை நடத்துகின்றன. பள்ளி எந்த கழகத்துடன் இணைந்துள்ளதோ அதன் பள்ளியிறுதித் தேர்வை மாணவர்கள் எழுதவேண்டும். பத்தாம் வகுப்புப் பள்ளியிறுதித் தேர்வு பத்தாம் வகுப்புக்கான முழுபாடத்திட்டத்தையும் உள்ளடக்கும்.

10. கல்வியின் பல்வேறு படிநிலைக்களுக்கு பல்வேறு கழகங்கள் வழங்கும் சான்றிதழ்களின் தரத்திலும் மதிப்பிலும் பெரிய அளவிலான வேறுபாடுகள் இருக்கின்றன. மேலும், தேர்வு விழுக்காட்டை செயற்கையாக அதிகரிக்க பல தேர்வு கழகங்கள் சலுகை மதிப்பெண்களை வழங்குவதாகவும் புகார்கள் உள்ளன. இப்பழக்கத்தை நிறுத்தவேண்டும் என்பது மட்டுமல்ல, மாறாக, பல்வேறு கழகங்களில்

கற்று வெளிவரும் மாணவர்களின் அடைதல் நிலைகளை, கூடுமானால், பல ஆண்டுகளின் நிலைகளை ஒப்பீடு செய்வதற்கான ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும். மாற்றுமுறைகளில், ஸ்கேலிங் (scaling) என்பது ஒன்று. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு இறுதியில் நாடுதழுவிய தேர்வு வைப்பது அல்லது, ஒவ்வொரு கழகத்தில் நூற்றுமானக் கூறுகளில் மதிப்பெண்களை அறிவித்தல் ஆகியவை வேறுசில மாற்றுமுறைகளாகும். மாணவர்களின் அடைதல் நிலைகளைக் குறிக்க ஒரு தீர்வை பரிந்துரைக்க அனைத்து வழிகளையும் ஒரு கல்விசார் வல்லுநர்களின் குழு ஆராயும்.

11. கழகம் பெயர்தல் சான்றிதழ், பள்ளி விடுகை சான்றிதழ் போன்றவற்றை நிறுத்திவிடுவது போன்ற வழிமுறை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இது மாணவர்கள் ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொன்றிற்கு மாறுவதை ஊக்குவிக்கும்.

## 4.6 உள்ளடக்கிய கல்வியும் மாணவர்கள் ஆதரவும்

உருவாகிவரும் அறிவுப் பொருளாதாரச் சூழலில் வெற்றியடைய தரம் மற்றும் சமத்துவத்தை அடித்தளமாகக் கொண்ட ஒரு கல்வி முறையே மையமுக்கியமானது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. சிறப்புத் தேவைகளுள்ள மாணவர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினருடைய கல்வித் தேவைகளை வழங்க ஒரு உள்ளடக்கிய கல்விகான பன்முகச் சூழலை தற்போதைய கல்விமுறை, குறிப்பாக, ஊரகப் பகுதிகளில் உருவாக்குவதில்லை. சமீப காலமாக ஊரகப்பகுதிகளில் கல்விக்கான அணுகுவழிகள் மேம்பட்டிருந்தாலும், கல்விக்கான வாய்ப்புகளில் சமமின்மையால் சமூகம் அல்லது பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவுகளிலிருந்து வரும் மாணவர்கள் அதிகப்பட்ச

தடைகளை சந்திக்கிறார்கள். இவை அதிகமாக சமூகம் மற்றும் சூழல் காரணங்களிலிருந்து உருவாகின்றன.

பழங்குடிக் குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் கல்வி அளவு தீவிரமான கவலைக்குரியதாக இருக்கிறது. பழங்குடிக் குழந்தைகளின் முக்கியமான பிரச்சினைகளான குறைந்த படிப்பறிவு வீதங்கள், குறைந்த சேர்க்கை வீதங்கள், அதிகளவு பள்ளி விடுகைநிலை, அதிகளவு குழந்தை இறப்பு ஆகிய தீவிரமான பிரச்சினைகள் தீர்வுகாணப்படவேண்டும். படிப்புதவித் தொகை போன்ற அனைத்து முயற்சிகளையும் நடுவண் அரசும் மாநில அரசுகளும் மேற்கொண்டிருந்தாலும், பழங்குடி மக்களுக்கான கல்வி நிலை திருப்திகரமானதாக இல்லை. பழங்குடி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் குறைவுக்கு பழங்குடிப் பகுதிகளில் பணிபுரிய ஆசிரியர்கள் இல்லாமைதான் முக்கியமான காரணம். பழங்குடிப் பகுதிகளில் பணிபுரியும் பழங்குடி இனத்தவரல்லா ஆசிரியர்களுக்கு மொழியும் உரையாடுவதும் ஒரு பிரச்சனையாக உள்ளது.

படிப்புதவித் தொகை அல்லது கடன்கள் மூலம் படிப்பிற்கான செலவுகளைச் சந்திக்க உறுதிசெய்யும் இயங்குநுட்பங்கள் நன்றாகப் படிக்கும் மாணவர்கள் படிப்பைத் தொடர உதவலாம்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. பாலின, சமூக, பண்பாட்டு மற்றும் மண்டல ஏற்றத்தாழ்வுகள் பற்றிய பிரச்சினைகள், வேற்றுமையில் ஒற்றுமைக்கு அழுத்தம்கொடுத்து, கலைத்திட்டத்திலும் அதன் செயலாக்கத்திலும் சரியான விதத்தில் நோக்கப்படும். சமூகப் பாகுபாட்டை

தவிர்ப்பதற்காக சமூக நீதியும் சட்ட நடவடிக்கைகளும் பற்றிய பிரச்சினைகளை கலைத்திட்டம் உள்ளடக்கும்.

2. மாணவர்களிடம் உழைப்பின் பெருமையையும் திறன்களை வளர்த்தலையும் குறித்த ஒரு மகிழ்நோக்கு மனப்பான்மை உருவாக்க தொடக்க நிலைகளிலிருந்தே தொழிற்கல்விக்கு முந்தைய விஷயங்களின் நடவடிக்கைகளை கலைத்திட்டத்தில் இணைக்கப்படும்.

3. நன்றாகப் படிப்பதையும் சமத்துவத்தையும் உருவாக்கும் ஒரு நோக்கத்தில், முதன்மையாகக் கல்விக் கட்டணம், பாடப் பொருட்கள் மற்றும் தங்கும் செலவு ஆகியவற்றிற்கான உதவியாக ஒரு தேசிய ஆதரவுத் தொகை பத்து இலட்சம் மாணவர்களுக்காக உருவாக்கப்படும். பொருளாதார ரீதியில் நலிந்த மாணவர்களுக்கு இந்த நிதியிலிருந்து படிப்புதவித்தொகை வழங்கப்படும். பத்தாம் வகுப்புத் தேர்வுக்குப் பின் நடத்தப்படும் ஒரு தேசிய அளவிலான தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து பிரிவுகளிலிருந்தும் வரும் மாணவர்களுக்கு, அனைத்து பாடப் பகுதிகளுக்குமான ஒரு தனி தேசிய திறமைசார் படிப்புதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

4. ஆசிரமப் பள்ளிகளுக்கும் அருகிலுள்ள உயர்நிலைப்பள்ளிகள்/மேனிலைப் பள்ளிகள்/கேந்திரிய வித்தியாசாலைகள் ஆகியவற்றிற்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தி அதிகப் பயனைப் பெற இணைதிறம் உருவாக்கவும், இரண்டுக்கும் இடையே வழிநடத்துதலும் ஆலோசனைகளும் பெறுவதற்கான வழிகளும் கண்டறியப்படும்.

5. பழங்குடிப் பகுதி மாணவர்களுக்குத் திறனை ஏற்படுத்துதல் மற்றும் தேசிய திறன் வளர்ப்பு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து பள்ளிகளில் வேலைநேரத்திற்குப் பின்பு திறன்கள் மேல் அதிகமாக ஆதாரப்படுத்திய பாடங்களை வழங்குவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படும்.

6. பயிற்றுமொழியாக இருக்கிற மாநில மொழியிலே பயிலுவதிலும் புரிதலிலும் பழங்குடிக் குழந்தகளுக்கு சிரமம் உள்ளது என்பது பட்டறிவு. இந்தத் தடையை மேற்கொள்ளுவதற்கு தேவையுள்ள இடங்களில் பல்மொழிக் கல்வியை அறிமுகப்படுத்துவதை உறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

7. சமூகத்தால் புறக்கணிக்கப்படுதல், வீட்டில் போதுமான ஆதரவு அமைப்புகள் இல்லாமை, தகுந்த வசதிகளும் உதவும் கருவிகளும் இல்லாமையும் போதாமையும் குறிப்பாக சிற்றூர்களிலும் ஊரகங்களிலும் உள்ள பள்ளிகளில் உள்ள மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் மற்றும் கற்றல் குறைகள் உள்ள குழந்தைகளின் கல்வித் தேவைகளைச் சந்திக்க சிறப்பு குறுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

8. நடப்பிலிருக்கும் சிறப்புத் தேவைகளுள்ள குழந்தைகளுக்கான நடுவண் அரசால் நிறுவப்பட்டிருக்கும் திட்டங்கள் தொடரும், மேலும், அவற்றினால் பயன்பெறுகிறவை மற்றும் அவற்றின் நிதிஉதவி ஆகியவை கூடுதல் விஷயங்களைச் சேர்த்துக்கொள்ளும். சிறப்புத் தேவைகளுள்ள குழந்தைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவுதலுக்கும், கூடவே, அவர்களுக்கான பல்வேறு வகை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் கண்காணிப்பதற்கும் மாநில மற்றும் மாவட்ட பொறுத்தமான தக்க இயங்கு நுட்பம் உருவாக்கப்படும்.

9. உள்ளூர் அளவில், குழந்தை மற்றும் மருத்துவமனைசார் உளவியல் வல்லுனர்களைக் கொண்ட பகுதிநேரக் குழு உருவாக்கப்படும். இதனால் மூன்றாமவர் மதிப்பாய்வு அல்லது ஆலோசனை தேவைப்படும் விஷயங்களில் மாவட்ட கல்வி அதிகாரி அல்லது பள்ளி அவர்களிடம் காண்பிக்க அனுப்பலாம். சிறப்புத் தேவைகளுள்ள குழந்தைகளைக் தகுந்தபடி மென்மையாகக் கையாள ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி/புத்தறிவு புகட்டல் ஆகியவற்றிற்கான ஆலோசனையையும் இந்த உட்குழு வழங்கலாம்.

10. கற்றல் ஊனங்கள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு நீண்ட கால திட்டத்தை வகுப்பதில் நடுவண் அரசு முன்நிற்கும். ஆய்வு மற்றும் பயிற்சியில் முதலீடு அளித்து, தேவையான வளங்களையும் வழங்கும்.

11. சமூகம் மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவுகளிலிருந்து வரும் பின்னடைவுற்ற குழந்தைகளின் கற்றல் பருவங்களின் முக்கிய கட்டங்களுக்கும் கூடுதல் குறைதீர் பயிற்சி அல்லது ஆலோசனை வசதி செய்யப்பட்டு ஆதரவு அளிக்கப்படும்.

12. சமவாய்ப்பு மற்றும் வேற்றுமை பாராட்டாமை ஆகியவற்றின் அடிப்படையில் இடம்பெயரும் குழந்தைகளுக்கு அவர்கள் தொடங்குமிடத்தில் அல்லது சேருமிடத்தில் தங்கும் வசதியுள்ள பள்ளிகளை ஏற்படுத்தி கல்வி வழங்கப்படும்.

13. பாலின வேறுபாட்டையும் வன்முறையையும் எவ்விதத்திலும் பொறுத்துக்கொள்ளாத அணுகுமுறை கடைபிடிக்கப்படும். உடன்பாடுள்ள பலவகைச் செயல்பாடுகள் மூலம் பெண்களைச் சேர்த்துக்கொள்ளுதல், தக்கவைத்தல் மற்றும் கணிசமான அளவு

இருத்தல் ஆகியவற்றை மேம்படுத்த அரசு முயலும். இதற்காக, பல்கலைகழக நிருவாகத்தின் உயர்பதவிகளில் பெண்களை வேலைக்குச் சேர்த்து பதவியிலமர்த்துவதை உறுதிசெய்யவும் அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

14. உயர்கல்வியில் ஊனம் பற்றிய இயல்களில் ஆய்வு மற்றும் வளர்ச்சியை வலுப்படுத்த தனிப்பட்ட நிதிகள் இருக்கும். கட்டமைப்பு, கல்விஅணுகல் மற்றும் செயல்பாட்டிற்கு ஊனமுள்ளவர்களுக்குக் கிடைக்கும் அணுகல்வழிகளைச் சமுகரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

15. மண்டல அளவிலான சமமின்மைகளைச் சமாளிக்க, மலைப்பகுதிகள், பழங்குடிப்பகுதிகள், பாலைவனப் பகுதிகள், கடற்கரைப் பகுதிகள் ஆகிய வெவ்வேறு நிலப்பகுதிகளுக்கான வெவ்வேறு விதங்களில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் சாத்தியம். மண்டல மற்றும் மாவட்ட அளவிலான கல்விப் பின்னடைவைத் தீர்மானிப்பதற்கான வரைகூறுகளை மீளாய்வு செய்து புதிய விதிமுறைகள் உருவாக்கப்படும். கல்வியில் பின்தங்கிய மண்டலங்களுக்கு சிறப்புக் குறுக்கீடுகளை ஏற்பாடுசெய்யவும், கல்வி மற்றும் திறன் இடைவெளிகளை அடையாளம் காணவும், சமூக, பொருளாதார, கல்விரீதியாக பின்தங்கிய பிரிவுகளுக்கும் மாவட்டகள்தோறுமான மதிப்பீடுசெய்து பதிவுசெய்யப்படும்.

### 4.7 படிப்பறிவும் வாழ்க்கை முழுவதும் கற்றலும்

1978 அக்டோபர் திங்கள் 2ஆம் தேதி தேசிய முதியோர் கல்வித்திட்டம் துவக்கப்பட்டபோது வயதுவந்தோருக்கான கல்வியின் மேல் முதன்முதலாக ஒரு கவனம்

வந்தது. ஊரக செயல்பாட்டு கல்வியறிவுத் திட்டம் (Rural Functional Literacy Programme - RFLP), தேசிய எழுத்தறிவு இயக்கம் ( National Literacy Mission - NLM), கல்வியறிவுள்ள இந்தியா இயக்கம் ( Saakshar Bharat Abhiyan) போன்ற அநேக திட்டங்கள் கடந்த 40 ஆண்டுகளில் துவக்கப்பட்டுள்ளன. இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும் இந்தியாவில் 280 மில்லியனுக்கும் மேலான வயதுவந்தோருக்கு எழுத்தறிவில்லை. உலகளாவிய எழுத்தறிவில்லா வயதுவந்தோர் அளவில் இது சுமார் மூன்றில் ஒரு பங்காகும். வயதுவந்தோருக்கான கல்வியின் பிரச்சினையின் மீது சிறப்புக் கவனம் காட்ட வேண்டும் என்பதை இந்தக் கணக்கு வலியுறுத்துகிறது.

ஒரு தனிநபர் வசிக்கும் குறிப்பிட்ட குமுகாயத்தில் செயல்படத் தேவையான வாசித்தல், எழுதுதல், எண்களைக் கண்டறிதல் திறன்கள் படிநிலை செயல்பாட்டு கல்வியறிவாகும். செயல்பாட்டு கல்வியறிவை அடைதல் கல்வி வளர்ச்சியின் ஒரு ஒன்றிப்போன, தவிர்க்க இயலாத பகுதியாகும். அனைத்து இளைஞர் மற்றும் வயது வந்தோருக்கான கல்வி வெவ்வேறு காலங்களில் எதிர்நோக்கப்பட்ட வயதுவந்தோருக்கான மற்றும் தொடர்கல்வித் திட்டங்களின் அடிப்படை இலக்காகும்.

இன்றைய உலகில், வாழ்க்கை முழுவதுக் கல்வி என்பது ஒரு படிப்பறிவுள்ள சமுதாயம் என்பதை தீர்மானிக்கும் கூறாகக் கருதப்படுகிறது. அடிப்படைக் கல்வித் திட்டங்களின் வழி உருவாக்கப்பட்ட எழுத்தறிவுச்சூழலிருந்து வழிகள் ஒரு கற்றல் சமூகத்திற்கு முன்னேறும்போது சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்குமான கற்றல் தேவைகளைச் சந்திக்க பலவகை தளங்களை அது அளிக்கிறது. இன்றைய நாட்களில் வாழ்நாள் முழுவதும் கல்வி என்பது மக்கள் பிழைப்பதற்கும், வாழ்க்கையின் தரத்தை

மேம்படுத்துவதற்கும், மேலும், தேசிய, மனித, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கும் மிக அவசியமானதாகிறது, இந்தியா உலகளவில் போட்டியிட வேண்டுமானால், வளர்ந்த நாடாகத் தலையெடுக்க வேண்டுமானால், அது திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட வாழ்க்கைமுழுவதற்குமான கல்விக்கான கொள்கள் மற்றும் திட்டங்கள் வழி மனித வளங்களின் தரத்தை மேம்படுத்தவேண்டும்.

கல்வியறிவில்லாதவர்களின் மிகப்பெரிய எண்ணிக்கை, அறிவுப் பொருளாதாரம் உருவாகிவருதல், உலகமயமாக்கலின் சவால்கள், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் அபரிவிதமான பரவுதல், தனிநபரின் வாழ்நாள் அதிகரித்தல் ஆகியவை வயதுவந்தோருக்கான கல்விக் கொள்கையிலும் திட்டங்களிலும் ஒரு பெரிய முறைபெயர்வுக்கு அறைகூவல் விடுக்கின்றன. வேற்றுமைகளும் சிக்கல்களும் நிறைந்த இந்தியச் சமூகத்தில் கல்வியறிவுக்கான பல்வகை அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. கல்வியறிவுக்கான அணுகுமுறை நெகிழ்வுத்தன்மை கொண்டதாகவும், பரவலாக்கப்பட்டதாகவும், வாழ்வாதாரம், கேளிக்கை, வளர்ச்சிக் குறுக்கீடுகள் போன்ற சூழல் அடிப்படையிலானதாகவும் இருத்தல் வேண்டும்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. இளைஞர் மற்றும் வயதுவந்தோர் அனைவருக்கான கல்வியை சாத்தியமாக்க தன்னார்வக் குழுக்கள், NGOக்கள், அரசு பள்ளிகள்/கல்லூரிகள்/கல்வி நிறுவனங்கள், இளைஞர் மற்றும் பெண்கள் அமைப்புகள் ஆகியோரை உட்படுத்திய பல்முனை

உத்திகளைப் பயன்படுத்தி கலைத்திட்டம் மீளமைக்கப்படும் மற்றும் தற்போதுள்ள முயற்சிகளும் வலுப்படுத்தப்படும்.

2. அனைவருக்கும் கல்வி இலக்குகளை அடைய உயர்மட்ட அதிகார அமைப்பான தேசிய எழுத்தறிவு இயக்கத்திலிருந்து மாநிலத்திலிருக்கும் மாநில எழுத்தறிவு இயக்க அமைப்புகள், மாவட்ட அளவிலிருக்கும் மக்கள் கல்வி அமைப்புகள், மற்றும், வளங்கள் ஆதரவு மன்றங்கள் என தற்போதிருக்கும் அமைப்புகளின் இலக்குகள் மீளமைக்கப்படவும் வலுப்படுத்தப்படவும் வேண்டும். அனைவருக்கும் கல்வி என்பதை அடைய ஒவ்வொரு மாவட்டங்களுக்குமான திட்டங்களை மாநிலங்கள் தயாரிக்க வேண்டும்.

3. AE திட்டங்களை மீளமைத்து வலுப்படுத்தவும், எழுத்தறிவு, திறன் வளர்த்தல், முந்தைய கல்வி மற்றும் சான்றிதழ்களுக்கான ஒப்புமைகள் ஆகியவற்றில் கற்றல் பயன்களை மதிப்பாய்வு செய்வதற்கான அறிவியல்ரீதியான வரைகூறுகளை உருவாக்கவும் ஒரு வல்லுனர்களைக் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை அரசு அமைக்கும். இது முறையான கல்வி அமைப்பில் சேர்வதை ஊக்குவிக்கவும் செய்யலாம். பள்ளிக்கு முந்தைய கல்வியை தரமதிப்பீடு செய்வதற்காகவும், வயதுவந்தோர் கல்வியில் இருப்பவர்களுக்கு தொழிற்கல்வி ரீதியான நிலை உயர்வுக்காக ஏற்பளிக்கப்பட்ட முகமைகளுடன் NLMA கைகோர்த்து பணிபுரியும்.

4. வயதுவந்தோருக்கான கல்வி திட்டம் திறன் வளர்ச்சி, எண்ணிலக்க, நிதிசார் மற்றும் சட்டவியல் சார் படிப்பறிவை உள்ளடக்கும்.

4.8 **கல்வியில் திறன்களும் பணிக்குத் தகுதியாக்கமும்**

வளந்த நாடுகளில் சார்புநிலை விகிதம் அதிகமாகி இளைஞர் எண்ணிக்கை மிகவேகமாகக் குறைந்துவரும் வேளையில் தனது மொத்த மக்கள்தொகையில் இந்தியா 54 விழுக்காடு 25 வயதிற்குட்பட்டவர்களைப் பெற்று உலகின் மிக இளைய நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. திறன் பெறவேண்டிய வேலையில் புதிதாகச் சேர்பவர்கள் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டிற்குள் 104.62 மில்லியன் ஆக உயர்ந்துவிடும் என கணிக்கப்படுகிறது. ஆனால், தொழில்நுட்ப, தொழிற்கல்வித் திட்டங்களை ஆதரிக்கும் நிறுவன ஏற்பாடுகள் பற்றாதவையாகவே உள்ளன.

தொழிற்கல்விப் பகுதிகளில் திறன்களின் வளர்ச்சியை முறையாகத் தொடர்புபடுத்தி, தொழிற்கல்வி மூலம் தொழிலடைவை கல்வித் தேர்ச்சித் தரத்துடன் இணைத்து மாணவர்கள் பரந்து பெருகவும், உயர்ந்து வளரவும் உள்ள வாய்ப்புகளுக்காக சமீபத்தில்தான் முயற்சிக்கப்பட்டுள்ளது. பணிக்குத் தகுதியாக்கத்தை மேம்படுத்த, தனிப்பட்ட வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி மற்றும் திறன்களின் கலப்பு மிக அவசியம். உயர்தரத் தொழிற்கல்விப் பயிற்சிக்கு கண்ணியத்தையும் சமூக ஏற்பையும் வளர்ப்பதில் கூடுதல் கவனம் தேவை.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. வெறும் இலாபமான வேலைகளில் மாணவர்கள் பணியிலமர்த்தப்படுவதற்காக மட்டுமல்லாமல், தொழில்முனைவுசார் திறன்களை அவர்கள் உருவாக்கிக்கொள்ள

உதவ பள்ளி மற்றும் உயர்கல்வி முறைகளில் திறன் வளர்த்தல் திட்டங்கள் மாற்றியமைக்கப்படும்.

2. தேசிய திறன் வளர்த்தல் மற்றும் தொழில்முனைவுக் கொள்கை 2015யில் எதிர்நோக்கியபடி திறன்வளர்த்தல் திட்டங்கள் 25% பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் ஒருங்கிணைக்கப்படும்.

3. சிறப்புக் கவன மாவட்டங்களில் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்த திறன் பள்ளிகளை உருவாக்க ஒரு விவரமான திட்டம் தயாரிக்கப்படும்.

4. கூடுதல் சமூக ஏற்புக்கும் பரந்துபெருகவும், உயர்ந்து வளரவும் உதவ உயர்நிலைப்பள்ளி, உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றிலுள்ள தற்போதுள்ள திறன்வளர்ப்புத் திட்டம் NSQF மூலம் பெரும்போக்குக் கல்வியுடன் ஒருங்கிணைக்கப்படும். பன்முக நுழைவு மற்றும் வெளியேறுதல் தெரிவுகள், தேர்வுமதிப்புகள் இருப்பு அமைப்பு, தேர்வுமதிப்புகளை மாற்றிக்கொள்வதற்கான நிறுவன கூட்டிணைவு, தேசிய அளவில் அங்கீகாரத்திற்காக தேசிய தொழில்சார் செந்தரங்கள் அடிப்படையிலான திறன்கள் வெளியிடல், மற்றும் விளைவுகள் அடிப்படையிலான மதிப்பாய்வு ஆகியவை மூலம் திறன்களின் சான்றளிப்பிற்கான ஒரு நிறுவனம்சார் இயங்கமைப்பு உருவாக்கப்படும்.

5. (முறைசார் கல்விக்கு) முந்தைய கற்றலை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning - RPL) பற்றி மதிப்பாய்வு செய்யும் இயங்கமைப்புகள் ஒன்றும் இதுவரை

உருவாக்கப்படவில்லை. இந்த இடைவெளியை மேற்கொள்ள, முறையான கல்வியோ பயிற்சியோ இன்றி, திறன்களை பெற்றிருப்பதற்கான எந்தவொரு சான்றிதழுமின்றி திறன்களைப் பெற்றிருப்பவர்கள் சேர்வதை எளிதாக்க அவர்களுடைய திறன்களையும் திறன்தகுதிகளியும் மதிப்பாய்வு செய்து சான்றிதழ் வழங்க, ஒருவருடத்திற்குள், அரசு ஒரு இயங்கமைப்பை உருவாக்க முயற்சிக்கும்.

6. மாணவர்கள் ஊதியம் பெறும் வேலைவாய்ப்பைப் பெற அல்லது சொந்த நிறுவனங்களைத் தொடங்க துறைத் திறன் மன்றங்களும் பள்ளி/கல்லூரி நிருவாகமும் இணைந்து வழங்கும் சான்றிதழ்கள்.

## 4.9 கல்வியில் ICTயின் பயன்பாடு

செய்தி மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தின் ( Information and Communication Technologies - ICTக்கள்) பரவல் என்பது 1986/92இன் கல்விக் கொள்கைகுப் பின் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பெருமளவிலான வளர்ச்சியாகும். இது கல்வித்துறையில் ஒரு புதிய பரிணாமங்களைக் கொண்டுவந்துள்ளது. பல்வேறு வழிகளில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான புதிய சாத்தியக் கூறுகள் திறந்திருக்கின்றன . இது கல்வித்துறை யை நிர்வகிப்பதற்கு மட்டுமல்லாமல் , கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தை மேம்படுத்துவதற்கு ம், கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்து வதற்கு ம், கல்விசார் திட்டமிடல் மற்றும் மேலாண்மையை மேம்படுத்துவதற்கு மென நேரடியாக உதவுகிறது. குறைதீர் கல்வி , கல்வி , ஆசிரியர்களுக்கான பயிற்சி , வயதுவந்தோர்க்கான எழுத்தறிவு திட்டங்கள், திறன் கல்வி , உயர்கல்வியில் கற்றல் கருவிகள், மேலும், கருவிகளை

நிர்வகித்தல், மேலாண்மை செய் தல் ஆகியவற்றிற்கு ICTக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவர்கள், பள்ளிகள் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் செயல்பாடுகளையும் கண்காணிக்க தகவல் தொழில்நுட்பம் சார்ந்த (IT) செயலிகள் பல மாநிலங்களில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் துறையில் இது மாதிரியான பல தொடர்முயற்சிகளும், புதியமுனைவுகளும் , சோதனைகளும் நடைபெற்றுவருகின்றன். இப்போது என்ன தேவையெனில் , இந்தியாவில் கல்வியை மேம்படுத்த ICTயின் பயன்பாட்டை அதிக அளவில் முன்னெடுத்துச் செல்வதற்கு நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட உத்தியே ஆகும்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. கற்றலுக்கான அனைத்து நிலைகள் மற்றும் அறிவுத்துறைகளில் செய்தி மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தை ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக்க கூட்டு முயற்சி மேற்கொள்ளப்படும்.

2. கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மேம்படுத்துவதற்கான கருவியாக ICTயின் பயன்பாடு ஆசிரியர் கல்விப் பாடத்திட்டத்தில் ஒருங்கிணைந்த பகுதியாக்கப்படும்.

3. ஒரு குழந்தை பள்ளியில் சேர்க்கப்படுவதிலிருந்து பள்ளியை விட்டுச் செல்லும்வரையிலான அனைத்துப் பதிவுகளும் இணையத்தில் பராமரிப்பது கட்டாயமாக்கப்படும்.

4. தகவல்தொழில்நுட்ப கருவிகளின் மூலம் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் வருகைப் பதிவேடு, ஆசிரியர் மற்றும் பள்ளி நிர்வாக மதிப்பீடு மற்றும் செயல்பாடுகள்,

மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாக செயல்பாடுகள் போன்ற அனைத்துப் பதிவுகளும் கணக்குகளும் கண்காணிக்கப்படும்.

5. பள்ளி மேலாண்மையில் தகவல் தொழில் நுட்ப்ப் பயன்பாடுகளின் தனிப் பயன்பாட்டிற்கான திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் முன்னுரிமை கொடுக்கப்பட்டு இயற்றப்படும். பள்ளி நிர்வாகம் மற்றும் செயல்திறனைக் மேம்படுத்தத் தகவல் தொழில்நுட்ப அறிவிப்பு முறைகள் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக இருக்கும்.

6. தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தை தனித்துப் பார்க்க முடியாது. பதிலாக, முறையான அறைகள், மின்சாரம், பிணையம், இணைப்பு, பள்ளி வளாகப் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைத்துப் பார்க்கவேண்டும். கல்வி வாய்ப்புக்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான திட்டங்களில் இவையும் அடங்கும் . கல்வி நிறுவனங்களில் சீரான மின்சாரம் ஒரு பிரச்சனையாக இருக்க வாய்ப்பு இருப்பதால், சூரிய ஆற்றல் பயன்பாடு உருவாக்குவது, தகவல் தொடர்பு தொழில் திட்டங்களின் விரிவாக்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும்.

7. MOOC என்பது தகவல் தொழில்நுட்பத்தின் இன்னொரு பயன்பாடு ஆகும். இது, உயர்நிலை மற்றும் உயர்கல்வி மட்டங்களில், குறிப்பாக குறைந்த செலவில் தரமான கல்வியை அதிகரிக்க, தகவல் தொடர்பு தொழில் நுட்ப துறையை மேம்படுத்த உதவலாம்.

8. ஏற்கனவே உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு குறுகிய காலத்திற்கு பயனளிக்கலாம். ஏற்கனவே உருவாக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ள தொழில்நுட்ப மாதிரிகளுடன், உள்ளூர் தேவைகளுக்கும் பயன்பாட்டிற்குமான பயன்பாடுகள்/மாதிரிகள் உருவா க்கப்பட வேண்டும். திறந்த மென்பொருளை பயன்படுத்தி உள்ளூர் தேவைகளுக்கேற்ப ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மூலம் பல்வேறு வகையான மென்பொருள்கள் அல்லது கைப்பேசி செயலிகளை உருவாக்குதல் ஊக்குவிக்கப்பட்டு உதவியளிக்க வேண்டும்.

## 4.10 **மேலாண்மை மற்றும் ஆசிரியர் முன்னேற்றம்**

தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களின் திறனும் ஊக்கமும் மிக முக்கியமானதாக இருக்கிறது. பள்ளிக் கல்வியின் பல்வேறு நிலைகளில் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான பல முனைவுகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கணிதம், அறிவியல், மொழிகள் ஆகியவற்றிற்கான உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பற்றாக்குறை, பணியிருப்பு ஆசிரியர்களின் தொடக்கப் பயிற்சி மற்றும் தொடர்ச்சியான தொழில்துறைரீதியான வளர்ச்சிக்கான திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவது, ஆசிரியப்பணியை ஒரு தொழிற்துறைப் பணியின் அந்தஸ்த்திற்கு மேம்படுத்துவது, கற்றல் பயன்களை உறுதிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பொறுப்பும் ஊக்கமும், மற்றும் ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் மற்றும் ஆசிரியர் பயிற்சியாளர்களின் தரத்தை மேம்படுத்துதல் இந்தப் பகுதியில் பெரும்பான்மையான சவால்களாகும்.

மத்திய அரசும் மாநில அரசுகளும் பல முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பெருமளவு வெற்றிடங்கள், பயிற்சியற்ற ஆசிரியர்கள்

பிரச்சினைகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தொழில்துறைசார் நேயமின்மை, பயிற்சிக்கும் வகுப்பறை உண்மையான நடைமுறைகளுக்கும் இடையில் பொருத்தமின்மை, ஆசிரியர்கள் வருகையின்மை மற்றும் ஆசிரியர் பொறுப்பின்மை, கற்பித்தலுக்கு அப்பாற்பட்ட செயல்களில் ஆசிரியர்கள் ஈடுபாடு ஆகிய அனைத்தும் சரிசெய்யப்பட வேண்டியிருக்கிறது. பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் முழுநேர தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்கள் இல்லை. செயல்திறமிக்க தலைமை இல்லாததால் ஆசிரியர்கள் இடையில் ஒழுங்கின்மை அதிகரித்து, கல்விசார் தரம் குறைய வழிவகுக்கிறது. கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டிய ஒட்டுமொத்த இலக்கை மனதிற்கொண்டு, பெருமளவிலான கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. மாநில அரசுகளின் ஆலோசனையுடன், ஆசிரியர்களைப் பணியிலமர்த்துவதற்கான வெளிப்படையானதும் தகுதி அடிப்படையிலானதுமான திட்டம் உருவாக்கபடும். ஆசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் பிற கல்விசார் ஊழியர்களின் வெளிப்படையானதும் தகுதி அடிப்படையிலானதுமான தேர்ந்தெடுத்தலுக்குத் தற்சார்புடனான ஆசிரியர் தேர்வு ஆணையம் மாநில அரசுகளால் அமைக்கப்படும்.

2. கல்வி நிறுவனங்களிலுள்ள அனைத்துப் பதவிகளும், தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படும். தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்குத் தலைமைப் பதவி பற்றிய பயிற்சி கட்டாயமாகும்.

3. ஆசிரியர்களை நியமித்தலை நியாயமாகவும் மற்றும் சமத்துவரீதியாக்கவும், அவர்களுடைய காலியிடங்கள் மற்றும் இடமாற்றங்களின் பொதுஅறிவிப்புக்கென வெளிப்படையான விதிமுறைகள் உருவாக்கப்படும். தூரமான மற்றும் கடினமான பகுதிகளில், உள்ளூர் ஆசிரியர்களைப் பணியிலமர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4. ஒவ்வொரு பாடங்கள்வாரியாக மற்றும் மாநிலங்கள்வாரியாக ஆசிரியர்களைப் பணியிலமர்த்துவதை மதிப்பாய்வு செய்வதற்காகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் பயிற்சியற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகவும் மனித ஆற்றல் திட்டமிடல் மாநில அரசுகளிடம் விடப்படும். தகுதியுள்ள ஆசிரியர்களை ஒப்புதல்பெற்ற பணியிடங்களில் சேர்த்துக்கொள்வதன் மூலம் ஒப்பந்த ஆசிரியர்கள் படிப்படியாக நிறுத்தப்படுவர்.

5. ஆசிரியர்கள் வராமை, காலி பணிடங்கள் மற்றும் ஆசிரியர் பொறுப்பின்மை போன்றவை தொடர்பான சிக்கல்கள் மனவுறுதி கொண்ட வலுவான ஒருமித்த அரசியல் விருப்பத்துடன் தீர்க்கப்பட வேண்டும். வருகையைப் பதிவுசெய்யும் கைப்பேசிகள் மற்றும் உயிரினப் புள்ளிக் கருவிகள் (biometric devices) தொழில்நுட்ப உதவியுடன் சரிசெய்யப்பஅ ஆசிரியர்கள் வராமை மற்றும் ஒழுங்கின்மையை ஒழுங்கு முறைக்கான அதிகாரங்கள் , துவக்கப்பள்ளிகளைப் பொறுத்தவரையில், மேலாண்மைக் குழுக்களிடமும் (School Management Committess – SMCs), நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தலைமையாசிரியர்/முதல்வர்களிடமும் விடப்படும்.

6. ஆசிரியர்களின் தொடக்கத் தயாரிப்பிற்கும் தொடர்ச்சியான பணிசார் வளர்ச்சிக்குமான திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துதலை மேம்படுத்துவதற்கு சிறப்பு அழுத்தம் கொடுக்கப்படும். தற்போதுள்ள குறைபாடுகளைக் களைய காலஅளவு, மாதிரி, அமைப்பு, கலைத்திட்டம் மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் மாற்றங்கள் கொண்டுவர ஆசிரியர் கல்வித் திட்டங்களுக்கான பட்டய மற்றும் பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் மீளாய்வு செய்யப்படும்.

7. ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர்புல மேம்பாட்டின் பலவகை அம்சங்களை உள்ளடக்கிய ஒரு தேசிய அளவிலான ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம் நிறுவப்படும். NCERTயின் கீழுள்ள கல்விக்கான மண்டல நிறுவனங்கள் மேம்படுத்தப்பட்டு மண்டல அளவில் ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும்.

8. DIETக்கள், B.Ed. கல்லூரிகள் போன்ற ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் அனைத்திற்கும் ஏற்பளிப்பு பெறுதல் கட்டாயமாக்கப்படும். வட்டார வள மையங்களுக்கான திறன்மதிப்பு தரஅளவுகள் நிர்ணயிக்கப்படும்.

9. வாழ்க்கைத் திறன்கள், அறவியல் கல்வி, உடற்கல்வி மற்றும் கலைகளும் கைவினைகளுமாகிய கல்வியின் துணை நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் கருத்தில்கொள்ளவும் பள்ளிகளில் கற்பித்தல் கற்றல் செயல்முறைகளில் அவற்றை பயனுள்ள முறையில் அறிமுகப்படுத்தவும் உதவும் பகுதிகள் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களில் இருக்கும்.

10. ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள் மட்டுமல்லாமல், குறிப்பிட்ட இலக்கு வரைகூறுகளின் அடிப்படையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகளும்

நிறுவப்படும். விருதுகளுக்குத் தகுதியான ஆசிரியர்களின் பெயர்களைப் பரிந்துரைப்பதில் SMCக்கள் முக்கியமான பங்கு வகிக்கும்.

11. மாணவர்களின் கற்றல் பயன்களில் முன்னேற்றம் வருவிக்கவும் தரமான கல்வி வழங்கவும் ஆசிரியர்களின் திறன், ஊக்கம் மற்றும் பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

12. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிற்சி/பணிசார்வளர்ச்சி வகுப்புகளில் அனைத்து பணியிடை ஆசிரியர்களும் பங்கேற்பது கட்டாயமாக்கப்படும். மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்துப் பணியிடை ஆசிரியர்களின் பயிற்சிக்கும் போதுமான ஏற்பாடுகளை தொழில்நுட்ப உதவியுடன் மத்திய மற்றும் மாநில அரசுகள் ஏற்படுத்தும்.

13. அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் சரியான கால அவகாசங்களில் மதிப்பாய்வு செய்யப்படுவது கட்டாயமாக்கப்படும். அவர்களது வருங்கால பதவிஉயர்வும் ஊதிய உயர்வும் இதனுடன் இணைக்கப்படும். தங்கள் கற்பிக்கும் திறன்களையும் பாட அறிவையும் மதிப்பாய்வு செய்யும் 5 (ஐந்து) ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் தேர்வுகளில் பங்குபெற்று தேர்ச்சிபெற வேண்டும்.

14. ஒவ்வொரு மாநிலத்திலும் ஆசிரியர்கள் பயிற்சிகளுக்கான தனி ஊழியர் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். SCERTக்கள், DIETக்கள் மற்றும் இதர ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான காலியிடங்கள் இந்நிறுவனங்களை வலுப்படுத்தவும், அவற்றின் திறனை அதிகரிக்கவும் நிரப்பப்படும்.

## 4.11 கல்வியில் மொழியும் பண்பாடும்

பன்மொழி சமுதாயமானது கல்வித்துறையில் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறது. மாநில அரசுகளோடு கலந்தாய்வு செய்து இந்திய அரசால் மும்மொழிக் கொள்கை (Three Language Formula - TLF) உருவாக்கப்பட்டு தேசிய கல்விக் கொள்கை திட்டம் 1968இல் அறிவிக்கப்பட்டது. 1986/1992இன் கொள்கைகள் வரை தொடர்ந்திருந்தாலும், மும்மொழிக் கொள்கையை அமலாக்குவதில் பல மாநிலங்களில் வேறுபாடுகள் நிலவுகின்றன . மொழி என்பது உணர்வு சார்ந்த விஷயமாக இருப்பதால் எந்த ஒரு சிபாரிசும் அனைவரையும் திருப்திப்படுத்துவதாக அமையாது. மாநிலங்களுக்குள்ளும், மண்டலங்களுக்குள்ளும் மேலும் உலகளாவிய இடம்பெயர்தலுக்கேற்ற மொழித்திறனை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள காலப்போக்கில் மாநில அரசுகள் உள்ளூர் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப செவிசாய்த்த்திருக்கின்றன.

தாய்மொழியில் கற்பிக்கும்பொழுதுதான் மாணவர்கள் நன்றாகப் பயிலுகின்றனர். இன்னொரு பக்கம் ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ளவும், ஆங்கில வழியில் பயிற்றுவிக்கும் பள்ளிகளுக்கான விருப்பமும் பெருகுகியுள்ளன.

கல்வியின் நோக்கம், இந்தியாவின் உயர்ந்த பாரம்பரியம், சிறந்த முற்காலம், பெருமைக்குரிய மரபுகள், பன்முகப் பண்பாடுகள் ஆகியவை பற்றிய விழிப்புணர்வைப் கற்போரின் மனதில் பதியவைப்பதாகும். அனைத்து நிலைகளிலும், பொறுப்புள்ள குடிமக்களாக இருப்பது, அமைதி, சகிப்புத்தன்மை, மதச்சார்பின்மை, தேசிய ஒருமைப்பாடு, சமுதாய நல்லிணக்கம், அனைத்துச் சமயங்களையும் மதித்தல் ஆகியவற்றை உயர்த்தும்

பண்புகளையும், இவற்றுடன், உலகளாவிய குடிமக்கள் பண்பு மற்றும் நீடிப்புத்திற வளர்ச்சி ஆகிய உலகப்பொதுமையான பண்புகளையும் கற்பவர்கள் அடைவதை ஊக்குவிக்கும்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. விரும்பினால், அனைத்து மாநிலங்களும் யூனியன் பகுதிகளும் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி, உள்ளூர் அல்லது மண்டல மொழிகளைப் பயிற்று மொழிகளாகக்கொண்டு கல்வியளிக்கலாம்.

2. தேசிய அல்லது பன்னாட்டு அளவில் மாணவர்கள் இயங்குவதற்கு ஆங்கில அறிவு முக்கிய பங்காற்றுவதுடன் உலக அறிவை பெறுவதற்கும் வழிவகுக்கிறது. எனவே குழந்தைகளை ஆங்கிலத்தில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் திறமை மிக்கவர்களாக்குவது முக்கியமாகும். ஆகையினால் துவக்கப் பள்ளிவரை பயிற்று மொழியானது தாய்மொழி ( அ) உள்ளூர் ( அ) வட்டார மொழியாக இருக்கும்போது இரண்டாம் மொழி ஆங்கில மொழியாகவும், மூன்றாம் மொழியின் விருப்பம் (மேல்நிலை மற்றும் உயர்நிலை கல்வியில்) அந்தந்த மாநில மற்றும் உள்ளாட்சி நிருவாகத்தைப் பொறுத்து, அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒத்துப்போகும் வகையில் அமையும்.

3. உயர்கல்வி நிறுவனங்கள், குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார்ந்த கல்வி நிறுவனங்கள் அனைத்து மாணவர்களுக்கும் , இந்தியாவின் உயர்ந்த பாரம்பரியம், மொழி மற்றும் பண்பாட்டுப் பன்முகத்தன்மை, மேலும், அறிவு அமைப்புகளைப் பற்றி கற்க வாய்ப்புக்களை வழங்கும்.

4. இந்தியப் பண்பாடு, உள்ளூர் மற்றும் மரபார்ந்த அறிவு போன்றவற்றிற்கு பள்ளிக் கல்வியில் அதிக இடம் வழங்கப்படும். சமத்துவம் மற்றும் சமப்பங்களிப்பு, சமூக நீதி, சகோதரத்துவம், மக்களாட்சி, பொறுப்புமிக்க சுதந்திரம் மற்றும் உரிமை, சகோதரத்துவம் மற்றும் தேசிய நல்லிணக்க உணர்வு போன்ற பண்புகளை வழங்குவதற்கென அனைத்து நிலைகளிலும் அறவியல் கல்வி இணைக்கப்படும்.

5. இந்திய மொழிகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் சமஸ்கிருத மொழியின் சிறப்பு முக்கியத்துவத்தையும், நாட்டின் பண்பாட்டு ஒற்றுமைக்கு அதன் தனித்துவமிக்க பங்களிப்பையும் கணக்கில் கொண்டு பள்ளி மற்றும் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதம் பயிற்றுவிக்க ஏதுவான வசதிகள் தங்கு தடையின்றி வழங்கப்படும்.

6. கல்வி நிறுவனங்கள் மாணவ, மாணவிகளிடையே குடிமை உணர்வு, ஒழுக்கம், நேரம் தவறாமை, தூய்மை, நன்னடத்தை, ஒத்துணர்வு, முதியோர், கீழாக்கப்பட்டோர் மற்றும் நலிந்த பிரிவினருக்கு இறங்குதல் , பெண்கள் மற்றும் மனிதநேய மாண்பினைப் போற்றுதல் போன்ற குணங்களை அறிவுறுத்தும்.

4.12 **விரிவான கல்விமுறையின்வாயிலாகத் தன் வளர்ச்சி**

கல்வி என்பது குழந்தையின் அனைத்து விதமான ( உடல், சமுதாய, உணர்வு, மற்றும் அறிதல்) வளர்ச்சியைப் பற்றியதாகும். எனவே கற்கும் திறனை மட்டும் கவனம் செலுத்துவதை விடுத்து வளர்ச்சியின் அனைத்து கூறுகளையும் அணுகவேண்டியுள்ளது. கற்றல் பயன்கள் மற்றும் பிற செயல்திறன்களை மேம்படுத்துவதின் வாயிலாக குழந்தையின் முழுமையான வளர்ச்சியை நாம் விரிவான முறையில் கவனிக்கமுடிகிறது.

ஆரோக்கியமான குழந்தையே நன்றாக கற்க முடியும் என்பதும் நல்ல ஆரோக்கிய நிலை சிறந்த முறையில் கற்க வழி செய்யும் என்பதும் அனைவரும் அறிந்ததே. ஊட்டச்சத்து குறைபாடும் இரத்தசோகையும் அநேகமான குழந்தைகள் கற்பதற்கு சிரமம் விளைவிப்பது நாம் கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் மேற்கொள்ளப்படும்:

1. உடற்கல்வி, யோகா, விளையாட்டுகள் மற்றும் பந்தயங்கள், தேசிய மாணவர் படை, தேசிய சேவைத் திட்டம், இவற்றுடன் உள்ளூர் கலை, கைவினை, இலக்கியம், மற்றும் திறன்கள் ஆகியவற்றோடு குழந்தைகளின் முழு வளர்ச்சிக்காக பிற செயல்திறன் பயிற்சி நடவடிக்கைகள் பாடத்திட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பதுடன் பள்ளிகளில் அன்றாடச் செயல்களாக அமையும். பள்ளிகள் அங்கீகாரம் பெற மேற்கண்ட வசதிகள் அவசியத் தேவைகளாக அறிவிக்கப்படும்.

2. அரசாங்கம்/பள்ளி நிர்வாகம் பிற செயல்திறன் நடவடிக்கைகளைப் பள்ளியில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யும்.

3. சுகாதாரத் துறையினால் நிர்வகிக்கப்படும் பள்ளி சுகாதார நடவடிக்கைகளில் கல்வித்துறை மற்றும் பள்ளிகள் ஒத்துழைக்கும். பள்ளிகள் ஆய்வு மேற்கொள்ள அட்டவணை தயாரித்து திட்டமிட்டபடி நடைபெறுவதை உறுதி செய்யும். *டிஜிட்டல் இந்தியா* திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு குழந்தையின் ஆரோக்கியத்தையும் அதன் நிலைப்பாட்டையும் கண்காணிக்கவும் மென்பொருள் செயலிகள் (Apps) தயாரிக்கப்படும்.

4. நடைமுறையிலுள்ள மதிய உணவு திட்டத்தின் (Mid-Day Meal Scheme - MDMS) வாயிலாகச் செயல்படுத்தப்படும் பள்ளியில் சத்துணவு வழங்கும் நிகழ்வுகளானது குழந்தைகள் கூடுதல் சத்துணவு பெறவும் சமூக பங்கினை பெறவும் பெறவும் பெறுமளவு உதவியுள்ளது. மதிய உணவு திட்டம் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குச் சென்றடையும் வண்ணம் விரிவாக்கப்படும். சமைத்தல் மற்றும் பரிமாறுதல் போன்ற வேலைகளை மேற்பார்வையிடும் சுமைகள் ஆசிரியர்களுக்கும் இருக்காது. மையமாக்கப்பட்ட சமயலறைகளில் உணவு சமைத்துப் பள்ளிகளுக்கு விநியோகிக்க நம்பிக்கையுள்ள(பெயர்பெற்ற) சமூக நிறுவனங்களின் சேவைகள் ஊக்குவிக்கப்படும்.

### 4.13 பள்ளிகளின் மதிப்பாய்வும் நிருவாகமும்

உள்ளீடுகள், செயல்முறைகள் மற்றும் பயன்கள் ஆகியவற்றில் பள்ளியின் முன்னேற்றத்தில் குமுகாயப் பங்கேற்பும் பெற்றோரின் ஈடுபாடும் முக்கியமான பாத்திரம் வகிக்கலாம். உள்ளூர் குமுகாயம் உயிரோட்டமுள்ளதாய் இருந்து பள்ளிகளின் செயல்பாடுகளில் பங்கேற்கும்போது மட்டுமே ஊரகப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதற்கு ஆதாரங்கள் இருந்திருக்கின்றன. நிறைவேற்றுவதற்கான குறிக்கோள்கள் அமைப்பதற்கும் இணக்குவதற்குமிடையே ஒரு நடுநிலைமையான போக்கைத் தெரிந்தெடுத்து, தலைமை ஆசிரியர்களையும் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான கல்வி அலுவலர்களையும் சிறந்த மேலாண்மைச் செயல்முறைகளுக்காகப் பயிற்றுவித்தல், பள்ளிச் செயல்பாட்டை சிறப்பாக கண்காணிக்கவும் அதற்கு உதவவும் தரவுகளைப் பயன்படுத்துதல், மேலும், பள்ளிச் செயல்பாட்டை மேம்படுத்த குமுகாய

வளங்களையும் முயற்சிகளையும் பெருக்குதல் ஆகியவற்றின் மூலம் பள்ளிகளில் சிறப்பான நிருவாக அமைப்புகளை உருவாக்கவேண்டிய தேவை இன்று உணரப்பட்டுள்ளது. அதற்கு இணையாக, நூலறிவு மற்றும் இதர பகுதிகள், இயல் கட்டமைப்புகள், ஆசிரியர் மேலாண்மை, பள்ளித் தலைமை, கற்றல் பயன்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்/காப்பாளர்களின் நிறைவு ஆகிய பள்ளி நடக்கும் விதம் அனைத்தையும் உள்ளடக்கிய பள்ளித் தர மதிப்பாய்வு மற்றும் ஏற்பளிப்பு அமைப்புக்கிற்கான ஒரு தேவையும் இருப்பதாகத் தெரிகிறது. மாறுகின்ற சூழலுக்கு பதிலளிக்கவும் குறைதீர் செயல்களை தேவைப்பட்ட இடங்களில் தொடங்கவும் பள்ளி அமைப்பைத் தயார்படுத்த, பொறுப்பேற்றலுடன் கூடிய தன்னாட்சிக்கான தக்க வடிவமைப்புடன் கூடிய ஒரு பள்ளி நிருவாக அமைப்புமாதிரி தேவைப்படுகிறது.

கீழ்வரும் கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. பள்ளித்தரம், ஆசிரியர்களின் தொழில்துறை திறன் பெற்றமை, பள்ளித் தலைமை, பள்ளி மேலாண்மை, மற்றும், சுயமதிப்பீடும் செயல்பாடு மதிப்பீடு ஆகியவற்றை அளப்பதற்கான வரையறைகளும் சுட்டிகளும் கொண்ட பள்ளிச் செந்தரங்களுக்கான வடிவமைப்பை நாடு முழுவதற்கும் பயன்படுத்தப்படும். இதற்குப்பின், இந்த வடிவமைப்பின்படியே பள்ளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, தரப் படிநிலை கண்டறியப்பட்டு தரநிலை அறிவிக்கப்படும்.
2. பள்ளி கழகங்களுக்கு ஏற்பளிப்பு வழங்குவதற்கான ஒரு இயங்கமைப்பு ஏற்படுத்தப்படும்.

3. கல்விக்கான உரிமைச்சட்டத்தின் வடிவமைப்பினுள் பள்ளி மேலாண்மைக் குழுவை (School Management Committee - SMC) நடைமுறைப்படுத்துவதிலுள்ள கொள்கை வடிவமைப்பிலுள்ள இடைவெளிகளை நடுவண் மற்றும் மாநில அரசுகள் தீர்க்க முற்படும். இதன்மூலம், நடைமுறைப்படுத்துதலுக்கான பரந்த மற்றும் காண்காணிப்பதற்கான வழிமுறைகளை அளிக்கும்.

4. SMCக்களை மேற்பார்வை இடும் பணியில், தெரிந்தெடுத்தல் முறை, எண்ணிக்கை வீதம், பதவிக்காலம், ஆற்றவேண்டிய பங்குகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிற்கான தெளிவான வழிமுறைகளை மாநில அரசுகள் வழங்கும். SMCக்கான பயிற்சிகான நிதியை உயர்த்த மாநிலங்கள் முயலும். இதன்மூலம், பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களை ( School Management Committee - SMC) பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்த பள்ளிகள் தங்கள் நிதிஉதவிகளைச் சமயத்தில் பெற வழிவகுக்கும். மாவட்ட அளவில் நிதிநிலை அறிக்கை தயாரித்தலிலும் திட்டமிடுதலிலும் SDPக்களும் சேர்த்துக்கொள்ளப்படும்.

5. முதல்வர் அல்லது தலைமையாசிரியரின் தலைமையைப் பொறுத்து சில பள்ளிகள் மற்றவைகளைவிட சிறப்பாகப் பணியாற்றுகின்றன என்பதாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. 5 ஆண்டு பணி அனுபவமுள்ள ஆசிரியர்களிலிருந்து இயல்நாட்டமும் தகுதியுமுள்ள முதல்வர்களும் தலைமையாசிரியர்களுமுள்ள ஒரு ஊழியர்பிரிவு உருவாக்கபடும். திட்ட்மிடப்பட்ட கால அவகாசங்களில் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர் காலிபணியிடங்கள் நிரப்பப்படும்.

6. அனைத்தையும் நோக்கும் ஒரு பரந்துபட்ட முறைகள் உள்ளதாக் பள்ளித் தலைமையை வரையறுத்தல் என்பது பள்ளி நிர்வாகத்தை மேம்படுத்துவதில் தேவைப்படுகிறது. பள்ளித் தலைவரின் பங்குகளையும் பொறுப்புகளையும் வரையறுப்பது, பள்ளித்தலைவர் பெற்றிருக்கவேண்டியவை பற்றிய வடிவமைப்பைப் அறிவித்தல், முதல்வர்கள்/தலைமைஆசிரியர்களைத் தெரிந்தெடுப்பதற்கான வலுவுள்ள, வெளிப்படையான செயல்முறைகளை அறிமுகப்படுத்துதல், பள்ளித்தலைவர்களைப் பதவியில் அமர்த்துதல் திட்டம், மேலும், தொழில்துறையில் முன்னேற்றத்தை நன்கு வரையறுத்த வழிகளுடன் கூடிய தொடர்ச்சியான தொழில்துறை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ஆகியவை இதில் அடங்கும்.
7. பள்ளிகளின் கல்விசார் செயல்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கு முதல்வர்கள்/தலைமையாசிரியர்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளவேண்டும். முதல்வர்கள்/தலைமையாசிரியர்களின் குறைந்தபட்ச பதவிக்காலத்தை கல்வித்துறை முடிவுசெய்யும்.

## 4.14 உயர்கல்வியில் நிருவாகச் சீர்திருத்தங்கள்

கடந்த சில ஆண்டுகளில், துறையின் பிரிவுகள் பன்முகப்படுத்துதலுடன் கூடிய ஒரு முன்நிகழாத பெருக்கத்தை உயர்கல்வியில் இந்தியா கண்டுவருகிறது. துறையின் திட்டமிடப்படாத பெருக்கம் தரத்தை மேம்படுத்துவதிலும், பராமரிப்பதிலும் சவால்களை ஏற்படுத்தியுள்ளன. உயர்கல்வியில் நிருவாகமும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்குமான சிக்கல்கள் ஒன்றோடொன்று பிணைந்துள்ளன. எனவே, துறையின் உட்பிரிவுகளில்

நிருவாகம் மற்றும் ஒழுங்குமுறைச் சிக்கல்கள் பற்றிய கண்ணோட்டத்திற்கு தற்போதுள்ள கட்டுப்பாடுவிதிகள் சூழலுக்கேற்றபடி மாற்றப்படவேண்டும்.

உயர்கல்வியில் பயனுள்ள நிருவாகத்தை உறுதிப்படுத்த கீழ்வரும் கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. புதிய அறிவுப் பகுதிகள்/துறைகள்/புலங்களையும் உலகளாவிய மாற்றங்கள் சூழலில் தேசத்தின் நிலைப்பாட்டிற்கு உதவும் உலகத்தரத்திலான கற்பித்தல் முறைகள், கலைத்திட்டம், மற்றும் மதிப்பாய்வுச் சீர்திருத்தங்களையும் அடையாளங்காண மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்துக்கு உதவ ஒவ்வொரு ஐந்தாண்டிற்குமான ஒரு கல்விசார் வல்லுனர்கள் கொண்ட ஒரு கல்வி ஆணையம் ஏற்படுத்தப்படும்.
2. தொழில்துறைகளிலிருந்தும் முன்னாள் மாணவர்களிலிருந்தும் பிரதிநிதிகளையும் கொண்டு பன்முகப்படுத்தப்பட்ட-சம்பந்தப்பட்ட அனைவரையும்கொண்டவையாக உயர்கல்வி தொடர்பான அரசுக் குழுக்கள் உருவாக்கப்படும். இப்படிப்பட்ட குழுக்களின் அமைப்பிற்கு தேர்வுகளுக்கும் வெளிப்படையான வழிமுறைகள் இருக்கும்.
3. இளங்கலை, முதுகலை, ஆய்வுப்படிப்புகளை ஒருங்கிணைத்த ஒரு பல்கலைக்கழக முறை/அமைப்பு உருவாக முயற்சிகள் எடுக்கப்படும். இதில் பேராசிரியர்கள் இளங்கலை நிலையிலும் முதுகலை நிலையிலும் ஒரே நேரத்தில் பாடங்கள் எடுப்பதால் கற்பித்தலுக்கு ஆய்வுக்கும் இடையே இணைதிறத்தை மேம்படுத்த உதவும். பல்கலைகழகங்கள் அடிப்படையாகவே பல்துறை கழகங்களாக இருக்கும், ஒரு கல்வித்துறை சார்ந்தவையாக அல்ல.

4. இங்கே மீண்டும் வலியுறுத்தப்படும், 1968 மற்றும் 1986/92 ஆகிய முந்தைய கொள்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி இந்திய கல்விப் பணி ( Indian Education Service - IES) என்பதை உருவாக்க அரசு முயலும். மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தை ஊழியர்பிரிவை கட்டுப்படுத்தும் அதிகார அமைப்பாகக் கொண்டதாக IES இருக்கும். IES நடப்பில் வரும்வரை, பல்வேறு மாநிலங்களில் கல்வித் துறையில் கல்விசார் மற்றும் நிருவாகப் பதவிகளை மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து ஒருமுறை மட்டுமான தனிப்பட்ட பணியிட நிரப்புதலை ஒரு இடைக்கால நடவடிக்கையாக எடுக்கப்படும்.

5. வழக்குகளைத் தீர்க்கவும், அரசு மற்றும் தனியார் பள்ளிகள்/நிறுவனங்கள் ஆகியவை பற்றிய மக்கள் குறைகளைச் சரிசெய்யவும் தேசிய அளவிலும் மாநிலங்கள் அளவிலும் சிறப்பு கல்வி தீர்ப்பாணையங்கள் ஏற்படுத்தப்படும். இக்குழுக்களின் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அமர்த்தப்படுவார். குறைந்தபட்ச முக்கிய வழிமுறைகளை மட்டும் பின்பற்றி வழக்குகளை விரைவாகத் தீர்க்க இத்தீர்ப்பாயங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

6. மக்களாட்சி அமைப்புகளையும், நிருவாகம் மற்றும் செயல்பாடுகளையும், விவாதங்கள், கலந்துரையாடல்கள், பன்முகக் கருத்துகளை வலுப்படுத்துவதிலும் மக்களாட்சிக் கருத்துகளைப் பரவலாக்குவதிலும் மாணவர்கள் சங்கங்களின் ஆக்கப்பூர்வமான பங்கை அரசு அங்கீகரிக்கிறது மற்றும் ஊக்குவிக்கிறது. இப்படியிருக்க, கல்விவளாகங்களில் அமைதியைக் குலைக்கும் மற்றும் தடைகள் உண்டுபண்ணும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைப் பார்க்கும்போது அவர்களில் வெளியாட்கள்

அல்லது படிப்பிற்காக குறிப்பிடப்பட்ட ஆண்டுகளையும் தாண்டி படித்துக்கொண்டிருப்பவர்களாலேயே ஏற்படுகிறது என்பது தெரியவருகிறது. மாணவர்களாக இருந்து படிப்பை முடித்தபின்னும் மாணவ அரசியலில் அதிகமாக ஈடுபட்டு கல்விசார் நடவடிக்கைகளில் தடைகள் உண்டுபண்ணுபவர்களையும் வெளியாட்களையும் தடுக்கவும், அவர்கள் விடுதிகளிலிருந்துகொண்டு நிறுவனத்தின் வசதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதையும் தவிர்க்க ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

7. நடைமுறையில் உதவும் ஒரு குறைகள் தீர்க்கும் இயங்கமைப்பை அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் ஏற்படுத்தும். மாணவர், ஆசிரியர் அல்லது நிறுவனத்தின் மீது தண்டனை வழங்கும் செயல்களுக்கு முன் மென்ஸ் ரீய மற்றும் ஆடி அல்டெரெம் பார்டெம் - ஆகிய இயற்கை நீதிக் கொள்கைகளை இவ்வமைப்பு பின்பற்றும்.

8. பல்கலைகழகங்களுடன் இணைக்கபடும் தற்போதுள்ள முறை நீடிக்கும், ஆனாலும், இணைக்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 100ஐத் தாண்டக்கூடாது என்று விதிக்கப்படும். இதனடிப்படையில் தங்களுக்குகீழ் 100க்கும் கூடுதலான கல்லூரிகளை உடைய பல்கலைக்கழகங்கள் மாற்றியமைக்கப்படும்.

9. அரசு உதவிபெறும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வித்தர உயர்வை ஊக்குவிக்கும் செயல்களுக்கான ஊக்கத்தொகையை விதிமுறைகளின்படி வழங்குவது அறிமுகப்படுத்தப்படும். நிதி மற்றும் நிருவாகப் பொறுப்பேற்கும் தன்னாட்சியை உறுதிப்படுத்த எட்டவேண்டிய குறிப்பிட்ட கட்டங்களையும் கொடுக்கப்படும்

காலஅவகாசத்தையும் குறிப்பிடும் தொலைநோக்குத் திட்டங்களை அரசிடம் நிதிபெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் தயாரிக்கவேண்டும்.

## 4.15 உயர்கல்வியில் ஒழுங்குமுறை

கல்வி அமைப்பில் உள்ள பல தேசிய நிறுவனங்கள், அவைகள் தொடங்கிய காலத்தில் எதிர்நோக்கிய தனக்கென்று இருந்த தனிப்பட்ட பணிப்பாணையின்படி பல்வேறு காலக்கட்டங்களில் நிறுவப்பட்டன. காலப்போக்கில், உயர்கல்வி பிரிவில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிகளினால், உயர்கல்வி முறைக்கான தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளுக்கு மிகவும் பொருத்தமானதாக்க ஒழுங்குமுறை வடிவமைப்பை திறனாய்வு செய்யவேண்டிய தேவை இருக்கிறது. உயர்கல்வியில் உள்ள ஒழுங்குமுறை நிர்வாகத்தோடு தொடர்புடைய பல சவால்களை கவனமாக சமாளிக்கவேண்டிய தேவை இருக்கிறது. தன்னாட்சியுரிமைக்கும் பொறுப்புடைமைக்கும் இடையே ஒரு ஆரோக்கியமான சமநிலையை கொண்டுவருதல் அவசியமாகிறது. மாநில அரசுகளும் பல்கலைக்கழகங்களும் தங்களுடைய அதிகார வரம்புக்குள்ளாகவே உயர்கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதில் முக்கியமான பங்கு வகிக்கலாம்.

கீழ்வரும் கொள்கை தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்:

1. தேசிய உயர்கல்வி ஆய்வுஉதவித்தொகை திட்டத்தை நிர்வகிப்பதற்காக ஒரு தனிப்பட்ட இயங்குநுட்பம் அமல்படுத்தப்படும்.

2. மத்திய தரவு சேகரிப்பு, உயர்தர புள்ளியியல் ஆழ்ந்த அறிவுள்ள தொகுத்தல் மற்றும் இணைத்தல் முகைமை, வருவதுரைக்கின்ற பகுப்பாய்வுக்கு பயன்படுத்துகிற

மேலாண்மை செய்தி அமைப்பு, மனித ஆற்றல் திட்டமிடல் மற்றும் வருங்கால திருத்தங்களுக்கான ஒரு மத்திய கல்விசார் புள்ளியியல் முகமை ( Central Educational Statistics Agency - CESA) நிறுவப்படும் . உள்கட்டமைப்பு கிடைக்கும் தன்மை, புதிய கட்டமைப்புகள் மற்றும் மேம்படுத்தல் போன்ற பல்வேறு வரைகூறுகளில் HEIன் பூகோள-இணைத்தலுக்கான தீர்வுகளை உருவாக்கும்.

3. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் கல்வித் தரத்தினை ஒரு குறிப்பிட்ட கால அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றளிப்பு முகமைகளோடு கலந்தாலோசித்து, கண்காணிப்தற்கான அதிகராத்தை உயர்கல்விக்கான அரசு குழுக்களுக்கு வழங்கப்படும்.
4. ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனமும் தனக்கென்று ஒரு இணையதளம் வைத்திருக்கவேண்டும், அதில் சேர்க்கைகள், கட்டணங்கள், ஆசிரியர்கள், திட்டங்கள், தேர்வு முடிவுகள், வேலைவாய்ப்புகள், நிர்வாகம், நிதி, வியாபார கூட்டுகள், மேலாண்மை மற்றும் கல்விசார் மற்றும் பள்ளிக்கல்வி செயல்பாடுகள், நிறுவனம் தொடர்பான தேவையான சரியான செய்திகளை அதிக வெளிப்படைத்தன்மைக்காக வழங்கவேண்டும்.

## 4-16 உயர் கல்வியில் தர உறுதிப்பாடு

போதுமான கட்டமைப்பு வசதிகள் இன்மை, காலிப் பணியிடங்கள், திறமை குறைந்த ஆசிரியர்கள், காலத்திற்கு ஒவ்வாத கற்பிக்கும் முறை, ஆய்வுத்தரங்களின் குறைபாடு போன்ற பல பிரச்சினைகளை பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் எதிர்நோக்கியுள்ளன.

மேலும், இத்துறையில் பரவலான புவியியல், பாலின மற்றும் சமூகச் சமச்சீரின்மையும் உள்ளன. இப்பிரச்சினைகள் உயர்கல்வியின் மோசமான தரத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றன. தர உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, NAAC அல்லது NBAவின் தரச் சான்றிதழை நிறுவனங்கள் பெறுவது இப்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களின் உலகத் தரவரிசையில் ஒரு சில உயர் கல்வி நிறுவனங்களே இடம் பெற்றிருப்பது கவலை அளிப்பதாக உள்ளது. ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் துறைகள், கல்வி நிறுவனச் செயல்பாடு, கற்பிக்கும் ஆசிரியர்களின் நன்மதிப்பு, பணி வழங்குவோரிடையேயான நன்மதிப்பு, கிடைக்கும் வளங்கள், பன்னாட்டு மாணவர்களின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகள் போன்ற பலவற்றின் மதிப்பீட்டு அடைப்படையில் பல்கலைகழகங்களின் உலகத் தர வரிசை அமைகிறது. அண்மையில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் (MHRD), நமது உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசையை நிர்ணயிக்க, தேசிய தரக் கட்டமைப்பு நிறுவனத்தை (NIRF) அமைத்துள்ளது; இதில் பொறியியல், மேலாண்மை, மருந்தியல், கட்டடக் கலை, பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் ஆகியவற்றின் தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

கீழ்க்கண்ட கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. பன்னாட்டளவிலான மதிப்பீட்டு அமைப்பை ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழு உருவாக்கப்படும். இதில் நன்கு செயல்படும் அமைப்புகளைக் கொண்ட நாடுகளின்

மிகச் சிறந்த நடைமுறைகளின் அனுபவங்களைப் பெற்று NAAC மற்றும் NAB நிறுவனங்களை மறுகட்டமைப்பு செய்யவும், பயிற்றுமுறைகள், அளபுருக்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை மறு வரையறை செய்யவுமான ஆலோசனைகளை அக்குழு வழங்கும்.

2. மாணவர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள், அறிவிக்கப்பட்ட தெரிவுகளை மேற்கொள்வதற்கு, தொண்டாற்றும் வலைத்தளத்தின் வாயிலாகப் பொது மக்களுக்கு ஒவ்வொரு நிறுவனத்தைப் பற்றியும் மதிப்பீடு/சான்றளிப்பு விவரங்கள் அளிக்கப்படும்.

### 4.17 **திறந்தநிலை மற்றும் தொலைதூரக் கற்றல்** & MOOC**க்கள்**

திறந்தநிலை மற்றும் தொலைதூரக் கற்றல் (Open and Distance Learning - ODL) என்பது உயர்வான அணுகல் முறை, திறன் மேம்பாடு, அறிவுத்திறன் கட்டமைப்பு, பயிற்சி, பணித்திறன் மற்றும் வாழ்நாள் முழுதும் கற்கும் திறன் ஆகியவற்றை அடைவதற்கான முக்கியதொரு முறையாக அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவில் ODLஇன் கீழ் பதிவு செய்துள்ள ஏறக்குறைய 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு இந்த முறை பெருமளவுக்கு உதவியுள்ளது. தொலதூரக் கல்வி அளிப்பதில் பல்வேறு மாறுபட்ட நிலைமைகள் உள்ளன; பொதுத் துறை மற்றும் தனியார் துறைஆகிய இரு நிறுவனங்களாலும் இவை அளிக்கப்படுகின்றன. தங்கள் பணிகளை விட முடியாதவர்கள் அல்லது ஏதேனும் காரணத்தினால் வழக்கமான வகுப்புகளுக்கு வர இயலாத மாணவர்களுக்கு இவை வழிவகுத்துத் தருகின்றன. தற்போது, திறந்தநிலை மற்றும் தொலைதூரக் கற்றல் என்பது நாட்டில் இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப்

பல்கலைக் கழகம் (IGNOU) மற்றும் உயர்கல்வித் துறையில் மாநிலத் திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள், மேலும் பள்ளிக் கல்விக்கென்று திறந்தநிலைக் கல்விக்கான தேசிய நிறுவனம்(NIOS) ஆகியவை செயல்படுகின்றன. இருப்பினும் தொலைதூரக் கல்வியின் தரம் பற்றிய பிரச்சினைகளும் உள்ளன; ODL அமைப்பில் சீர்திருத்தம் தேவைப்படுகிறது.

மிகவும் குறைந்த செலவில் புத்தம் புதிய பாடங்களை பேரளவிலான திறந்தநிலை நிகழ்நிலைக் கல்வித்துறைகள் (Massive Open Online Courses - MOOCs) இலவசமாக அளிக்கின்றன. பல உயர் கல்வி நிறுவனங்கள்/பல்கலைக் கழகங்கள் தங்கள் வகுப்புகளை திறந்தநிலை கற்றல் தளங்கள் வாயிலாக அளிக்கின்றன. தொடர் அறிவு மேம்பாட்டில் விருப்பம் மற்றும் அதன் தேவை காரணமாக, MOOCsஇன் தேவை எதிர்காலத்தில் மிகுதியாகும் வாய்ப்பு உள்ளது. இளைஞர் விரும்பும் அறிவுசார் செயல்முறைக் கல்விக்கான கற்றல் (SWAYAM) வலைத்தளங்களை நிறுவ MHRD திட்டமிட்டுள்ளது; இதில் பல்வேறு பாடங்களில் பேரளவிலான திறந்தநிலை நிகழ்நிலைப் படிப்புகள் கிடைக்கும். MOOCsஇன் தரங்களை மேம்படுத்த, ஒன்றிணைக்க, ஒழுங்குபடுத்த மற்றும் பராமரிக்க, மேலும் மதிப்பெண்களை அங்கீகரிக்க, மாற்ற, திரட்ட ஓர் இயங்கமைவை உருவாக்குவதற்கான தேவை மிகுதியாக உணரப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. ODL/MOOCகள் அமைப்பில் தரங்களின் மேம்பாடு, ஒழுங்கமைவு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான பொறுப்பை மேற்கொள்ளும் தன்னாட்சி அமைப்பு ஒன்று

நிறுவப்படும். இவ்வமைப்பு ODL/ MOOCகளின் முறையான வளர்ச்சி மற்றும் ஒழுங்கமைவு ஆகியவற்றிற்கான விதிமுறைகள், தரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களைத் தயாரிக்கும். MOOCகள் மூலம் பெறப்பட்ட மதிப்பெண்களை அங்கீகரிக்க, மாற்ற, திரட்ட ஓர் இயங்கமைவையும் இது உருவாக்கும், மற்றும் பட்டங்களை அளிக்கவும் அங்கீகரிக்கவும் செய்யும்.

2. ODL/ MOOCகள் முறையில் படிப்பு மற்றும் கல்வித்திட்டங்களை வழங்கும் எல்லா நிறுவனங்களும், பத்தி-1இல் குறிப்பிடப்பட்டுள்ள தன்னாட்சி அமைப்பினால் தெரிவிக்கப்படும் முறைகள் மற்றும் தரங்களின்படியான, தேசிய மற்றும் உள்ளூர் தேவைகளின் அடிப்படையில், கல்வித்திட்டங்களை உருவாக்கித் தரப்படுத்தும். இதனால் அங்கீகாரம் வழங்கப்பட்டு பட்டம் வழங்கப்படுவதற்கான மதிப்பெண்கள் சேர்க்கப்படும்.

3. ODL / MOOCகளை வழங்கும் எல்லாப் பல்கலைக் கழகங்கள்/நிறுவனங்களின் சான்றளிப்புக்காக ஒரு தர உறுதிப்பாட்டு இயங்கமைவு நிறுவப்படும்; இதனால் ODL / MOOCகளின் படிப்புகள், கல்வித்திட்டங்கள் ஆகியவற்றின் தரம், மேம்பாடு, புதுப்பிப்பு, மறு சீரமைப்பு, நவீன மயமாக்கல் ஆகியவை உறுதி செய்யப்படும்.

4. கற்போர் ஆதரவுச் சேவைகள் எல்லா ODL நிறுவனங்களாலும் அளிக்கப்படும்; இதில் ஆதரவுப் பாடநூல்கள், கலைக் களஞ்சியங்கள், திறந்தநிலை கல்வி வளங்கள் (OERகள்), MOOCகள், 24x7 உதவி மையச் சேவைகள், கற்பித்தல் மற்றும் ஆலோசனைச்

சேவைகள், வலைத்தளக் கருத்தரங்குகள், விவாத மேடைகள், வலைத்தள ஒளிபரப்புகள், நூலகவசதி, நிகழ்நிலை ஆய்வகம், மின் கற்றல் கட்டகங்கள், நிகழ்நிலைக் கல்வித் திட்டங்களை அளித்தல், ஒப்படைப்புகளை அளித்து அவை பற்றிய பின்னூட்டங்களை அளித்தல், நிகழ்நிலைத் தேர்வுகள், முடிவுகளைத் தெரிவித்தல், குறைகளைக் களைதல் ஆகியவை அடங்கும்.

5. திறந்த பள்ளிக்கூட தேசிய நிறுவனம் (National Institute of Open Schooling - NIOS), திறன் வளர்ச்சி & தொழில்முனைவு அமைச்சகத்துடன் இணைந்து பெருமளவிலான தொழிற்கல்வித் தேவையை நிறைவு செய்திட தன்னைத்தானே மறுவரையறை செய்து கொள்ளும். NIOSஇன் மேலாண்மை, கண்காணிப்பு, குறைதீர்ப்பு ஆகியவை பற்றிய பிரச்சினைகளுக்கு உரியமுறையில் தீர்வு காணப்படும்.

4.18 **கல்வியின் பன்னாட்டுமயமாதல்**

உலகமயமாக்கல் மேலும் நவீன அறிவு மற்றும் அதன் பயன்பாடுகளைக் கொண்ட இக்காலகட்டத்தில் பன்னாட்டு மயமாதல் தவிர்க்க முடியாதது ஆகும். பன்னாட்டுமயமாதலில், மாணவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இடம் பெயர்தல்; கல்விசார் அமைப்புகள் மற்றும் பண்பாடுகளின் ஏற்றுமதி/இறக்குமதி; ஆராய்ச்சி ஒத்துழைப்பு; அறிவுப் பரிமாற்றம் மற்றும் திறன் கட்டமைப்பு; கல்வித்திட்டம் மற்றும் கற்றல் வெளிப்பாடுகளின் பன்னாட்டுமயம்; கல்வித்திட்டங்களின் எல்லை-

தாண்டிய வெளிப்பாடு; மற்றும் இணைய வழி இயக்கம் இலக்க முறைக் கற்றல் ஆகியவையும் அடங்கும்.

உயர்கல்வியின் பன்னாட்டுமயமாதல் என்பது பல வாய்ப்புகளை அளிக்கிறது; தேசிய மற்றும் பன்னாட்டுப் பார்வை மிகுதியாதல் மற்றும் HEIகளின் தோற்றம், உயர்கல்வியை மிகுதியாக வழங்குதல், மாணவர்களுக்கு அதிகமான வாய்ப்புகள், அறிவுப் பொருளாதாரத்திற்கு ஆதரவு, இரட்டைப் பட்டங்கள் பெறுதல் மேலும் புதிய கல்விச் சூழல்களின் விரிவாக்கம் மற்றும் உருவாக்கம் ஆகியவை இதில் அடங்கும்.

கீழ்க்கண்ட கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. உலகின் மிகச் சிறந்த 200 பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில, இந்தியப் பல்கலைக்கழகங்களோடு இந்தியாவில் கூட்டுச் செயல்பாடு மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும். தேவைப்பட்டால் இதற்காகச் சட்டம் இயற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அயல்நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்று இந்தியாவில் படிக்கும் இந்திய மாணவர்களுக்கு அதன் பட்டத்தை வழங்கவும் விதிகள்/ஒழுங்கு முறைகள் வகுக்கப்படும்; இந்தப் பட்டங்கள் அந்த நாட்டிலும் மதிப்புடையதாக விளங்கும் வகையில் இருக்கும்.

2. பன்னாட்டுமயம் என்பது இரு-வழிச் செயல்பாடு என்பதால், தேவைப்பட்டால், உரிய விதிகளில்/சட்டங்களில் தகுந்த வரைவுகள்/திருத்தங்கள் இயற்றி வெளிநாடுகளில் இந்திய நிறுவனங்களும், கல்விக்கூடங்கள் நிறுவ அனுமதிக்கப்படும்.

3. அயல்நாடுகளில் இந்திய மாணவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதை அதிகரிக்க, இந்திய HEIகள் மிகச் சிறந்த உலக நிறுவனங்களுடன் ஒப்பிடத்தக்க வகையில் பன்னாட்டு அளவிலான கல்வித்திட்டங்களை உருவாக்க ஊக்குவிக்கப்படும். பல பன்னாட்டு மாணவர்கள் இந்தியப் பண்பாடு மற்றும் இந்தியா தொடர்பாகக் கற்பதற்கு இங்கு வருவதால், பன்னாட்டு மாணவர்களின் தேவைக்கேற்ப இத்துறைகள் மேம்படுத்தப்படும்.

4. மொழிக் குறைபாடு மற்றும்/அல்லது உயர்மட்ட படிப்புகளுக்கான கல்வித்திட்டம் காரணமான இடர்களைப் போக்குவதற்காக, பன்னாட்டு மாணவர்களுக்கு மொழி மற்றும் இணைப்புப் படிப்புகளை HEIகள் அளிக்கும்.

5. இந்திய HEIகளில் மிகுதியான அயல்நாட்டு ஆசிரியர்கள் இணைவதை ஊக்குவிக்க, இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் வெளிநாட்டு ஆசிரியர்கள் சேர்வதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மீள்பார்வை செய்யப்படும். அயல்நாட்டு மாணவர்கள்/ஆசிரியர்கள், விசா, பதிவு/தங்கும் கால நீட்டிப்பு மற்றும் வரி விதிப்பு தொடர்பான விதிகள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றில் எதிர்கொள்ளும் கவலைகளும் இடர்களும் முறையாகத் தீர்க்கப்படும்.

6. அரசு நிதி பெறும் HEIகளுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை ஒதுக்குவதற்கான கூறுகளில் ஒன்றாகப் பன்னாட்டுமயமாதல் சேர்க்கப்படும்.

7. ஏற்புடைமை/அங்கீகரிப்பு/சான்றளிப்பு/HEIகளின் தர உறுதிப்பாடு மற்றும் கல்வித் திட்டங்கள் ஆகியவற்றில் கட்டுப்பாடான, கடுமையான நம்பத்தகுந்த அமைப்பைக் கொண்டுள்ள நாடுகளுடன் அரசு பேச்சுவார்த்தையைத் தொடங்கும். அத்தகைய நாடுகளின் குழுவை அமைத்து, அக்குழு உறுப்பினர் நாடுகளின் உயர்கல்வி நிறுவன்ங்களால் வழங்கப்படும் எல்லா கல்வித் தகுதிகளையும் தங்கள் நாடுகளில் அங்கீகரிக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

8. கல்வித் தகுதிகளை, ஆண்டு-அடிப்படையிலான அங்கீகரிப்பிலிருந்து மதிப்பு-அடிப்படையிலான அங்கீகரிப்பாக, படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4-19 உயர் கல்வியில் கற்பிக்கும் ஆசிரியர்களின் வளர்ச்சி

உயர்கல்வி அமைப்பு விரைந்து விரிவடைந்து வரும் நிலையில், கற்பித்தல் மற்றும் கற்பிப்போரின் தரம் மேம்பாடு அடைவது முக்கியமான ஒன்றாகும். தரமான கல்வியை அளிக்கும் முயற்சியில், கற்பித்தல் தொழிலில் மிகச்சிறப்பான திறன் கொண்டோர் இதில் சேருவதை உறுதிப்படுத்துவதுடன், கற்பித்தலில் ஈடுபடும் முன்னர் அவர்கள் தொடக்க ஆயத்தமும், தொடர்ந்து தொழிலில் வளர்ச்சியும் பெறவேண்டும். பல்கலைக் கழகத்தின் திறமையான மேலாண்மையானது பெருமளவுக்கு மூத்த மேலாளர்களின் தொழில் திறமையிலும் மேலாண்மைத் திறனிலுமே அடங்கியுள்ளது. துணை வேந்தர்கள், பதிவாளர்கள் மற்றும் மூத்த மேலாண்மை ஊழியர்களைப் பணியமர்த்தும் தற்போதைய

அமைப்பு HEIகள் நன்கு செயல்படும் தன்மையைப் பாதிக்கும் பிரச்சினைகளையே கொண்டுள்ளது. கல்வித் துறைக்கு, தரமான தலைமைப் பண்பு கொண்ட, சிக்கலான மேலாண்மைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வல்லமையுடையவர்கள் தேவை.

கீழ்க்கண்ட கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. புகழ்பெற்ற பன்னாட்டுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களால் பின்பற்றப்படும் பணிநியமனம், பதவி உயர்வு மற்றும் நிலைத் தன்மைக்கான செயல் முறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வல்லுநர்களைக் கொண்ட சிறப்புப் பணிப்பிரிவு அமைக்கப்படும் மேலும் HEIகளில் அறிவுக்கூர்மை மற்றும் கல்விச் சிறப்புகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனையை அது வழங்கும்.

2. கற்பித்தல் பணியில் ஈடுபட திறன்வாய்ந்த இளைஞர்களை ஈர்ப்பதற்கான தேசிய அளவிலான முயற்சி மேற்கொள்ளப்படும். திறமைமிக்க இளைஞர்களைக் கற்பித்தல் தொழிலில் கவர்வதற்கு, M.Phil & Ph.D படிக்கும் ஆராய்ச்சி செய்வோரைப் பணியில் அமர்த்தி, கல்வி உதவியாளர்கள் மற்றும் கல்வி இணையர்கள் என்னும் பதவிகள் அவர்களுக்குத் தரப்படும்.

3. புதிதாகப் பணியில் சேரும் ஆசிரியர்களுக்கு 3-6 மாதங்கள் வரையிலான அறிமுகக் கல்வித் திட்டத்தை வழங்கிட தேசிய மற்றும் மாநிலப் பயிற்சிக் கழகங்கள் அமைக்கப்படும். புதிதாக ஆசிரியப் பணியில் சேரும் ஒருவர், உயர் கல்வி நிறுவனங்களில் முறையாக ஆசிரியப் பணியை மேற்கொள்ளும் முன்னர், கற்பித்தலில்

சான்றிதழ் பெறுவது கட்டயமாக்கப்படும். இந்த அறிமுகத் திட்டத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி முறைகள் (திடீர் வகுப்புகள், கூட்டாகக் கற்றல், தனிப்பட்ட அணுகுமுறை), ICT பயன்பாடு, கல்வித்திட்டக் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பு, பாலின மற்றும் சமூக பன்முகத் தன்மை பற்றிய கூருணர்வுத் திறன், பணி சார் நன்னெறிகள், தமது ஆய்வுக் களத்தில் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் வளர்ச்சிகளை இற்றைப்படுத்தல் போன்றவை அடங்கும். அறிமுகப் பயிற்சியைத் தொடர்ந்து அவரது பல்கலைக் கழகத்தில், அவரது கல்வி நிறுவனத்தின் பண்பாட்டைக் கற்பதற்கும் அவரது பங்கு மற்றும் பொறுப்பு ஆகியவற்றை அறியவும் உதவும் பொருட்டு, 4-6 வாரங்களுக்கான நெறிப்படுத்தல் நிகழ்வு நடைபெறும்.

4. தொழிநுட்ப வளர்ச்சிகள், அறிவின் புதிய பரிமாணங்கள் மற்றும் மாறும் மாணவர் தோற்றுருவம் ஆகியவை காரணமாக ஆசிரியரின் தோற்றுருவம் பெரும் மாற்றத்தை அடைகிறது. மாற்றமடைந்த இந்நிலையில், கற்போர் மற்றும் ஆசிரியர்களின் பங்கு மீள்வரையறை செய்யப்படும்; சுயமாகக் கற்றல், நடமுறை மற்றும் கூட்டுக் கற்றல் கூறுகள் ஆகியவை இணைந்த மாதிரிக் கல்வியியலை மேம்படுத்த இது உதவும். மதிப்பீடு மற்றும் தேர்வு முறைகளிலும் கூட மாற்றங்கள் தேவைப்படும்.

5. பொது நிதியில் நடத்தப்பெறும் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தை உறுதிப்படுத்த, தோழமை மீள்பார்வை உட்பட ஆசிரியரின் கல்விச் செயல்பாட்டை மதிப்பீடு செய்வதற்கான இயங்குமுறை மேற்கொள்ளப்படும்.

6. வல்லுநர்களைப் பிற புலங்களிலிருந்து, தொழிற்சாலைகள் மற்றும் அரசுத் துறை போன்ற பிற துறைகளிலிருந்து, ஆசிரியத் துறைக்கு (மற்றும் இதற்கு நேர்மாற்றாகவும்) உட்புகவும் வெளியேறவும் அனுமதித்து ஓர் இணை ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பும் வழங்கப்படும்; இதற்கேற்ப தகுதியான தெரிவு முறை மற்றும் பணியமர்த்தும் கொள்கைகளுக்கான உரிய இயங்குமுறை மேற்கொள்ளப்படும்.

7. HEIகளின் மூத்த ஆசிரியர்கள் மற்றும் மேலாண்மைக்கு குறுகிய-காலத் திட்டங்களை அளிப்பதற்கான தலைமைப் பண்பு வளர்ச்சி மையங்களை அமைத்திட புகழ்வாய்ந்த HEIகள் ஊக்குவிக்கப்படும்; உயர்நிலைத் தலைமைப் பதவிகளுக்குத் தெரிவு செய்து பதவியில் அமர்த்த இது கட்டாயமாக்கப்படும். இத்தலைமைப் பண்புத் திட்டங்களில் முடிவெடுக்கும் கட்டகங்கள், கூருணர்வுத்திறன் கட்டகங்கள், நிதிச் செயல்முறைகள், கல்வி, நிதி மற்றும் மனித வளம், பிணக்குத் தீர்வு, நலிவடைந்த பிரிவினருக்கான கூருணர்வுத் திறன் போன்றவை அடங்கியிருக்கும்; நிர்வாக மற்றும் மேலாண்மைத் திறன்களை இது மேம்படுத்தும்.

## 4.20 ஆராய்ச்சி, புதுமை காணல் மற்றும் புதிய அறிவு

கடந்த பத்தாண்டுகளில், ஆராய்ச்சி வெளியீடுகளில் இந்தியாவின் மொத்த பங்கு உயர்ந்துள்ளதெனினும், ஆராய்ச்சியின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. ஒரு சில சிறப்பானவற்றைத் தவிர்த்து, இவ்வமைப்பு மிகச் சதாரணமாகவே உள்ளது. ஆராய்ச்சி

மூளை கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும், நமது நாட்டின் நிறுவனங்களில் உகந்த ஆய்வுச் சூழல் இல்லாமையால் வெளிநாடு செல்வதையே விரும்புகின்றனர். உயர்தர ஆராய்ச்சியினை மேம்படுத்த நாட்டில் உகந்த சூழலை உருவாக்க வேண்டும். உயர்கல்வியுடன் கூடவே நிர்வாக மற்றும் கல்விச் சூழலை உருவாக்கி, ஆராய்ச்சி மற்றும் புதுமை காணும் நிலைமையை நாட்டில் ஏற்படுத்தித் தர வேண்டும். மென்பொருள் துறையில் இந்தியா முன்னேறி வரும் நிலையில், அறிவுசார் சமூகத்துக்குத் தேவைப்படும் புதிய கற்றல் பிரிவுகளின் உருவாக்கத்தை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

கீழ்க்கண்ட கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. ஆராய்ச்சியில் சிறப்புத் தன்மையை மேம்படுத்தவும் புதுமை காணலை ஊக்குவிக்கவும், அடுத்த பத்தாண்டுகளில், பொதுத் துறை தனியார் துறை ஆகிய இரண்டின் வாயிலாகவும் உயர்கல்விப் புலத்தில் குறைந்தது 100 புதிய சிறப்பு நடுவங்கள்/துறைகள் நிறுவப்படும். இத்தகைய சிறப்பு நடுவங்களை நிறுவுவதற்குத் தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனம் நடத்துவோர் மற்றும் கொடையாளிகள் ஆகியோருக்கு உரிமை அளிக்கப்படும்.

2. அடிமட்டத்திலுள்ள உண்மையான பிரச்சினைகளை எதிரொளிப்பதற்கு, கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்திற்கான தேசியப் பல்கலைக்கழகத்தின் (National University of Educational Planning and Administration - NUEPA) ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல் பற்றிய, தெளிவுமிக்க மறுபுத்தாக்கம் மேற்கொள்ளப்படும்.

3. இந்தியாவின் மென்பொருள் வலிமையை ஒருங்கிணைக்கவும் வலிமைப்படுத்தவும், புதிய அறிவுத்துறைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை உருவாக்கவும், உயர்கல்விப் பாடத்திட்டத்தில் இப்புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4. புதுமைகாணல், படைப்புத்திறன், மற்றும் தொழில்முனைப்பு ஆகியவற்றை மேம்படுத்த, அடுத்த 5 ஆண்டுகளில், HEIகளில், 100 அடைகாப்பு நடுவங்கள் நிறுவப்படும்.

5. பல்துறை ஒருங்கிணைவு ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் சிறப்புக் கவனம் செலுத்திப் புத்தறிவு பெறுவதற்குத் தேவைப்படும் மனித வளங்களை வளர்ப்பதற்கு, பன்னாட்டுக் கூட்டுறவுகள் மற்றும் வலையமைப்புகள் மேம்படுத்தப்படும்.

## 4.21 கல்விக்கான நிதி ஒதுக்கீடு

இந்தியாவைப் பொறுத்தவரை, கல்வி என்பது பொதுமக்கள் நலன் சார்ந்ததாகக் கருதப்படுகிறது; மேலும் இத்துறையில் பெரிய அளவிலான பொதுமக்கள் முதலீடு தேவைப்படுகிறது. தனியார் மயமாக்கப்பட்ட கல்வி அமைப்புகளைப் பெரிதும் சார்ந்துள்ள நாடுகள் பொருளாதார மற்றும் சமூக அளவில் பின்தங்கியுள்ளதைக் காட்டும் சான்றுகள் பல உள்ளன; எனவே இதனால் இலாபத்தை விட இழப்பே மிகுதி. மாறாக, கல்வியைப்

பொதுமக்கள் நலன் சார்ந்ததாகக் கருதும் நாடுகள் பெருமளவு சமூகப் பலன்களை நீடித்த அளவில் பெறுகின்றன. முந்தைய 1968 மற்றும் 1986/92 தேசியக் கொள்கைகள், கல்விக்கான தேசியச் செலவாக 6% GDPஐப் பரிந்துரை செய்தன. இருப்பினும், கல்விக்கு என உண்மையான செலவு தொடர்ந்து குறைவாகவே இருந்து வந்துள்ளது, அண்மை ஆண்டுகளில் இது 3.5% அளவுக்கு இறங்கியுள்ளது. விரும்பிய இலக்கை அடைவதற்கு, கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டிய தேவையை இது காட்டுகிறது.

கீழ்க்கண்ட கொள்கை முனைவுகள் எடுக்கப்படும்:

1. நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் குறைந்தது 6% GDP என்னும் கல்வித்துறை முதலீட்டுக்கு முன்னுரிமை கொடுத்து இலக்கை அடைய, அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

2. அரசு முயற்சிகளுக்கு உதவும் வகையில், தொண்டுள்ளம் படைத்தோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் போன்ற தனிப்பட்டோரின் கல்வி முதலீடுகள் ஊக்குவிக்கப்படும். வரிச்சலுகை மற்றும் கட்டமைப்பு வரையறையில் கல்வியைச் சேர்ப்பது போன்ற சலுகைகளை அளித்து தனிப்பட்டோரின் கல்வி முதலீட்டை அரசு அதிகரிக்கும். பொதுவாக, மையமான நடவடிக்கைகளுக்கு பொது நிதி தொடரும், பிற செயல்பாடுகளுக்குத் தனியார் நிதி பயன்படுத்தப்படும். நிதி ஆதாரங்களை ஏற்படுத்த, கல்வி நிலையங்களில், தனியார் நிதி, மற்றும் R&Dக்கான FDI, மேலும் பிற தர மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகிய முக்கிய உத்திகள் கடைபிடிக்கப்படும்.

3. பெரும் முதலீடுகள் தேவைப்படும் புதிய நிறுவனங்களை அமைப்பதற்குப் பதிலாக, தற்போதுள்ள நிறுவனங்களின் திறனை விரிவாக்கம் செய்ய அரசு முன்னுரிமை தரும்.

4. அரசு நிதியால் நடத்தப்பெறும் HEIகள், தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள, பழைய மாணவர் நிதி உதவி, அறக்கொடை நிதி உதவி, நலிந்தோருக்கு நிதியுதவி அளிக்கும் அதே நேரத்தில் கட்டண உயர்வு மற்றும் தனியார் முதலீடு போன்ற பிற வாய்ப்புகளை மேம்படுத்தும் வழிகளைக் காண வேண்டும்.

5. பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கான தற்போதுள்ள கல்விக்கடன் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்த, இத்திட்டத்தில் மாற்றம் செய்து, குறைந்த வட்டி, திருப்பிச் செலுத்த தற்போதுள்ள ஓராண்டிலிருந்து / இரண்டு ஆண்டு உயர் கால அவகாசம், போன்ற ஒத்திசைவான தளர்ச்சி மிக்க வசதிகள் செய்து தரப்படும்.

6. சிறப்புத் தன்மை மற்றும் திறமையை ஊக்குவிக்க, உயர் கல்வி நிறுவனங்களில் கல்விச் செயல்பாட்டுடன் இணைக்கப்பெற்ற நிதி உதவி நடைமுறைப்படுத்தப்படும்.

# இயல்-5

## நிறைவேற்றுதலும் கண்காணித்தலும்

தேசிய கல்விக் கொள்கை, 2016 பல புதிய வழிகாட்டுதல்களைத் தந்துள்ளது மற்றும் முந்தைய 1968, 1986/92 கல்விக் கொள்கைகளின் தொடர்ச்சியாகவும் அமைந்துள்ளது. குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் செயல்முறை உத்திகளை உண்மையில் கொண்டுவந்து கல்வியில் மாற்றங்களை விளைவிக்க நடுவண் மற்றும் மாநிலங்கள் கூட்டாட்சி முறையில் ஒன்றிணைந்து பணியாற்றுவது முக்கியம்.

கல்வித்துறையில் பல்வகைப் பங்கேற்பாளர்களும் ஈடுபட்டுள்ளனர்; ஒவ்வொருவரும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கொண்டுள்ளனர்; இதனால் எளிதாக அணுகும் வாய்ப்பு, சமநிலை உறுதிப்பாடு, கல்வியின் எல்லா நிலைகளிலும் தர மேம்பாடு, நமது மாணவர்களை உண்மையான உலகக் குடிமக்களாக மாற்றுதல், உரிய அறிவைப் பெறுதல், அறிவு சார் சமூகத்தின் அறைகூவல்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் பெறுதல் ஆகிய உயர் நோக்கங்களை அடைய இயலும்.

ஏற்கனவே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வழிகாட்டுதலுக்கும் செயல்பாட்டுப் பணிச்சட்டத்திற்கான (Framework For Action - FFA) விரிவான நடைமுறை உத்தி, கொள்கையைத் தொடர்ந்து வரும். கொள்கையில் கூறப்பட்டுள்ளவை கடினமானவையோ அல்லது நெகிழ்ச்சித்தன்மை அற்றவையோ அல்ல; விரும்பப்படும் வழிகாட்டுதலைக் காட்டுவதே ஆகும். உருவாகும் நிலைமைகளுக்கு ஏற்ப, பல்வகை விருப்பங்கள் மற்றும் உள்ளூர் நிலைமைகளுக்குத் தகுந்த வகையில் ஓரளவு நெகிழ்ச்சித்தன்மை எதிர்பார்க்கப்படும்; இல்லாவிடில் நடைமுறைப்படுத்தல் என்பது கடினமானதாகவோ அல்லது இயலாததாகவோ ஆகிவிடும்.

பயன்தரும் வகையில்நடைமுறைப்படுத்துவதற்கான இயங்குமுறை இல்லாத காரணத்தால், கடந்த காலக் கொள்கைப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் போனதற்கான சான்றுகள் போதுமானவை உள்ளன. இத்தகைய நிலையைத் தவிர்ப்பதற்கு, வட்டார, சமூக மற்றும் பண்பாட்டுத் தேவைகளுடன் ஒத்துப்போகும் வகையில் செயல்பாட்டுப் பணிச்சட்டத்தினை (FFA) ஒவ்வொரு மாநிலமும் யூனியன் பகுதியும் இயற்றுவது விரும்பத்தக்கதும் உரியதும் ஆகும். இலக்குகளைப் பெருமளவு அடைவதற்கும், விரும்பத்தக்க தரமான விளைவுகளைப் பெறுவதற்கும் உரிய, தெளிவான செயல்பாட்டு முறைகளுடன் நிர்வாகச் செயல்முறையை வகுக்கும் நிறுவன ஏற்பாடுகளைச் செய்வது இதனால் கட்டாயமாக்கப்படும்.

மக்களாட்சி முறையிலான பரவலாக்கம் மற்றும் மிகுதியான சமுதாயப் பங்கேற்பு உள்ள நிலையில், இயங்குமுறை உத்திகளைக் குறிப்பிடுதல் காரணமாக அடிமட்ட அளவில், ஒவ்வொரு மாவட்டமும் ஒன்றியமும் தமக்கேயான FFAஐ உருவாக்குவதற்கு வழி உண்டாகும் என்பது முக்கியமானதாகும்.

இதே போன்று, ஒவ்வொரு கல்வி நிறுவனமும் நுண்-மட்ட செயல்முறைத் திட்டம் ஒன்றை உருவாக்கும் என்பதும் முக்கியமானதாகும்.

நிதி ஆதாரங்களே எப்போதும் வெளிப்பாடுகளில் திறனைக் கட்டுப்படுத்தும் அறைகூவலாக உள்ளது; அனைத்து அரசு இயந்திரங்கள், தனியார் துறை, பிற அரசு-சாரா முகமைகள் மற்றும் நாடு முழுதும் கல்விக்கான ஆதரவு வளத்தை அளித்து தேசியப் பொறுப்புக்குத் தோள் கொடுக்கும்.

எனவே, பணப்-பயன் மற்றும் கணக்கீட்டுப் பண்புகள் ஆகியவை கல்வி அமைப்பில் வழிகாட்டியாகச் செயல்படுகின்றன.

கட்டமைப்பு நடைமுறைப்படுத்தலை சுட்டிக்காட்டும் வேளையில், கல்வி மற்றும் குழந்தை கவனிப்பு, ஊட்டச்சத்து, உடல்நலன், விளையாட்டு, நல்வாழ்வு, நீர் ஆதாரங்கள் போன்ற தொடர்புடைய சேவைகள் ஆகியவற்றுக்கு இடையில் தகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளிப்பாடுகளில் பொதுதன்மை உறுதி செய்யப்படும். கல்விக்கும் பிற துறைகளுக்கும் இடையேயும், மேலும் உரிய பல்வகை முகமைகள் மற்றும் செயல்படுவோர்களுக்கு இடையேயும் பெருமளவுக்கான ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. இதற்கேற்ப, உரிய ஒருங்கிணைப்பு இயங்கமைவுகள் உருவாக்கப்படும்.

கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளுதல்; உரிய கண்காணிப்பு முறைகள், இயங்கமைவுகள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றைக் கண்டறிய ஒவ்வொரு இயக்கப் பிரிவும் பெரு முயற்சி மேற்கொள்ளும்; இதனால், அடையப்பட்ட வெளிப்பாடுகளை காலந்தோறும் மதிப்பீடு செய்தல், ஒவ்வொரு செயல்பாட்டின் வெளிப்பாட்டை மதிப்பீடு செய்தல் ஆகியவை நடைபெறும். மாநில மற்றும் நடுவண் அரசுகளில், நுண்ணிய அளவிலிருந்து பெரிய அளவிலானவை வரை கண்காணிப்பு செய்யப்படும். இதனால் இடைநிலையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான முறையான செயல் முறைகளுக்கும், உயரளவு முடிவுகளை அடைய நடைமுறை உத்திகளின் சீராய்வுக்கும் வழியுண்டாகும். நோக்கத்தை உணரவும், கொள்கைக் குறிக்கோள்களை அடையவும் தவறுகின்ற வகையிலான தடுப்புகளையும் இது நீக்கும்.

மேற்கூறியவை தவிர்த்து, நமது நாட்டின் பரப்பு, பன்முகத்தன்மை மற்றும் அளவுகளைக் கொண்டு முடிவான கல்வி துணைக்-கட்டமைப்புகள் இயங்கும்; மற்றும் அறிவின் வலிமையான தன்மை மற்றும் தகவல் அடிப்படையிலான சமூகம் காரணமாக பல அறைகூவல்கள் தொடர்ந்து ஏற்படும்; இதனால் காலந்தோறும் மீள்பார்வை செய்வது தேவைப்படுகிறது. எனவே, தேசிய மற்றும் உலகளாவிய மனப்பாங்குகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில், கொள்கையின் ஐந்து-ஆண்டு காலமுறை மீள்பார்வை மேற்கொள்ளப்படும்.